
கல்கி
KALKI 5-10-75 75 காசு


உனக்கு ட்ரூ பிடிக்குமா?
யாருக்குதான் பிடிக்காது?
TRUE
NICE
BISCUITS
TRUE
TRUE
ட்ரூ நீஸ். சிறந்த சிற்றுண்டி. தேங்காய், பால், சர்க்கரை கலந்த சுவைமிகுந்த பிஸ்கட்டுகள். விருந்தினர் விரும்புவர். விருந்தும் சிறக்கும். உறவினரும் நண்பர்களும் வரும்போது தயங்காமல் தரலாம்.
இந்தியாவில் நவீனமான தொழிலகத்தில் சுகாதார முறைபடி தரமாக தயாரிக்கப்படுபவை.
ட்ரூ பிஸ்கட்டுகள் மொறுமொறுப்பானவை. புதுமணம் குன்றுமல் ருசி மிக்கவை.
TRUE
ட்ரூ
-பகிர்ந்திட விரும்பும் தரமிகுசுவை
ஆரோபுட் பிரைவேட் லிமிடெட், ஆரோவில் — பாண்டிச்சேரி
HT-AFP-8020

ரூபி டஸ்ட் டீயில் மட்டுமே காணும் மூன்று சிறப்பம்சங்கள்

1. கனத்தில் கிட்டிடும் பானம்
2. தருவதும் செறிந்த மணம்
3. பெருவதோ கோப்பைகள் அதிகம்



கெட்டியான டிகாக்ஷன் மட்டுமல்ல; சிக்கனத்தையும் சிறப்பம்சமாய்க் கொண்ட ஒரே டீ-லிப்டன் ரூபிடஸ்ட். முழுமையான தேநீரின் மறு பெயர்தான் லிப்டன் ரூபி டஸ்ட்.

லிப்டன் ரூபி டஸ்ட்

ஒவ்வொரு பாக்கெட்டுக்கும் செறிவு மிக்க அதிகக்கோப்பைகள்

LRDC-10 TAM

OBH-5255 TH-

ரவிக்குக் காயம்
படும்போது



ரவியின் அன்னை, நோய் தொற்ருமல் அவனைப் பாதுகாக்க, BAND-AID BRAND டிரஸ்ஸிங்குகளையே நம்புகிருர்.

காயங்கள் திறந்திருந்தால் தொற்று நோய் பரவக்கூடும். எனவேதான், விவேகமுள்ள தாய்மார்கள், காயங்களைப் பாதுகாத்து ஆற்றுவதற்கு பாண்டு-எய்ட் பிராண்ட் டிரஸ்ஸிங்குகளை மட்டுமே நம்புகிருர்கள். பாண்டு-எய்ட் பிராண்ட் டிரஸ்ஸிங்குகள் நோய்க் கிருமி தொற்ருமல் காயங்களைக் காக்கின்றன. அவற்றிலுள்ள நிரூபணமான ஆன்டிசெப்டிக் மருந்து மெர்க்கியூரோக்ரோம், பிளவுபட்ட சருமத்துக்கு இதமளித்து ஆற்ற உதவுகிறது.


பாண்டு-எய்ட்
பிராண்ட்
டிரஸ்ஸிங்குகளை
ஜான்ஸன் & ஜான்ஸன்
மட்டுமே தயாரிக்கிருர்கள்.

Johnson & Johnson*



மெர்க்கியூரோக்ரோம்
மருந்து கலக்கப்பட்டது.


* Trademark © J&J 75



ஒரு நாள்
கறந்த பால்
வராதபோது திருமதி பாலசந்திரன்
அமுல் மில்க் பவுடர் வாங்க நேர்ந்தது.



ஆனால்
இப்பொழுது அவர்
அமுல் மில்க்
பவுடரை
தவறாமல்
வாங்குகிறார்.



திருமதி பாலசந்திரன் கறந்த பால்தான் பால் பவுடரைவிட மிகவும் சிறந்தது என்று ஒரு காலத்தில் நினைத்திருந்தார். ஆனால் ஒரு நாள் கறந்த பால் கிடைக்கவில்லை. அன்று அமுல் மில்க் பவுடர் உபயோகித்தபோது வியப்புற்றார்! ஒரே ஒரு டின் அமுல் மில்க பவுடர் அவரது கருத்தையே மாற்றி விட்டது. அது உங்கள் கருத்தையும் மாற்றி விடும்.

ஒரே ஒரு முறை அமுல் மில்க் பவுடர் உபயோகித்தாலே, இது எவ்வளவு சிறந்தது. சௌகரியமானது என்பது தெரிந்து விடும். இது தூய்மையாக, முழுமையாக, புதுமையாக பால் பவுடர் வடிவில் வருகிறது. இது நிமிடங்களில் கரைந்து தயாராகி விடுகிறது. இது மிகவும் வசதியானது. காப்பிக்கும் டீக்கும் அதிக இன்சுவை அளிக்கிறது. இதிலிருந்து சிறந்த கெட்டித் தயிரும், சுவை மிக்க தின்பண்டங்களும் தயாரியுங்கள். க்ரீமுக்குப் பதிலாகப் பயன்படுத்துங்கள். எல்லாமே இன்சுவை கொழிக்கும்.


திருமதி பாலசந்திரன் போன்ற நவீன இல்லத்தரசிகள் இன்று அமுல் மில்க் பவுடரை நம்பி இருப்பதற்குக் காரணங்கள் உண்டு. அமுல் மில்க் பவுடர்—இந்த ஒரே பால்தான் புத்தம் புதிதானது; தூய்மையானது; இன்சுவையுள்ளது; வசதியானது; எளிதில் கிடைப்பது!

அமுல்
மில்க் பவுடர்

வீட்டிலே
பால் பண்ணை
இருப்பதற்கு ஈடு!

விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோ-ஆப்பரேட்டிவ் மில்க் மார்க்கெட்டிங்
பெடரேஷன் லிமிடெட், ஆனந்த்.

ASP-AMP-27



...அழகான ஆடைகளும் அதற்கு உதவின என்று !

MAFATLAL GROUP

நிச்சயமாக, மபத்லால் க்ரூப் அளிப்பவை நேர்த்தியான துணிமணிகள்தான் !

-M. 458 TM



கல்கி


ராக்ஷஸ
புரட்டாசி 19

அக்டோபர் 5
1975

“கல்கி”யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.




அதேபோல இது இல்லை!



கோத்ரெஜின்

புதிய டர்கிஷ் பாத்



அமோகமான சோப், நம்பமுடியாத விலையில்

Rs.1·10 மட்டுமே (வரிகள் தனி)

கோத்ரெஜ் மட்டுமே அளிக்கக் கூடிய சோப் அபரிமிதமான நுரை...நீடித்த உபயோகம்...புத்துணர்ச்சியளிக்கும் நறுமணம் மற்றும் சிக்கன விலை.

கோத்ரெஜின் டர்கிஷ் பாத்

Interpub/GTB/1/75/TAM

பழத்தைப் பறிக்க மரத்தை வெட்டுவதா?

''பொருளாதார ஏகபோக்கியத்தைக் கட்டுப்படுத்த எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் இங்கு கலப்புப் பொருளாதாரம் தொடரும் என்றே நினைக்கிறேன். சகலத்தையும் அரசுடைமையாக்க வேண்டும் என்பதற்காகவே அரசுடைமையாக்குவதில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் தேச நலனுக்கு உகந்தது என்று தோன்றினால் அரசுடைமையாக்கத் தயங்கமாட்டோம்.''

இது ஸ்ரீமதி இந்திரா அவர்கள் ஜெர்மன் இன்டர்நேஷனல் பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் ஒரு பகுதி. (ஜூன் 1975) இதன் பிறகு இதே கருத்தை அவர் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்திப் பேசியிருக்கிறார். அமைச்சர் திரு சி. சுப்பிரமணியமும் இதையே கூறி வருகிறார்.

ஆனால் ஆளும் காங்கிரஸ் தலைவர் பருவா, ''சொத்துரிமை இல்லாத இந்தியாவே எங்கள் எதிர்கால இலட்சியம்'' என்று பேசியுள்ளார்.

அமைச்சர் சுக்லா சொத்துரிமையே கூடாது என்றும் அந்த உரிமையை வழங்கும் அரசியல் சாசனம் மாற்றப்பட வேண்டும் என்றும் அடிக்கடி சொல்லி வருகிறார்.

அதே சமயம் இந்த முக்கியமான பிரச்னையில் பிரதமரும் நிதியமைச்சரும் நேர்மையான, நாட்டுக்கு நலம் பயக்கின்ற கருத்தைக் கொண்டிருப்பதை எண்ணி நிம்மதியும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

சொத்துரிமையை நமது அரசியல் சாசனம் மூலம் மக்களுக்கு அடிப்படை உரிமையாக வழங்கிய சட்ட நிபுணர்கள் விஷயம் தெரியாதவர்கள் அல்ல. அவர்கள், மனித இயல்பையும் நமது நாட்டின் தொன்மையான பண்பாட்டையும் புரிந்துகொண்டு தேசத்தின் தொழில் வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்துக்கும் உதவும் வகையில் சொத்துரிமையை வழங்கினார்கள்.

சொத்து என்று குறிப்பிடுவது பதுக்கப்படும் கறுப்புப் பணம் அல்ல. அதைக் கண்டுபிடிப்பதும் தண்டிப்பதும் வேறு விஷயங்கள். சொத்து என்று நாம் குறிப்பிடுவது பாங்கில் போடப்படும் பணம். அது தொழில் வளர்ச்சிக்கே உதவுகிறது. பாங்கில் போடாமல், வீடு கட்டினாலோ, தொழிற்சாலை தொடங்கினாலோ அல்லது நிலம் நீச்சு என்று வாங்கினாலோ அவையும் வேலை வாய்ப்பு அதிகரிக்க, தொழில் வளம் பெருக அல்லது விவசாயம் செழிக்கத்தான் பயனாகின்றன. ஆக, தனிநபர்களின் சொத்துக்கள் ஒட்டு மொத்தமாகச் சேர்ந்து நாட்டுக்கே நன்மை பயக்கின்றன.

ஒரு தொழிலகம் குறிப்பிட்ட சில பங்குதாரர்களுக்குச் சொந்தம் என்ற நிலையில்தான் அவர்களுக்கு அதில் பற்றுதல் ஏற்படுகிறது. கடுமையாக உழைத்து, பாடுபட்டு லாபம் காண வேண்டும் என்ற ஆசை பிறக்கிறது. ஆயிரமாயிரம் மக்கள் இந்த மன இயல்பினால் ஊக்குவிக்கப்படும்போது நாட்டில் பொருளாதாரம் கொழிக்கிறது. நில உடைமையும் இவ்வாறே விவசாயப் பெருக்கத்துக்கு உதவுகிறது.

இந்த ஊக்கத்தை அதாவது சொத்துரிமை என்ற அம்சத்தை நீக்கிவிட்டால் என்ன ஆகும் பார்ப்போம். 'என்றைக்கு வேண்டுமானாலும் இத்தொழிலகம் அரசுடைமையாகலாம். இதில் நமக்குப் பாத்தியதைகிடையாது' என்ற நிச்சயமற்ற நிலையில் தொழிலகத்தின் மீது அதன் உரிமையாளருக்குப் பற்று விட்டுப் போகும். யாருக்கும் ஊக்கமிராது. உற்பத்தி குறையும். பொருளாதாரம் சீர்கெடும்.

நமது பண்டைய சம்பிரதாயப்படி பார்த்தால்கூட பற்றற்ற நிலை ஒருவருக்குத் தோன்ற வேண்டியது எடுத்த எடுப்பிலேயே அல்ல. இல்லற வாழ்வின் இறுதியில்தான். ஆண்டு அனுபவித்த பின்னர் தான். அதுவரை அவன் கடமையிலேயே கண்ணாயிருக்கச் சொத்துரிமை இன்றியமையாததாகிறது.

சொத்துரிமை நீக்கப்பட்டுவிட்டால் பொருளாதாரத்தில் ஏற்படும் விரும்பத்தகாத விபரீத மாறுதல்கள் ஒருபுறமிருக்க,

கல்கி
மலர் 35
இதழ் 10



அகில இந்தியக் கட்சி
உன்னைப்போல் ஆக வேண்டும் - என்று எனக்கு விருப்பமில்லை
நேரே கருணாநிதி ரோடு வழியாகப் போய் இடது பக்கம் திரும்பினால் கருணாநிதி தெரு வரும். அதிலே கொஞ்ச தூரம் போய் வலது பக்கம் கருணாநிதி சந்தில் திரும்புங்கள். அங்கே கருணாநிதி இல்லத்தில் கருணாநிதி மாடிக்குப் போங்கள்.
STOP

நமது தொன்மையான பண்பாட்டிலேயே சீரழிவுகள் உண்டாகும். இன்று உழைத்துப் பாடுபட்டுச் சிறிது சொத்து ஒருவன் சேர்க்கிறான் என்றால் அது தனக்காக அல்ல. தனது பிள்ளை குட்டிகள் கஷ்டப்படாமல் சுகமாக வாழ வேண்டும் என்ற ஆசையால்தான். சொத்துரிமை யாருக்கும் இல்லை என்று ஏற்பட்டால் குடும்பத்தில் பந்தபாசத்தை வளர்க்கும் ஒரு முக்கிய அம்சம் மறைந்து விடும். பிள்ளையை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பை, பெண்ணுக்கு நல்ல இடத்தில் கல்யாணம் பண்ணிக் கொடுக்க வேண்டும் என்ற கடமையைத் தகப்பனார் தட்டிக் கழிக்கும் நிலை வெகு சீக்கிரம் தோன்றும். அதாவது நமது கலாசாரம், பண்பாடு, நாகரிகம் எல்லாம் அடியோடு மாறிப்போகும்.

இவையெல்லாம் பாரதத்துக்கு நல்லதல்ல என்றால் அபரிமிதமான சொத்து ஒருசிலரிடம் குவிவதும் நல்லதல்லதான். ஆயின் அவ்விதம் நேரா திருக்கத்தான் உச்சவரம்புகள் விதிக்கப்படுகின்றன. போதாக் குறைக்கு வருமான வரி, செல்வ வரி, வரிக்கு மேல் வரி, அதற்கு மேல் சூப்பர் வரி எல்லாம் உள்ளன. இவை அதிகப்படி செல்வத்தை ஒற்றி எடுத்துவிடக் கூடிய அளவில்தான் இருக்கின்றன. வரி வசூலிப்பைக் கடுமையாக்கினால் இந்த நாட்டில் யாருமே பெரும் பணக்காரனாக விளங்க முடியாது.

இதைச் செய்யாமல் சொத்துரிமையையே நீக்கிவிட வேண்டும் என்று ஆரம்பித்தால் அது நுனிக் கிளையில் உள்ள பழத்தைப் பறிக்க அடிமரத்தை வெட்டுகிற கதைதான்.

என்ன சேதி?

அண்ணல் அவதரித்த நாள்

காந்தி ஜெயந்தியை வழக்கம் போலன்றி அதிக சிரத்தையுடன் கொண்டாடுவோம்.

மகாத்மாவின் அரசியல் விருட்சத்தில் தார்மீக அடிப்படையே வேர்கள். இறையுணர்வே அடி மரம். பல்வகைச் சுதந்திரங்களும் அஹிம்சை, மதுவிலக்கு போன்ற உறுதியான கொள்கைகளும் கிளைகள். காந்திஜி இன்று இல்லாது போனாலும் காந்தீயம் அதைக் கடைப்பிடிக்க விரும்புவோருக்கு உயிர்த் துடிப்புடன் இன்னும் இருக்கிறது. காந்தியத்தைப் படித்து அறிந்து அதன்படி நடந்தோமானால் காந்திஜி விட்டுச் சென்ற அரசியல் விருட்சம் உண்மையில் ஒரு கற்பகத் தரு எனக் காண்போம்.



காந்தி ஜெயந்தியை முன்விட்டுத் தமிழக ஆளுனர் திரு கே. கே. ஷா நாலு நாள் விழாவுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். கிண்டி காந்தி மண்டபத்தில் நடக்கும் இவ்விழாவில் இசை மழையும் கருத்து மழையும் மாறி மாறிப் பொழியப் போகின்றன. இசை மழை இறையுணர்வோடு இரண்டறக் கலந்து பொழியும். கருத்து மழை காந்தியத்துடன் இணைந்து சொரியும்.

அக்டோபர் 2ந் தேதி மாலை ஆறு மணிக்குத் தொடக்க விழாவில் ஆளுனர் தவிர மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் கரன் சிங், நமது முதலமைச்சர் டாக்டர் கருணாநிதி ஆகியோர் பங்கேற்கிறார்கள். தமிழகத்துக்குத் தரணி யெல்லாம் பெருமை தேடித் தரும் மதுவிலக்கு பற்றிப் பேசுகிறார்கள்.

இதன் பிறகு ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் பக்திப் பாடல்கள் நம்மை மெய் மறந்த, 'மெய்' உணர்ந்த ஆனந்தப் பரவசத்தில் ஆழ்த்தப் போகின்றன.

அடுத்து வரும் நாட்களில் விழாவில் பங்கேற்கும் சொற்பொழிவாளர்கள், இசைக் கலைஞர்கள் ஒவ்வொருவருமே மிகப் பிரபலமானவர்கள். எனவே நாலு நாள் விழாவும் லட்சிய நோக்கில் நம்மை உயர்த்தும் போதே மிக சுவாரசியமாகவும் அமையும். அண்ணலை மனத்திலிருத்தி அனுபவிப்போம்.

கவிமணிக்குக் கவினுறு மண்டபம்

ஆயிரம் ஆண்டு ஆனாலும் மறைய முடியாத கவிஞருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுகிறார்கள்.

குழந்தைக் கவிஞராகவும் முதுபெரும் புலவராகவும் விளங்கிய கவிமணிக்கு மணிமண்டபம் எழுப்ப நினைக்கிறார்கள்.

தேசமெல்லாம் போற்றும் தேசிக விநாயகத்துக்குத் தெய்வத் தமிழ் நாட்டில் மன்றம் எழுப்பப் போகிறார்கள்.



கட்டடம் இரு நிலைகளை உடையதாக இருக்கும். ஒரு நிலை கலையரங்கமாகத் திகழும். மற்றொரு நிலை படிப்பகம், நூலகம், ஆய்வகமாக விளங்கும்.

கலை உள்ளமும் ஆராய்ச்சி மனமும் கொண்ட பண்பாளருக்கு இத்தகைய மன்றம் அவர் வாழ்ந்து நடமாடிய மண்ணிலேயே அமைவது மிகப் பொருத்தம். மேலப்புத்தேரி ஊர்ச் சமுதாய மக்கள் பெருமிதமும் பெருமையும் கொண்டு இதற்கென இருபத்தொரு 'சென்டு' நிலத்தைச் சாசனம் செய்து அளித்து விட்டார்கள். இனி மன்றம் எழும்ப உதவ வேண்டிய கடமை, மதலைச் செல்வத்தைக் கண்டு மகிழும் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. இரண்டு லட்ச ரூபாய் வெகு விரைவாகவும் எளிதாகவும் திரள உதவுமாறு தமிழ்ப் பெருமக்களை வேண்டுகிறோம். (வருமான வரி விலக்கு உண்டு.) நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி: கன்வீனர், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை நூற்றாண்டு விழாத் தமிழ் மன்றம், புத்தேரி, நாகர்கோவில்.


பண்டிகைகள்
பரிமளிக்க
ராசி
பட்டுப்
புடவைகள்
இந்த ஆண்டு எமது
தீபாவளி கலர்கள்
மஹேஸ்வரி
வஜ்ரமாலா
ராதா சில்க் எம்போரியம் மயிலாப்பூர், சென்னை-600 004
ராதா சில்க் எம்போரியம் 29, கோவிந்த் மஹால்,
86-B, மரைன் டிரைவ் பம்பாய்-400 002
சார்பு நிறுவனம்: ராதாசில்க்ஸ் தன் பில்டிங்ஸ் மவுண்ட் ரோடு, சென்னை-600002
தீபாவளி வரை ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை உண்டு
EP-RASI-105

உங்கள் குறைவும் என் நிறைவும் 6

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

முந்தியும் எனக்கு உங்களை யெல்லாம் அநுஷ்டானம் பண்ணி வைக்க முடியும் என்ற எண்ணம் இல்லை; பிந்தி இங்கே வந்து உபந்நியாசம் பண்ணுகிற போதும் இதனாலேயே இவர்களை நாம் மாற்றிவிடலாம் என்ற எண்ணம் இல்லை. அப்படி ஏதாவது உபந்நியாசத்தின் நடுவில் நான் 'இதைப் பண்ணு' 'அதைப் பண்ணு' என்று சொல்லியிருந்தால்கூட அதை எல்லாம் இப்போது ரத்து பண்ணிக் கொள்கிறேன்.

'பண்ணு பண்ணு' என்று நிர்ப்பந்தப் படுத்திச் செய்ய வைப்பதில் பெருமையில்லை. அது ஸ்திரமும் இல்லை. தானாக உங்களுக்கு என்னிடம் பக்தி வந்தால், நீங்களாகவே சாஸ்திரப் பிரகாரம் செய்ய ஆரம்பித்து விடுவீர்கள். நம்மை நாமே ஓரளவு அடக்கிக் கொண்டு, அநுஷ்டானம் பண்ணும்படியான சக்தி வந்ததானால், அப்போது நாம் யாரிடமெல்லாம் பிரியமாயிருக்கிறோமோ அவர்களுக்கும் கொஞ்சம் அந்தச் சக்தி உண்டாகி விடும். சொன்னதைச் செய்கிறவனிடம் மற்றவர்களுக்குத் தானாக உண்டாகிற மரியாதையினால், அவர்களும் அப்படி நடக்க ஆரம்பித்துவிடுவார்கள். இப்போது நீங்கள் ஏதோ கொஞ்சம் அநுஷ்டானங்களை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் அந்த அளவுக்கு என்னிடம் உங்களுக்குப் பக்தி வந்திருக்கிறது என்று அர்த்தம். முழுக்க அநுஷ்டானம் செய்ய முடியவில்லை என்றால் முழு பக்தி வரவில்லை என்று அர்த்தம். முழு பக்தி வரவில்லை என்றால் அவ்வளவு பக்திக்கு நான் இன்னும் பாத்திரமாகவில்லை என்று அர்த்தம்.

உங்களுடைய பூரணமான பக்திக்கு நான் பாத்திரனாகி யிருந்தேனானால், நீங்கள் தானாகவே சாஸ்திரங்களை அநுஷ்டித்து உங்களை உயர்த்திக் கொண்டிருப்பீர்கள். நான் அவ்வளவு பக்திக்குப் பாத்திரமாகவில்லை என்றால், நான் என்னை இன்னும் சுத்தி படுத்திக் கொள்ளவில்லை என்றே அர்த்தம். நான் சுத்தி ஆகிவிட்டால் நீங்கள் பக்தி ஆகிவிடுவீர்கள். நான் நினைக்கிற மாதிரியே நடந்து விடுவீர்கள். ஆகையால், நீங்கள் எல்லோரும் இன்னும் உயர்ந்தவராக வேண்டும் என்று குறைப்பட்டுக் கொண்டீர்களே, அப்படி ஆக வேண்டுமானால், நான் முதலில் என்னைச் சுத்தி பண்ணிக் கொள்ள வேண்டும். இனிமேல் இதுதான் நான் செய்ய வேண்டியது. ஸ்வாமியின் கிருபையால்தான் இது நடக்கும். ஆனதினால் இனிமேல் நான் ஸ்வாமியிடம் இதைத்தான் பிரார்த்தனை பண்ணிக் கொண்டிருக்க வேண்டும். உங்களுக்கெல்லாம் நல்லதில் பிரவிருத்தி (ஈடுபாடு) உண்டாவதற்காக, என்னை அவர் சுத்தப்படுத்த வேண்டும் என்று வேண்டிக் கொண்டே இருக்க வேண்டும். நான் நிறைந்தால் ஒழிய உங்கள் குறையைப் போக்க முடியாது.

இப்போது, கவர்னர்-ஜெனரலாக இருந்தவர் (ராஜாஜி) பேசும்போது, ''எங்களுக்கெல்லாம் பகவானை எப்படிப் பிரார்த்திப்பது என்பதே மறந்து போய் விட்டது. அதனால் எங்களுக்காக நீங்களே பகவானைப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்'' என்று சொன்னார். உங்கள் நல்லதற்காக நான் பிரார்த்தனை பண்ண வேண்டியதுதான். ஆனால் உங்களிடம் மட்டும்தான் தோஷம் இருப்பது போல், 'அவர்களை நல்லபடியாக்குங்கள்' என்று நான் பிரார்த்தனை பண்ணாமல், என் தோஷங்களை அவர் போக்கடிக்க வேண்டும் என்று பிரார்த்திக்க வேண்டும். அவர் (ராஜாஜி) மரியாதைக்காக, ''எங்களுக்காகப் பிரார்த்திக்கணும்'' என்று கேட்டுக் கொண்டார். நானோ அதை, ''எனக்காகவே பிரார்த்திச்சுக்கணும்'' என்றுதான் அர்த்தம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். பகவானைப் பிரார்த்தனை பண்ணிப் பண்ணி நான் சுத்தமாகி விட்டால், உங்களுக்கெல்லாம் என்னிடம் நிறைந்த அன்பு இருப்பதனால், தானாகவே நீங்களும் சுத்தமாகிவிடுவீர்கள். ஆகையினாலே உங்கள் இத்தனை பேருக்கு பகவான் தனித் தனியாக அநுக்கிரகம் செய்ய வேண்டும் என்று கேட்பதை விட, என் ஒருத்தனுக்கு பகவான் அநுக்கிரகம் பண்ணி விட்டாரானால், அதைப் பெறுவதற்கு நான் பாடுபட்டேனானால், உங்கள் எல்லோருக்கும் ஈசுவர கிருபை சித்தித்து, நீங்கள் எப்படி ஆகவேண்டுமோ அப்படி ஆகி விடுவீர்கள். ஆனதினாலே, ''ஜனங்களுக்கு நல்ல புத்தி வரணும், தர்மத்திலே நல்ல சிரத்தை வரணும், அது வரணும், இது வரணும்'' என்று பிரார்த்திப்பதைக் காட்டிலும் ''இதுகளெல்லாம் எனக்கு வரணும்; எனக்கு நல்ல அநுபவம் வரணும், ஞானம் வரணும்'' என்றுதான் வேண்டிக் கொள்ள வேண்டும். ''இந்தக் காலத்தின் கோளாறுகள் எல்லாம் தீர பக்திதான் ஒரே வழி; ஆனாலும் எங்களுக்குப் பக்தியே தெரியவில்லை; ஆனபடியாலே நீங்களே எங்களுக்காகப் பக்தி செலுத்துங்கள்'' என்று அவர் சொன்ன மாதிரி, பக்திதான் வழி. அதை எல்லாரும் அடைவதற்கு ஒரே வழி நான் எனக்காகப் பிரார்த்தித்துச் சுத்தி ஆகிறதுதான். குறை எல்லாம் தீர இது ஒன்றுதான் வழி. வேறே வழியே கிடையாது. அவர் சொன்னாலும் சொல்லாது போனாலும் நானே இப்படி வியாக்கியானம் பண்ணிக் கொண்டு விட்டேன். (தொடரும்)

1959ல் சென்னை பிரிவுபசாரத்தில் அருளிய உரை.



future. Today the city houses giant industrial ventures, sprawling educational institutions and key defence units. They contribute to the steady growth of this nation. A visit to Hyderabad will, therefore, provide a peep not only into the India of the past but also into the India of Tomorrow.

(J.VENGALA RAO),





புராதனப் பெருமையும் எதிர்கால ஏற்றமும்

பி.எஸ்.மணி



"சிரமம் இல்லாமல் இந்த இரட்டை நகர்களையும் பார்க்க இரண்டு இடங்கள் உள்ளன. ஹைதராபாத்தில் நவபாட் பஹாட் 450 அடி உயரத்தில் உள்ளது! சார்மினர் ஸ்தூபிகளின் மேலே நின்றால் இரட்டை நகர்களை நோட்டம் விட்டு விடலாம்!" என்றார் நண்பர் வேங்கடராமன்.

"வேண்டாம்! முதலில் ஸ்கந்தகிரி முருகன் கோயிலைச் சுற்றிவிட்டு நகர்வலத்தைத் தொடருங்கள்! இங்குள்ள விநாயகர் வரப்பிரசாதி!" என்றார் எழுத்தாளர் சுபஸ்ரீ.

"ஸார்! சிகந்திராபாத் ரயில் நிலையத்துக்கருகிலுள்ள விக்டரி பிள்ளையாரையும் ஒரு சுற்றுச் சுற்றிவிடுங்கள்!" என்றார் ரயில்வே புள்ளி விவர இன்ஸ்பெக்டர் சங்கரன்.

காஞ்சி ஆசாரியாளின் பாத தூளி பட்ட ஸ்கந்தகிரியை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு நகர்வலத்தைத் தொடர்ந்தேன்; ஸ்கந்தகிரி முருகனும் கும்பாபிஷேகம் காணவிருக்கும் பிரசன்ன வேங்கடேசுவரப் பெருமானும் 'அருள்' பார்வை நல்கினர்.

☐ இந்தியாவின் ஐந்தாவது மிகப் பெரிய நகரமான, ஹைதராபாத், மூஸி நதியின் கரையில் அமைந்து, சுற்றி நாலுபக்கங்களிலும் மலைகளால் சூழ்ந்துள்ளது. கோல்கொண்டா மன்னர்களில் பிரசித்தமான நான்காவது அரசன் முகம்மது குலி குதுப் ஷா 1589ல் ஹைதராபாத் நகரை உருவாக்கினார். இவரது உள்ளங் கவர்ந்த பேரழகி பாக்மதி 'சார்மினார்' அருகே வசித்தாள். இதனால் இந்த நகருக்குப் பாக்கிய நகர் என்னும் பெயரும் உண்டு. பாக்மதிக்கு ஹைதர் மஹால் குதுப்ஷா உரிமையாக்கவே, பாக்கிய நகர் ஹைதராபாத் என்றும் வழங்கலாயிற்று.

☐ சரித்திரப் பிரசித்தமான சார்மினாருக்குச் செல்கிறோம் முதலில்.

சார்மினார் ஸ்தூபிகளில் கடைசி நைஜாம் மன்னர் காலத்தில் யாரும் ஏற அனுமதிப்பது கிடையாதாம்! காரணம், சார்மினார் எதிரே சௌமஹினா, பஞ்ச் மஹினா என்ற அரசிகள் வாழும் அரண்மனைகள் இருப்பதால் சார்மினார்மீது ஏறுபவர்கள்மீது அரசிகளின் பார்வை பட்டுவிடுமாம்!

"ஸார்! இதுதான் பட்டேல் மார்க்கெட்! நம்ம மெட்ராஸ் மூர்மார்க்கெட் போல!"

"ஹைதராபாத் போலீஸ் ஆக்‌ஷனுக்குப் பிறகு சார்மினார் ஏறத் தடை இராதே!"

''ஒரு தடையும் இல்லே. 149 படிகள் ஏறி மேலே சென்ருல் ஹைதராபாத் நகரைப் பார்த்துவிடலாம்!''

''அதோ பாருங்கள், ஓர் எச்சரிக்கை!'' என்று அறிவிப்புப் பலகையைச் சுட்டிக் காட்டினேன். ''அபாயம்! ரிப்பேர் வேலே நடக்கிறது. விலகியிருங்கள்!''

அடுத்த கணம் விடாக்கண்டர் நண்பர் சார்மிஞருக்கு எதிரில் இப்போதுள்ள கட்டடத்தைச் சுட்டி, ''எதிர்த் தரப்பிலே யூனனி வைத்தியசாலே இருக்கு! உங்களுக்குத் தலே சுற்றினல் மருந்து கிடைச்சுடும்!'' என்ருர்.

□ லால்பஹாதூர் ஸ்டேடியம் ஹைதராபாத் நகரின் நடு மையத்தில் அமைந்திருக்கிறது. 1964ம் வருஷத்தில் கட்டி முடிக்கப்பட்ட இந்த ஸ்டேடியம் இனிமேல்தான் 'டெஸ்ட் பேறு' பெறவிருக்கிறது.


ஆந்திரப் பிரதேச ஸ்போர்ட்ஸ் கௌன்சில் காரியதரிசி திரு ஏ. எஸ். வி. பிரசாத் ஸ்டேடியம் பற்றி விளக்கம்' தருகிருர்: ''லால்பஹாதூர் ஸ்டேடியத்தில் கிரிக்கெட், ஒட்டப்பந்தயங்கள் நடைபெறுகின்றன. கால் பந்தாட்டத்துக்குத் தனி ஸ்டேடியம், கோஷா மஹல் ஸ்டேடியம். போலீஸ் இலாகா இதை நிர்வகித்து வருகிறது.''



நகர்வலம்







1, 2. ஆந்திரப் பிரதேச முதன் மந்திரி படமும் கையொப்பமும்.
3. ஹிந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் தொழிற்சாலே.
4. சார்மிஞர்.
5. நேரு மிருகக் காட்சிச்சாலே.
6. பஞ்சாராஸ் நடனம்.
7. மக்கள் வீடு தேடி வரும் உணவுச் சத்து ஆராய்ச்சி நிலேய நிபுணர்கள்.
8. ஃபாலக்நாமா அரண்மனே.

''இந்த லால் பஹாதூர் ஸ்டேடியத்தில் தனி விசேஷம் என்ன?''

''இந்த ஸ்டேடியத்தில் 32,000 பேர்கள் வசதியாக அமர்ந்து காணலாம். வரும் ஆட்டக்கார விருந்தினர்கள் தங்க வசதியான அறைகள் உள்ளன. ஸ்டேடிய முகப்பில் ஷாப்பிங் சென்டர். டேபிள் டென்னிஸ், மல் யுத்தம், பாக்ஸிங் போன்ற விளையாட்டுக்களுக்குப் பயிற்சி ஹால்களும் இந்த ஸ்டேடியத்தில் உள்ளன!'' என்கிறார் திரு பிரசாத்.

□ இரட்டை நகரங்களான ஹைதராபாத்–சிகந்திராபாத்தை இணைக்கும் அழகிய ஏரிக்கரை (Tank Bund) இவ்விரு நகரவாசிகளுக்குமே பொழுது போக்க வசதியான இடம். நைஜாம் மன்னர் காலத்தில் போக்குவரத்தை மாலையில் நிறுத்தி, அந்தப்புர ராணிகள் இங்கே உலவுவதுண்டாம்! இந்த இடத்தைப் பார்வையிட்ட சரித்திராசிரியர் டிராவர்னியர், ''ஹைதராபாத்தின் செல்வமும் சிகந்திராபாத்தின் அழகும் ஹுசேன் சாகர் ஏரியில் மாலையில் சந்தித்துப் பரிமளிக்கின்றன'' என்று வர்ணித்துள்ளார்.

இங்குள்ள நேருஜி குழந்தைகள் பூங்காவில் 1971 பாகிஸ்தான் போரில் கைப்பற்றப்பட்ட 'பட்டான் டாங்கி' நமது ராணுவத்தினரின் வீரத்தைப் பறைசாற்றுகிறது.

□ நைஜாம் மன்னரின் பிரதம மந்திரி மூன்றுவது சாலார் ஜங்கின் அளப்பரிய கலாரசிகத் தன்மைக்கு சாலார்ஜங் மியூஸியம் ஓர் எடுத்துக்காட்டு. இந்தத் தனிநபரின் இணையற்ற கலைப் பொக்கிஷங்களை 'எடை' போடுவது இயலாத காரியம். ஐந்து மணி நேரம் ஆனாலும் கண்கொட்டாமல் காண எத்தனையோ அதிசயங்கள் உள்ளன இங்கே!

□ ஹைதராபாத் நகருக்கு வெளியே முந்நூறு ஏக்கர் நிலப் பரப்பில் நேரு மிருகக் காட்சி சாலை சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு வரப்பிரசாதம். தன்னிச்சையாகத் திரியும் மிருகங்களுக்கு மத்தியில் கூண்டில் அடைபட்டுச் சிறு பஸ்களில் பவனி போவது 'காட்சிப் பொருள்' யார் என்பதைத் தெளிவாக்குகிறது.

பபூன் குரங்கு 'காட்ச்' பிடிக்கும் அழகே அலாதி. எத்தனை வேர்க்கடலையை எறிந்தாலும் ஒன்றைக்கூட நழுவ விடாமல் அது பிடிப்பது கிரிக்கெட் பீல்ட்ஸ்மனுக்குப் பாடம்!

''மேற்கிந்தியத் தீவு கிரிக்கெட் கோஷ்டியினர் எங்கள் மிருகக் காட்சி சாலைக்கு வந்ததும் அவர்களைக் கவர்ந்தது இந்தப் 'பபூன்' தான். லாயிட்டே அதன் பீல்டிங் திறமையைக் கண்டு அசந்து போனார்!'' என்றார் நேரு மிருகக் காட்சி சாலை 'குரேட்டர்' புஷ்பராஜ்.

□ ''உஸ்மானியா சர்வகலாசாலையில் பரீட்சையில் மாணவர்கள் காப்பியடிப்பது சர்வசாதாரணம். பரீட்சாதிகாரிகள் ஏதாவது மிரட்டினால் அவர்களுக்கு ஆபத்து! மாணவர்கள் கத்தியைக் காட்டி மிரட்டும் அளவுக்குத் துணிந்தவர்கள். இந்த ஒழுங்கின்மையைத் தமது துணிச்சலான நடவடிக்கைகளினால் ஒடுக்கியவர் துணைவேந்தர் ஜகன் மோகன் ரெட்டி. அவரை ஹைதராபாத்–சிகந்திராபாத்வாசிகள் மிகவும் கொண்டாடுகிறார்கள்.

உஸ்மானியா சர்வகலாசாலையில் எம்.ஏ. தமிழ்ப் பட்டப் படிப்பு உண்டு. தமிழ்த் துறைத் தலைவர் திரு சிங்காரவேலனார்.

□ தென் மத்திய ரயில் தலைமையகம் சிகந்திராபாத்துக்கு வந்த பிறகு அதன் மகிமை உயர்ந்துள்ளது. சிகந்திராபாத்தில் மகான் காளி ரொம்பப் பிரசித்தம். ஜூன், ஜூலை மாதங்களில் பதினாறு நாட்கள் இந்த இந்துத் திருவிழா விமரிசையாக நடக்கிறது. சிகந்திராபாத்துக்கு வைத்தியத் துறையில் ஈடில்லாப் புகழ் கிட்டியுள்ளது. ஸர் ரோனால்ட் ராஸ் மலேரியா என்னும் கொடிய நோயைக் கண்டறிந்தது இந்நகரில்தான்! சிகந்திராபாத்தில் இந்திய ராணுவத்தின் ஒருபிரிவு உள்ளது. விமானப் படை அகாடமியும் இந்நகரில் தான் இருக்கிறது. ஹக்கீம் பெட் ராணுவ விமான நிலையம். சிவில் விமான நிலையம் பேகம்பெட்டில் உள்ளது.

□ சிகந்திராபாத் ஹைதர்பஸ்தியில் ஓய்வு பெற்றுத் தங்கும் ஏர்லைன்ஸ் விமான அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்: ''ஸார்! இங்கே மெட்ராஸ் மாதிரி அவ்வளவு விலைவாசி அதிகமில்லை. ஆனால் வீட்டுப் பிரச்னை இங்கு தலைதூக்கி நிற்கிறது! நூறு ரூபாய் குடக்கூலிக்காரர் காலி பண்ணினா உடனே நூற்றைம்பது இருநூறு கொடுத்து வீடு பிடிக்கப் பலர் 'க்யூ'விலே இருக்கா!''


□ ஹைதராபாத் சிகந்திராபாத் ஜனத்தொகை பதினெட்டு லட்சத்துக்கு மேல் கூடிவிட்டதாம். தமிழர்கள் மூன்று லட்சம் பேர் குடியேறியிருக்கிறார்கள்.

தமிழர்களின் இயல், இசை, நாடகக் கலைத் தொடர்புகளுக்குப் பல கலாசார நிலையங்கள் உள்ளன. மிக நீண்ட பட்டியல். அனைத்துமே அரும் பணியாற்றுபவை.

□ ஹைதராபாத் நிஜாம் உலகிலேயே பெரிய பணக்காரர் என்ற புகழைப் பெற்றவர். நைஜாமுக்கு ஏழு அரண்மனைகள் உள்ளன. ஃபாலக்நாமா அரண்மனை அவற்றுள் மிகப் பெரியது. இன்று நைஜாமின் சட்ட வாரிசான பேரர் பர்கத் அலிகான் பஞ்சாரா மலைகளில் புதிய அரண்மனை ஒன்றைக் கட்டி அதில் வசிக்கிறார்! பஞ்சாரா மலை மாளிகைகள் பணக்காரர்களின் வாசஸ்தலமாக உள்ளன.

□ கோல்கொண்டாக் கோட்டை சுற்றுலாப் பயணிகள் விரும்பிச் செல்லும் இடம். இதைப் பற்றி அதிசயக் கதை. மாலுமி சின்பாத், வியாபாரிகள் வைரச் சுரங்கங்களில் இறைச்சித் துண்டுகளை விட்டெறிவதைக் கண்டாலும். அந்த இறைச்சித் துண்டுகளை உண்ணும் பறவைகள் விலைமதிக்க வொண்ணாத வைரங்களையும் பதித்துக் கொண்டு வந்துவிடும். அந்தக் கதை நடந்த இடம் இதுதான் என்று ஒரு நம்பிக்கை! ராணி எலிஸபெத்தின் மகுடத்தை அலங்கரிக்கும் கோஹினூர் வைரம் இந்தக் கோல்கொண்டாவைச் சேர்ந்ததுதான்!


□ இரட்டை நகரங்களில் மிகப் பெரிய தொழிலகங்கள் எழும்பி ஆந்திரப் பிரதேசத்தின் தொழில் விஸ்தரிப்பைக் காட்டுகின்றன.



நண்பர்: உங்க பையனைக் கார் ஓட்ட அனுமதிக்கிறீங்களே!
பணக்காரர்: என்ன செய்யறது! அவனுக்கு ரோட்டிலே சரியா சைக்கிள் விடத் தெரியல்லே!

— உஷா

இயற்கை உங்களுக்கு அளித்துள்ளது எழில்மிகு கேசம்...
அதனை அவ்வண்ணமே வைத்திருப்பீர்
ஹேலோ கேச பராமரிப்புமூலம்



HSR.G.I.TM

ஹேலோ ஷாம்பூக்கள் மட்டுமே சீரான, சிறந்த உத்தியின்படி தயாரிக்கப்படுகின்றன—உங்கள் கேசத்தின் பராமரிப்பிற்கெனவே

ஹேலோ காஸ்மெடிக் ஷாம்பூ: இந்த விசேஷ ஷாம்பூவை உபயோகித்து, உங்கள் கேசம் எவ்வளவு மெத்தென்றும், மிருதுவாகவும் இருக்கக் கூடும் என்பதைக் கண்டு கொள்ளுங்கள்.

ஹேலோ எக் ஷாம்பூ: விசேஷ போஷாக்கு மிக்க இந்த ஷாம்பூவில் உள்ள வளமிக்க முட்டைப் புரதத்தின் பயனுக உங்கள் கேசம் கட்டுக்-கோப்புடன், கவர்ச்சியாகத் திகழ்கிறது.



ஹேலோ லெமன்—ஃப்ரெஷ் ஷாம்பூ: உங்கள் கேசத்திற்கு இயற்கையான தூய்மையான பளபளப்பைத் தருகிறது.

ஹேலோ கான்ஸென்—ட்ரேட் ஷாம்பூ: ஏராளமான நுரையத்தின் மூலம் உங்கள் கேசத்தை மென்மையாகவும், கட்டுக்கடங்கியும் வைத்திருக்க சிறிதளவே போதும்.

இயற்கை ஆரோக்கியத்துடன் கூடிய கேசத்திற்கு—இன்றே உபயோகிக்கத் தொடங்குவீர் ஹேலோ



விரைவில் நிவாரணம் பெற சக்தி வாய்ந்த, நம்பகமான அனாஸின் சாப்பிடுங்கள்

சக்தி வாய்ந்தது: உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும் வலி நிவாரணியை அதிக அளவில் கொண்டது அனாஸின். ஆகையால்தான் அனாஸின் வலியிலிருந்து விரைவிலேயே நிவாரணமளிக்கிறது.

நம்பகமானது: டாக்டரின் நம்பகமான மருந்தைப் போல பல மருந்துகளின் கலவையே அனாஸின். ஆகையால்தான் லட்சக்கணக்கானவர்கள் அனாஸின் சாப்பிடுகிறார்கள்; சிபாரிசும் செய்கிறார்கள்.

ஜலதோஷம் மற்றும் ஃப்ளூவினால் ஏற்படும் வலிகள், தலைவலி, முதுகுவலி, தசைவலி, பல்வலி ஆகியவற்றுக்கு அனாஸின் சக்திவாய்ந்த நிவாரணி.

சக்தி வாய்ந்த, நம்பகமான

அனாஸின்

இந்தியாவின் புகழ் பெற்ற வலி-நிவாரணி

Regd. User of TM: Geoffrey Manners & Co., Ltd.

A/2/8-74

ராமச்சந்திரபுரத்தில் பாரத்ஹெவி எலெக்ட்ரிகல் நிறுவனம் ராட்சத மின்சக்திக் கருவிகளைத் தயாரித்துத் தருகிறது.

''திருச்சி பாரத் ஹெவி எலெக்ட்ரிகல் நிறுவனம் பாய்லர் தயாரிக்கிறது. நாங்கள் மின் நிலையங்களுக்கான 110 மெகோவாட் டர்போ ஸெட்டுகளைத் தயாரித்துத் தருகிறோம். எட்டாயிரம் தொழிலாளிகள் பணி புரிகிறார்கள். எண்ணூர், கொத்தகூடம் முதலிய மின் நிலையங்களுக்கான டர்பன் ஜெனரேட்டர்களும், துணைக் கருவிகளும் நாங்கள் கொடுத்தவை!'' என்று சுருக்கமாக ஷாஜஹான் விளக்கம் தருகிறார். பாரத் ஹெவி எலெக்டிரிகல் ஜெனரல் மானேஜர் எம். ஆர். நாயுடுவைச் சந்தித்து விடைபெறுகிறோம்.

☐ ஆந்திரப் பிரதேச சர்க்கார் வழங்கியுள்ள மூவாயிரம் ஏக்கர் நிலத்தில் சர்வ தேசப் பயிர் ஆராய்ச்சி நிலையம் இருபத்திரண்டு தேச ஆராய்ச்சியாளரோடு இயங்குகிறது.

☐ மற்றொரு மிகப் பெரிய தொழில் நிறுவனம் ஹிந்துஸ்தான் மெஷின் டூல்ஸ். வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ராட்சதக் கருவிகளைத் தயாரித்துத் தரும் இந்நிறுவனம் இந்த வருஷம்தான் இலாபத்தில் இயங்கத் தொடங்கி யிருக்கிறது.

☐ எண்ணூறுக்கு மேற்பட்ட சிறுதொழில் நிறுவனங்கள், வளரும் இரட்டை நகர்களுக்கு உறுதுணை செய்கின்றன. படித்த இன்ஜினீயரிங் பட்டதாரிகளுக்கான 'டெக்னோகிராட்' எஸ்டேட் ஒரு புதுமை!

☐ இன்று உணவுப் பொருள்களில் கலப்படம் சர்வ சாதாரணம். குடிக்கும் நீரில் 'ப்ளோரின்' அதிக அளவு கலந்திருந்தால் கால் மடங்கிப்போதல் ஏற்பட்டுவிடும். பருப்பு வகைகளோடு 'வட்டப் பருப்பு' கலந்து விட்டால் விஷச் சத்து உணவில் கலந்து என்ன பாடு படுத்துகிறது! வேர்க்கடலை, சோளப் பயிர்களில் மழையினால் ஏற்படும் பூஞ்சாணம் (Fungus) எத்தனை கெடுதிகளை விளைவிக்கிறது! இவற்றையெல்லாம் ஆராய்ச்சி பூர்வமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் ஹைதராபாத்திலுள்ள தேசிய உணவு ஆராய்ச்சிக் கழகத்தினுள் நுழைய வேண்டும்! 85 விஞ்ஞானிகள் உணவுச் சத்து பற்றி மிக விரிவான ஆராய்ச்சிகளை நடத்துகிறார்கள்.

''இப்பொழுது பெண்மணிகள் கருவுறாமலிருக்கப் பல மாத்திரைகளை விழுங்குகிறார்கள். இந்த மாத்திரைகளை விழுங்குவதினால் பிற்பாடு ஏற்படும் பலாபலன்களைப் பற்றி இப்பொழுது ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறோம்!'' என்று விவரித்தார் டாக்டர் பால சுப்பிரமணியம்.

☐ இது அணு யுகம். வருங்காலத்தில் அணு சக்தியின் மகிமையினால் எத்தனையோ புதுமைகள் விளையும். அணு சக்தி கமிஷனின் மேற்பார்வையில் இயங்கும் ஹைதராபாத் 'நியூக்ளியர் ப்யூயல் காம்ப்ளக்ஸ்' 18 கோடி செலவில் நிர்மாணமாகியுள்ளது.

''ஜாடுகுடா கனிச் சுரங்கங்களிலிருந்து யுரேனியமும், கேரளக் கடற்கரைகளிலிருந்து ஜர்கோனியமும் கொண்டு வரப் படுகின்றன. யுரேனியம் பல ரசாயன மாறுதல்களுக்குப் பிறகு பில்லைகளாக வடிக்கப் படுகின்றன. 'ஜிர்கான்' பல ரசாயன மாறுதல்களுக்குப் பிறகு 'ஜிர்கலாய்' குழாய்களாக உருவெடுக்கின்றன. ஜிர்கலாய் குழாய்க்குள் யுரேனியப் பில்லைகள் அடைக்கப்பட்டு, அவை 'வெல்ட்' செய்யப்படுகின்றன! இந்த மாதிரி 19 குழாய்களின் கட்டு ஒரு 'ப்யூயல் பண்டில்' ஆகும்! இந்த 'ப்யூயல் பண்டில்' ராஜஸ்தான் அணு மின் நிலையத்துக்கும் தாராபூர் அணு மின் நிலையத்துக்கும் செல்கிறது. டிடானியம் பைலட் தொழிற்சாலை, 2000 டன்கள் எவர் ஸில்வர் குழாய்த் தொழிற்சாலை ஆகியவை விரைவில் உப தொழில்களாக இயங்கவிருக்கின்றன!'' என்று விஞ்ஞானி திரு கிருஷ்ணன் எடுத்துரைக்கிறார்.

☐ ஹைதராபாத் கலைஞர்களின் கலைத் திறமைக்கு பித்ரி கலையும், நிர்மல் ஓவியங்களும் கலங்கரை விளக்கங்கள். நம்ம ஊர் வில்லுப் பாட்டுப் போல 'புர்ர கதா' என்ற தெருக் கூத்து தெலுங்கர்களின் நாடோடிக் கலை.

☐ ஆந்திரப் பிரதேச முதன் மந்திரி திரு வெங்கல் ராவின் செகரடேரியட் ஹைதராபாத்தில் உள்ளது. அவரது அறையை அடைவதற்குள் பார்வையாளர்கள் பலரைத் தாண்டிச் செல்கிறோம். காலை ஒன்பது மணியிலிருந்து ஒரு மணி வரையிலும், உணவு வேளைக்குப் பின் மாலை நாலு மணியிலிருந்து ஏழு மணி வரையிலும் முதன் மந்திரி பார்வையாளர்களை உடனுக்குடன் கவனித்து, அரசாங்க வேலைகளையும் அன்றே முடித்து வைக்கிறார். எல்லாப் பணிகளும் தலைமையகத்திலே தான்; அவரது வீடுவரை பார்வையாளர்களை எட்ட விடுவதில்லை.

சென்னைப் பத்திரிகையாளர் என்றதும், உடனே அனுமதி கிடைக்கிறது.

''நீங்கள் ராஜாஜி எழுதிய பத்திரிகையிலிருந்து வருகிறீர்கள் அல்லவா? எங்கள் நகரைப் பார்வையிட வந்ததில் மிக்க திருப்தி!'' என்று கூறிவிட்டு, கணத்தில் கல்கிப் பத்திரிகைக்கு ஆங்கிலத்தில் விசேஷச் செய்தியொன்றையும் தருகிறார்.

அதன் தமிழாக்கமே நகர்வலத்தின் முடிவுரையாக அமைந்திருக்கிறது:

''கல்கி பத்திரிகை இந்தியாவின் பெருநகர்களைப் பற்றி அவற்றின் சரித்திரத்தையும், கலைச் செல்வங்களையும் சமூக மாறுதல்களையும் பற்றி விவரிக்க முன்வந்ததைக் கண்டு மகிழ்கிறேன். இந்தத் தொடரில் பழைமையான ஆந்திரத் தலைநகர் ஹைதராபாத் இடம் பெறுகிறது.

''ஹைதராபாத் நகரம் சரித்திரப் பிரசித்தமான நகரம். தக்காணத்தின் புராதனப் பண்பாட்டையும் எதிர்காலத்தை நலமுற அமைத்துக் கொள்வதில் முனைந்திருக்கும் தெலுங்கர்களின் நவீன நோக்கையும் பிரதிபலிக்கும் பெரு நகரம். இன்று இந்நகரம் மிகப் பிரும்மாண்டமான தொழிலகங்களையும், வளர்ந்தோங்கும் கல்விக் கழகங்களையும், நாட்டின் பாதுகாப்புக்கு உதவும் முக்கிய நிலையங்களையும் கொண்டுள்ளது. இந்தத் தேசத்தின் நிரந்தர வளர்ச்சிக்கு இவை உதவுகின்றன. எனவே ஹைதராபாத் நகருக்கு விஜயம் செய்வதால் இந்தியாவின் புராதனப் பெருமையை மட்டுமின்றி எதிர்கால இந்தியாவின் சிறப்புக்களையும் உணரலாம்!''

''பல் டாக்டர் வீட்டிலே நான் அழவே இல்லேப்பா!''
''சமர்த்துப் பையன் நீ! ஆமாம், டாக்டர் என்ன சொன்னார்?''
''டாக்டரா? அவர்தான் வீட்டிலேயே இல்லையே!''
— [illegible]








உன்னதப் பண்பாடு ஜொலிக்கும் தங்கமான வேலைப்பாடு

உம்மிடியார் ஜுவல்லர்ஸ்
1905 முதல் முன்னணியில் நிலைத்து,
உங்கள் அபிமானம் என்றென்றும் பெற்று,
நம்பிக்கை பிரதிபலித்திடும் கலைக்கூடம்.
வைரம், தங்கம், நவரத்தின நகைகள்,
வெள்ளிப் பாத்திரங்கள்—உருவகம்
அளித்திடும் அகம். வெள்ளிக் கோப்பைகள்,
கேடயங்கள், வெற்றிச் சின்னங்கள்.
உம்மிடியார் நுட்பத்தை வெல்லவும் முடியுமா?





இலவசம். அழகிய வெள்ளிக் குத்துவிளக்கு.
உம்மிடியார் நகை சேமிப்புத் திட்டம்,
மற்றுமோர் வசீகரத் திட்டம். மாதம் ரூ. 50/-
செலுத்தி, ரூ. 750/- மதிப்புள்ள நகையினைப்
பெறுங்கள். மாதம் ரூ. 100/- செலுத்தி,
ரூ. 1500 - மதிப்புள்ள பொருட்களை
அடைந்திடுங்கள்.
இன்றே சேர்ந்து, வெள்ளிக் குத்துவிளக்கு
ஒன்றை இலவசமாகப் பெறுங்கள்.

உம்மிடியார் பண்பாட்டின்
தலைமையகம்
உங்கள் உம்மிடியார்
ஜுவல்லர்ஸ்

VRG

உம்மிடியார் ஜுவல்லர்ஸ்

உம்மிடி ராமைய செட்டி,
குருஸ்வாமி செட்டி அண்டு கோ.
23-25, நேதாஜி போஸ் ரோடு,
சென்னை-600001. போன்: 31902 & 31758

ADWAVE/VRG-130A


சிவகாமியின் சபதம்

முப்பத்தைந்தாம் அத்தியாயம்

வாதாபி கணபதி

மனிதர்களுக்குள்ளே இரு வகை சுபாவம் உள்ளவர்கள் உண்டு. ஒரு வகையார் கொடூரமான காரியங்களையும் காட்சிகளையும் பார்க்கப் பார்க்க அவற்றைக் குறித்து அலட்சியமாக எண்ணத் தொடங்குகிறார்கள். அப்புறம் அத்தகைய கொடூரமான காரியங்களைச் செய்வது அவர்களுக்குச் சகஜமாகிவிடுகிறது. ஆரம்பத்தில் பரிதாபம் அளிக்கும் சம்பவங்கள் நாளடைவில் அவர்களுடைய மனத்தில் எத்தகைய உணர்ச்சியையும் உண்டாக்குவதில்லை.

இன்னொரு வகை சுபாவமுள்ளவர்களும் இந்த உலகில் இருக்கிறார்கள். கொடூரமான காட்சிகளைப் பார்க்கப் பார்க்க அவர்களுடைய உள்ளம் உணர்ச்சியின்றித் தடித்துப் போவதற்குப் பதிலாக ஆத்திரம் அதிகமாகிறது. பரிதாப சம்பவங்களைப் பார்க்கப் பார்க்க அவர்களுடைய மனவேதனை மிகுதியாகிறது. அநீதிகளையும், அக்கிரமங்களையும் காணக் காண அவற்றை உலகிலிருந்து ஒழிக்க வேண்டுமென்ற பிடிவாதம் அதிகமாக வளர்கிறது. பிந்திய சுபாவமுள்ள மாந்தர் கூட்டத்தைச் சேர்ந்தவர் சேனாதிபதி பரஞ்சோதி. இரத்தத்தைப் பார்க்கப் பார்க்க இரத்த வெறி அதிகமாகும் ராட்சஸ வர்க்கத்தைச் சேர்ந்தவரல்ல அவர். வாதாபிப் பெரும் போரில் போர்க்களத்திலிருந்து ஓடிய இரத்த வெள்ளத்தையும் மலை மலையாகக் குவிந்து கிடந்த மனித உடல்களையும் பார்த்து, படுகாயமடைந்து, உயிர் போகும் தருவாயில் அலறிக் கொண்டிருந்தவர்களின் ஓலத்தையும் கேட்ட பிறகு, பரஞ்சோதியின் உள்ளத்



இல், ''இந்தப் பயங்கரமெல்லாம் என்னத்திற்கு? மனிதருக்கு மனிதர் கொடுமை இழைப்பதும், கொன்று கொண்டு சாவதும் எதற்காக?'' என்ற கேள்விகள் எழுந்திருந்தன.

அத்தகைய மனநிலையில் சிவகாமி தேவியின் ஓலை வரவே, அதில் எழுதியிருந்த ஒவ்வொரு வார்த்தையும் உண்மை என்று அவருக்குப் பட்டது. மேலும் அவ்விதக் கொடுஞ் செயல்களில் தம்மைப் புகவொட்டாமல் தடுத்தாட்கொள்வதற்காக இறைவனே சிவகாமி தேவியின் மூலம் அத்தகைய உபதேசத்தைச் செய்தருளியதாக அவர் எண்ணினார். இல்லாவிடில், மாமல்லருக்கு நேராக எழுதாமல் ஆயனர் மகள் தமக்கு அந்த ஓலையை எழுத வேண்டிய காரணம் என்ன?

சிவகாமி தேவியே தமது சபதத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியமில்லை என்று சொல்லிவிட்டபடியால், மாமல்லரும் அதற்கு உடனே இணங்கி விடுவார் என்று பரஞ்சோதி கருதினார். புலிகேசி பத்து வருஷத்துக்கு முன்னால் பல்லவ நாட்டில் செய்த கொடுமைகளுக்காக இப்போது வாதாபி நகரின் ஜனங்கள் மீது பழி தீர்த்துக் கொள்வதில் யாருக்கு லாபம்? மேலும், இது இத்துடன் போகும் என்பது என்ன நிச்சயம்? பத்து வருஷங்களுக்கு முன்னால் புலிகேசி பல்லவ நாட்டில் செய்த அக்கிரமங்களுக்கு இப்போது வாதாபி மக்கள் மீது நாம் பழி வாங்குகிறோம். அதே மாதிரி இன்னும் சில வருஷம் கழித்து சளுக்க வம்சத்தார் மறுபடி பல்லவ நாட்டின் மீது பழிவாங்கப் பிரயத்தனப்படலாம் அல்லவா? நாட்டை ஆளும் மன்னர்கள் தங்கள் சொந்த கௌரவத்தையும் குல கௌரவத்தையும் நிலை நாட்டிக் கொள்வதற்காக ஒருவரையொருவர் பழி வாங்க முற்படுவதனால், இரு தரப்பிலும் குற்றமற்ற ஜனங்கள் அல்லவா சொல்ல முடியாத எத்தனையோ அவதிகளுக்கு உள்ளாகிறார்கள்!

இப்படியெல்லாம் சேனாதிபதி பரஞ்சோதியின் உள்ளம் சிந்தனை செய்து கொண்டிருந்தது. இடையிடையே மாமல்லர் விடுத்த கூரிய சொல்லம்புகளின் நினைவு அவருக்கு வேதனை அளித்துக்கொண்டிருந்தது. மாமல்லருக்கும் தனக்கும் உள்ளமும் உயிரும் ஒன்றே என்பதாக எண்ணி மனப்பால் குடித்துக்கொண்டிருந்ததெல்லாம் பொய்யாக அல்லவா போய் விட்டது? தம்முடைய யோசனையை அவ்வளவு அலட்சியமாகப் புறக்கணித்ததோடு, மற்றவர்களுக்கு முன்னால் தம்மை அவ்வளவு அகௌரவப்படுத்திப் பேசி விட்டாரே! அரச குலத்தினரின் சுபாவமே இப்படித்தான் போலும். இலங்கை நாட்டான் வந்ததிலிருந்து மாமல்லருடைய சுபாவமே மாறிப் போய் விட்டது! எல்லாம் அவனால் வந்த வினைதான்!

மாமல்லரிடம் மூன்று நாள் அவகாசம் கொடுக்கும்படி சேனாதிபதி பரஞ்சோதி கோரியபோது, கோட்டைத் தாக்குதலுக்குத் தக்க ஆயத்தம் செய்வதற்காகவே அவ்விதம் கோருவதாகக் கூறினார். இந்தக் காரணம் என்னவோ உண்மைதான். ஆயத்தமில்லாமல் ஆரம்பித்துப் பத்து நாளில் செய்யக்கூடிய காரியத்தைத் தகுந்த ஆயத்தங்களுடன் ஆரம்பித்து ஒரே நாளில் செய்துவிடலாம் என்னும் உண்மையைச் சேனாதிபதி பரஞ்சோதி தமது அநுபவத்தில் கண்டறிந்திருந்தார். எனவே அந்த முறையைத் தம் யுத்த தந்திரங்களில் முதன்மையான தந்திரமாக அநுஷ்டித்து வந்தார். ஆனால், சேனாதிபதி மூன்று நாள் அவகாசம் வேண்டுமென்று கேட்டதற்கு மேற்கூறிய காரணத்தைத் தவிர இன்னும் ஒரு முக்கிய காரணம் இருந்தது.

அது, இன்னமும் வாதாபிக் கோட்டைக்குள்ளே இ[illegible] சிவகாமிதேவி[illegible]க் கோட்டைத் தாக்குதல் ஆரம்பிப்பதற்குள்ளே





பத்திரமாக வெளியில் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்பது தான். பல்லவ சைனியம் கோட்டையை வெளியிலிருந்து தாக்க ஆரம்பிக்கும்போது, கோட்டைக்குள்ளே ஆயனரின் குமாரிக்கு ஏதேனும் ஆபத்து விளையாது என்பது என்ன நிச்சயம்!

இதைப் பற்றி ஏற்கனவே மாமல்லரும் பரஞ்சோதியும் கலந்து யோசனை செய்து, கோட்டைக்குள்ளே ஒருசிலரை முன்னதாக அனுப்புவதற்குச் சுரங்கவழி ஏதாவது இருக்கிறதா என்று கண்டு பிடிக்க சத்ருக்னனையும் குண்டோதரனையும் ஏவியிருந்தார்கள். இவர்களுடைய முயற்சி என்ன ஆகிறது என்று பார்ப்பதற்காகவும் சேனாதிபதி மூன்று நாள் அவகாசம் கேட்டார்.

அந்த மூன்று நாளும் முடியும் சமயம் இப்போது வந்து விட்டது. மூன்றாம் நாள் சூரியன் அஸ்தமிக்கும் நேரம். அன்றிரவு மாமல்லர் தமது முடிவைச் சொல்லி விட்டார். உடனே தாக்குதலை ஆரம்பிக்க வேண்டியதாயிருக்கும். ஆனால், சத்ருக்னனும் குண்டோதரனும் இன்னும் வந்தபாடில்லை. இந்தத் தர்மசங்கடத்துக்கு என்ன செய்வது? மாமல்லர் ஒருவேளை தம் கருத்தை மாற்றிக் கொண்டு சண்டை யில்லாமலே கோட்டையின் சரணாகதியை ஒப்புக்கொள்ளுவதாயிருந்தால் நல்லதாய்ப் போயிற்று. இல்லாவிடில், சிவகாமி தேவிக்கு அபாயம் ஒன்றும் நேராமல் பாதுகாப்பது எப்படி?

இவ்விதமெல்லாம் பலவாறாகச் சிந்தனை செய்து கொண்டே பல்லவ சேனாதிபதி வாதாபிக் கோட்டையின் மதில் ஓரமாகக் குதிரை மீது வந்து கொண்டிருந்தார். கோட்டைக்கு உட்புறத்தில் ஏதோ சலசலப்பு ஏற்பட்டிருந்ததாகத் தோன்றியது. இத்தனை நாளும் கோட்டைக்குள்ளே எல்லையற்ற மௌனம் சதா குடிகொண்டிருந்திருக்க அதற்கு மாறாக இப்போது ஏதோ நானாவிதச் சத்தங்கள் எழுந்து கொண்டிருந்தன. இதனால் பரஞ்சோதியின் உள்ளக் கொந்தளிப்பு அதிகமாயிற்று. கோட்டையின் பிரதானமுன்வாசலை அடைந்ததும் பரஞ்சோதி குதிரையை நிறுத்தினார். கோட்டையைத் தாக்குவதாயிருந்தால் அந்தப் பிரதான வாசலின் பிரும்மாண்டமான கதவுகளை முதன் முதலில் உடைத்தெறிந்தாக வேண்டும். அப்போது தான் ஏககாலத்தில் அநேக வீரர்கள் உள்ளே புகுவது சாத்தியமாகும். சொற்ப நேரத்தில் நகரைக் கைப்பற்ற முடியும். இதற்கு வேண்டிய ஏற்பாடுகள் முன்னமே செய்யப் பட்டிருந்தனவெனினும் கடைசி முறையாக யானைப் படை வீரர்களுக்குக் கட்டளையிடுவதற்கு முன்னால் ஒரு தடவை அந்த வாசலை நன்றாய்க் கவனிக்கச் சேனாதி













இவை அமெரிக்காவில் பிரபலமாகி இருக்கும் ஜப்பானிய முடியலங்காரங்களாம். 'பேஜண்ட்' பத்திரிகை சொல்கிறது.

— பானி


xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

பதி விரும்பினார். எனவே, குதிரை மேலிருந்து இறங்கி வாசலை நெருங்கி வந்தார். அப்போது அந்த வாதாபிக் கோட்டை முன் வாயிலில் அமைக்கப் பட்டிருந்த அருமையான வேலைப்பாடமைந்த சிற்பங்கள் அவர் கவனத்தைக் கவர்ந்தன. அந்தச் சிற்பங்களிலே கணபதியின் விக்கிரகம் ஒன்றும் இருந்தது. பரஞ்சோதி அதன் அருகில் சென்று கைகூப்பி நின்றார். மனத்திற்குள் பின்வருமாறு பிரார்த்தனை செய்து கொண்டார்: 'விக்னங்களை யெல்லாம் நிவர்த்தி செய்யும் விநாயகப் பெருமானே! நாங்கள் வந்த காரியம் நன்கு நிறைவேற அருள் புரிய வேண்டும். என் குருதேவரின் குமாரி சிவகாமி தேவிக்கு எவ்வித தீங்கும் நேரிடாமல் அவரைப் பத்திரமாய் அவருடைய தந்தை ஆயனரிடம் ஒப்புவிப்பதற்குத் துணை செய்ய வேண்டும். என்னுடைய இந்தப் பிரார்த்தனையை நீ நிறைவேற்றி வைத்தால் பதிலுக்கு நானும் உனக்கு இந்தக் கோட்டைத் தாக்குதலில் எவ்விதத் தீங்கும் ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறேன். உன்னை என் பிறந்த ஊருக்குக் கொண்டுபோய் ஆலயம் கட்டிப் பிரதிஷ்டை செய்வித்துத் தினந்தோறும் பூஜையும் நடத்துவிக்கிறேன்!'

இவ்வாறு பரஞ்சோதி பிரார்த்தனை நடத்தி முடித்த அதே கணத்தில் அந்தக் கோட்டை வாசலுக்குச் சற்றுத் தூரத்தில் நின்ற பல்லவ வீரர்களிடையே மிக்கப் பரபரப்புக் காணப்பட்டது. கோட்டை வாசலின் உச்சியைப் பார்த்த வண்ணம் அவர்கள் ஹாஹாகாரம் செய்தார்கள். அது சேனாதிபதியின் கவனத்தையும் கவரவே, அவர் அந்த வீரர்களை நோக்கினார். அவர்களில் ஒருவன், ''சேனாதிபதி! வெள்ளைக் கொடி இறங்கி விட்டது!'' என்று கூவினான்.

சேனாதிபதி தாமும் அவர்களிருந்த இடத்துக்கு விரைந்து சென்று கோட்டை வாசலின் உச்சியைப் பார்த்தார். மூன்று நாளாக அங்கே பறந்து கொண்டிருந்த சமாதான வெள்ளைக் கொடி காணப்படவில்லை! (தொடரும்)

குவாலியர் ரேயானின் மகத்தான 26 ஆண்டு காலப் பணி



தன்வலிமை பெறும் கனவை நனவாக்கி வரும் பணி.

ரேயான் துணிகள், ஸ்டேபிள் இழை, ரேயான்-கிரேடு பல்ப் (கூழ்), ரேயான் ஸ்டேபிள் நூலிழைத் தொழிற்சாலைகளுக்கான எந்திர சாதனங்கள் ஆகிய எல்லாவற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கென குவாலியர் ரேயான் செய்துவரும் முயற்சிகள், நாடு சுதந்திரம் எய்திய காலிலேயே தொடங்கிவிட்டன.

மூங்கில் மற்றும் இதர கெட்டி மரங்களிலிருந்து கரை திறனுள்ள ரேயான்-ரகக் கூழ் தயாரிப்பு, மற்றும் ரேயான், பல்ப், இவை சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான நுட்பவினமான எந்திர சாதனங்களின் உற்பத்தி முதலியவற்றிலே குவாலியர் ரேயான் முன்னோடியாக விளங்குவதனால், ரேயான் தொழிலிலே நம் நாடு தன்வலிமை பெற வழியமைத்துள்ளது.

இன்று, குவாலியர் ரேயானின் ஸ்டேபிள் நூலிழை உற்பத்தியளவு, 520 லட்சம் பேருக்கு ஆடை வழங்கப் போதுமானதாக உள்ளது. மரக் கூழ் உற்பத்தியோ, ஆண்டு தோறும் ஒரு லட்சம் டன்களுக்கு மேல்; இது செல்லுலோஸ் இழையளவிலே கணக்கிட்டால், 5.2 லட்சம் பருத்தி பேல்களுக்கு ஈடாகும்.


கடந்த பத்தாண்டுகளில், குவாலியர் ரேயான் நம் நாட்டின் பொக்கிஷத்திற்கு, வரிகளும், தீர்வைகளுமாக ரூ. 90 கோடி செலுத்தியுள்ளதோடு, அதே காலத்தில் ரூ. 360 கோடி அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது; இதை நோக்கும்போது, தன்வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்புக்கு குவாலியர் ரேயான் செலுத்திவரும் மகத்தான பணியின் பெருமை தெளிவாக விளங்கும்.

குவாலியர் ரேயான்—
தேச முன்னேற்றமே முதன்மை எனக் கருதுவோர்.

தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக் (வீவிங்.) கோ. லிட்., பிர்லாகிராம், நாக்தா (ம.பி.)

உங்களுக்காக பிலிப்ஸ் வழங்கும் இந்த அபூர்வமான மியூஸிக் ஸிஸ்டம் பல அரிய சிறப்புகள் கொண்டது...

இப்போது ரூ.100 குறைவாகக் கிடைக்கிறது!



- ஸ்டீரியோவாகவும் மாற்றிக் கொள்ளலாம்.
- மெயின்ஸ் மற்றும் பாட்டரிகளில் இயங்குகிறது.
- வீட்டிலும் வெளியிலும் இன்ப மூட்டுகிறது...எடுத்துச் செல்ல வசதியான மியூஸிக் ஸிஸ்டம்.

...இன்னும் பல்வேறு சிறப்புகள்!

மெயின்ஸ்-பாட்டரி ஸிஸ்டம் ஜீ.எஃப் 533



முந்துங்கள்! இப்போதே வாங்கி, லாபமடைவீர்!

OBM/5125TAM

பிலிப்ஸ்

அண்ணல் காந்தியின் ஆப்பிரிக்கத் தளபதி

காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவில் இந்திய சமுதாயத்தினரின் உரிமைகளுக்காக வெள்ளையருடன் போராட்டம் நிகழ்த்திய காலத்தில் அண்ணலின் வலக்கரமாகத் திகழ்ந்தவர் திரு பி. கே. நாயுடு. தென் ஆப்பிரிக்காவில் பிரபல வர்த்தகப் பிரமுகராகத் திகழ்ந்த திரு நாயுடு, காந்தியடிகள் தொடுத்த போராட்டங்களில் அவருடன் தோளோடு தோள் நின்று போராடியவர். அவருடைய பெண் வழிப் பேரர் திரு வி. சத்யா நாயுடு அண்மையில் சென்னைக்கு வந்தபோது சொன்னார் :

''எனது பாட்டனார் நேடால் மாகாணத்தில் பிறந்தவர், தென் ஆப்பிரிக்காவில் ஜோஹான்ஸ்பார்க் நகரில் வர்த்தகத் துறையில் பிரபலமாக விளங்கியவர். காந்தியடிகள் அங்கு போராட்டம் நிகழ்த்த ஆரம்பித்த பிறகுதான் என் பாட்டனாரும் அரசியலில் ஈடுபட்டார்.....

''அப்படியானால் மூன்று தலைமுறைகளுக்கும் மேலாக உங்கள் குடும்பம் தென் ஆப்பிரிக்காவில் வசித்து வந்துள்ளது, இல்லையா?''

''ஆமாம். டர்பனில் பிறந்த என் தந்தையார் திரு ஜி. வி. நாயுடுவும் வர்த்தகத் துறைப் பிரமுகர்தாம். நானும் டர்பனில் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறேன். ஜெனரல் மார்ச்செண்ட்ஸ். நானும் என் மனைவியும் இப்போது இந்தியாவுக்கு வந்துள்ள நேரத்தில் என் பிள்ளைகள் இருவரும் டர்பனில் எங்கள் வியாபாரத்தைக் கவனித்து வருகிறார்கள்.''

''உங்கள் பாட்டனார் திரு பி. கே. நாயுடு எப்போது அரசியலில் ஈடுபடத் தொடங்கினார்?''

''இந்த நூற்றாண்டின் துவக்கத்தில்தான். 1904ம் ஆண்டளவில். ஜெனரல் ஸ்மட்ஸுடன் காந்திஜி தமது சரித்திரப் புகழ் பெற்ற போராட்டத்தைத் துவங்கியபோது. அப்போது ஜெனரல் ஸ்மட்ஸ் டிரான்ஸ்வால் நிருவாகத்தில் காலனிகள் காரியதரிசியாக இருந்தார். காந்தியடிகளின் உற்ற நண்பராகவும் தளபதியாகவும் திகழ்ந்த என் பாட்டனார் பதினேழு முறைகளுக்கு மேல் சிறை சென்றிருக்கிறார். தென் ஆப்பிரிக்காவில் வாழ்ந்து வந்த ஆசிய மக்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட சட்டங்களை எதிர்த்துக் காந்திஜி நிகழ்த்திய போராட்டங்கள் அனைத்திலுமே என் பாட்டனாரும் பங்கு கொண்டார். அது சம்பந்தமாக அவர் தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்த ஒரு தூதுகோஷ்டியிலும் இடம் பெற்றார். காந்தியடிகள் பல முறைகள் என் பாட்டனாரின் இல்லத்துக்கு வந்திருக்கிறார். தங்கியிருந்திருக்கிறார். 1924ம் ஆண்டு ஜோஹான்ஸ்பார்க் நகரிலுள்ள 'எண்ட் வீதி'யில் (End Street) என் பாட்டனார் உயிர் நீத்தார். பெயர்ப் பொருத்தத்தைப் பாருங்கள்!''

சத்யா நாயுடு தம்பதியருக்கு இரு பெண்கள், இரு பிள்ளைகள். தாய்மொழி தெலுங்கு. தமிழ் நன்றாகப் பேசுகிறார். கல்விக்கூடங்களில் ஆங்கிலத்துடன் தமிழும் போதிக்கப்படுகிறதாம். இந்தத் தலைமுறையினர் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயேதான் பேசிக் கொள்கின்றனராம். அங்குள்ள முதியவர்கள் நல்ல தூய தமிழில் சரளமாகப் பேசுகிறார்களாம்.

தென் ஆப்பிரிக்காவாழ் தமிழர்களிடையே நமது பழக்கவழக்கங்கள், பண்பாடு, கலாசாரம் இவை மாறிப் போயிருந்தாலும், "வரதட்சிணை வாங்கும் வழக்கம் அறவே இல்லையாம்.

பேட்டி: பாணன்





✻ அன்னை கஸ்தூரிபா, அண்ணல் ஆகியோருடன் பி. கே. நாயுடு தம்பதி. திரு நாயுடுவுக்குப் பக்கத்தில் அமர்ந்திருப்பது அவர் மகள் — சத்யா நாயுடுவின் தாயார்.

✻ திரு சத்யா நாயுடு.

காந்தி ஜயந்தி சிந்தனைகள்

ராஜாஜி

ஜனநாயக அரசில் வெளிப் பார்வைக்கு எல்லாருக்கும் தெரிகிற முக்கியமான விஷயம் பெரும்பான்மையினர் நினைப்பது நடக்கிறது, சட்டமாகிறது என்பதுதான். இதற்குச் சிறுபான்மையினர் உட்பட அனைவரும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

இதிலிருந்து எழும் கேள்வி: எண்ணிக்கையில் அதிகமாக இருப்பவர்களுக்கு எல்லா அதிகாரங்களையும் தந்து விடுகிற இந்த ஏற்பாட்டினால் என்ன விசேஷ நன்மை?

இதற்குப் பதில்: சண்டை என்று ஏற்பட்டால் எந்தப் பக்கம் வெல்லுமோ, அது, அந்த வெற்றியின் பலன்களை அடைகிறது. ஆனால் இம்முறையில் சண்டை என்பது இல்லாமலே அப்பலன்களைப் பெறுகிறது. இரு தரப்பின் சக்தியையும் தலைகளை மோதவிட்டு அளக்காமல் தலைகளை எண்ணியே கணித்து விடுகிறோம். அதிகச் சக்தி உள்ள கட்சி ஆள்கிறது.

ஆனால் இது முழு உண்மையும் அல்ல. விகாரமான இந்த விளக்கம் முழு உண்மையாக இருக்க முடியாது. அப்படியானால் இதைவிட ஆழமான ஒரு விளக்கம் இருக்கிறதா?

சமூகம் சில சட்ட திட்டங்கள் இல்லாது போனால் சிதறிப் போகும். எனவே அந்தச் சட்ட திட்டங்களைச் சமூகம் ஏற்று ஒத்துழைப்பை நல்குகிறது. ஒருவரது தனிப்பட்ட துணிபுகளை மற்றவர்களுக்காகத் தியாகம் செய்வது ஒத்து வாழ்வதற்கு அவசியமான நிபந்தனை. பொது வாழ்வைக் காப்பதற்கான அவசியம் அதிகமாக ஆக, மாறுபட்ட கருத்துடையவர்கள் மேன்மேலும் தியாகம் புரிகிறார்கள். இப்படி அவர்கள் தியாகம் செய்யத் தயாரா யிருப்பதன் ரகசியம் என்ன? தியாகம் அவசியமாகிறது என்பது மட்டும்தான் காரணமா?

பலம் மிக்கவர்கள் செய்வதெல்லாம் சரி என்ற விகாரமான நியதி சிறுபான்மையினரின் தியாகத்துக்குக் காரணமாக அமைய முடியாது.

பெரும்பான்மையினர் விரும்புவது பொது நலனுக்காகத்தான் இருக்கும் என்ற எண்ணம்தான் சிறுபான்மையினர் விட்டுக்கொடுப்பதற்குக் காரணம் என்ற விளக்கம் ஓரளவு திருப்தி அளிப்பது.

ஆனால் மூன்றாவதாக ஒரு முக்கியமான அம்சமும் உண்டு. பெரும்பான்மை அரசைச் சிறுபான்மையினர் ஏற்பது நம்பிக்கையின் அடிப்படையில்தான். பெரும்பான்மையினர் நேர்மையாக அறிவாற்றலுடன் ஆட்சி புரிவர் எனச் சிறுபான்மையினர் நம்புகிறார்கள். இப்படி நம்பித் தங்களைப் பெரும்பான்மையினரிடம் ஒப்படைத்து விடுகிறார்கள். இது அவசியத்துக்காகக் கீழ்ப்படிவது அன்று. மனப்பூர்வமாக நம்பி ஒப்படைப்பதாகும். இந்த நம்பிக்கையைப் பெரும்பான்மையினர் ஆரம்பத்தில்பெற்றால் போதாது; தொடர்ந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டும். தமது அன்றாட நடத்தையால் தாம் நம்பிக்கைக்கு உகந்தவர்களே என நிரூபிக்க வேண்டும். பலதரப்பட்ட கருத்துக்களை வெளியிடவும் கேட்கவும் ஏற்ற நடவடிக்கைகளை ஆட்சியில் உள்ள பெரும்பான்மையினர் மேற்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட சில சாராரின் நன்மைக்காக மட்டும் தாங்கள் இயங்கவில்லை, மக்கள் அனைவருக்காகவும் இயங்குகிறோம் என்பதைக் காண்பித்துக் கொள்ள வேண்டும்.

இதையொட்டி ஜனநாயகக் கோட்பாடுகளும் செயல் முறைகளும் பல வளர்ந்துள்ளன. இவை சலுகைகள் அல்ல; ஜனநாயகத்தின் ஜீவன். சமீப காலமாக இவற்றுக்குச் சுதந்திரங்கள் என்ற பெயர் வழங்கி வருகிறது. இவை அரசியல் சாசனங்களில் அசைக்க முடியாதபடி இடம் பெறுகின்றன. இதன் விளைவாகப் பெரும்பான்மை எண்ணிக்கை என்பது இயன்றவரை பின்னணிக்குப் போய்விடுகிறது. அதை மறந்தும்கூட விட

வைஸ்ராய்க்கு காந்திஜி எழுதிய ஒரு கடிதம் பற்றி அறிந்ததும் சாஸ்திரியார் கோபாவேசம் அடைந்தார். அவருக்கு மாரடைப்பே ஏற்பட்டுவிட்டது!




லாம். இந்தக் கோட்பாடுகள் எந்த அளவுக்குத் திருப்திகரமாக உள்ளனவோ, இவற்றை எந்த அளவுக்குக் கடைப்பிடிக்கிறோமோ அந்த அளவுக்கு ஜனநாயகம் நீடிக்கும், வெற்றி பெறும்.

நம்பிக்கையே ஜனநாயகத்தின் உயிர்த் தத்துவம், எண்ணிக்கை அல்ல என்பதை நிரூபிக்கப் பல சந்தர்ப்பங்களில் சிறுபான்மையினர் ஜனநாயகத்தில் ஆட்சிப் பொறுப்பு ஏற்றுத் தங்கள் பணியைச் செவ்வனே செய்திருப்பதை எடுத்துக் காட்டலாம்.

இதுவரை அதிகமாகப் பிரபலமடையாத ஒரு சுவையான நிகழ்ச்சியைத் திரு பி. கோதண்ட ராவ் எழுதியுள்ள, 'வி. எஸ். சீனிவாச சாஸ்திரியின் அரசியல் வாழ்க்கை வரலாறு' நூலில் காணலாம்.

சுதந்திரம் பெறுவதற்காகப் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் நடந்த பேச்சு வார்த்தைகளினிடையே ஒரு சம்பவம். காந்திஜி சிறைச் சாலையில் இருந்தபடி 1944 செப்டம்பரில் வைஸ்ராய்க்கு ஒரு கடிதம் எழுதினார். முஸ்லிம் லீகும் காங்கிரஸும் ஓர் உடன்பாட்டுக்கு வர முடியவில்லை; ஓர் உடன்பாட்டுக்கு அவை வந்தாலொழிய பிரிட்டிஷார் வெளியேற மாட்டார்கள் என்ற நிலையில், இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை ஜின்னாவின் தலைமையில் உள்ள முஸ்லிம் லீகினிடம் ஒப்படைத்துவிட்டு பிரிட்டிஷார் வெளியேறலாம் என்று அக் கடிதத்தில் எழுதினார் காந்திஜி. இந்த ஏற்பாட்டுக்குக் காங்கிரஸைச் சம்மதிக்க வைக்கும் பொறுப்பைத் தாமே ஏற்றார். அவரது நோக்கம் என்ன? முஸ்லிம் லீகினால் இந்தியா ஆளப்படும் நிலையைக் காங்கிரஸ் ஏற்கும். அந்தச் சிறுபான்மையினர் நேர்மையான நல்ல ஆட்சியை வழங்குகின்றனரா என்று பார்க்கப் பிரிட்டிஷார் இங்கு இருக்க வேண்டாம். மூட்டை கட்டலாம்.

ஜின்னா இதற்கு நேர்மாறான நோக்கு கொண்டிருந்தார். பிரிட்டிஷ் ஆட்சியை அவரும் வெறுத்தார். ஆனால் பிரிட்டிஷார் போன பிறகு ஆட்சிப் பொறுப்பு ஏற்கும் பெரும்பான்மைக் கட்சியான காங்கிரஸ் முஸ்லிம்களிடம் நேர்மையாக நடந்து கொள்ளும் என்று அவர் நம்பவில்லை! எனவே பிரிட்டிஷாரின் மேற்பார்வைக்கும் ஆதிக்கத்துக்கும் உட்பட்ட சுதந்திரத்தையே அவர் விரும்பினார். எனவேதான் காந்திஜியின் மாற்றுத் திட்டம் பிறந்தது. காந்திஜியின் யோசனை அபத்தமானது என்றும் ஏதோ தந்திரம் இதில் இருக்கிறது என்றும் கருதி பிரிட்டன் ஏற்கவில்லை. இப்படி காந்திஜி மெய்யாலும் எழுதினார் என்று நான் சாஸ்திரியாரிடம் கூறியபோது அவருக்குக் கோபாவேசம் உண்டாகி மாரடைப்பே ஏற்பட்டு விட்டது. அதுவே இதிலுள்ள தார்மிகத் தத்துவத்தை அவருக்கு எடுத்துரைக்க முடியாமல் என்னைத் தடுத்து விட்டது. சாஸ்திரியார் இதனைப் படுதோல்வி என்றும் முஸ்லிம் லீகினிடம் சரணாகதி என்றும் கருதிவிட்டார்.





ஜனநாயகத்தை அலசும் இந்தக் கட்டுரையின் முடிவில் மேற்படி நிகழ்ச்சியை நான் எடுத்துக் காட்டுவதன் நோக்கம், பலதரப்பட்ட, பல அபிப்பிராயங்களை உடைய மக்கள் வாழும் சமூகத்தில் ஜனநாயகம் தழைப்பது எண்ணிக்கைச் சக்தியால் மட்டும் அல்ல என்றும் நம்பிக்கை என்னும் ஜீவ சக்தியின் அடிப்படையில்தான் என்றும் உணர்த்தவே. இந்த நம்பிக்கையைக் காப்பாற்றிக் கொள்வது ஜனநாயகத்தை வழிநடத்திச் செல்லும் அறிஞர்களின் முழு முதற் பொறுப்பாகும்.

காந்தி ஜயந்தியன்று இதனை நினைவு கூர்வோம்.

சுயராஜ்யா, அக்டோபர் 5, 1963
தமிழாக்கம்: கெ. ராஜேந்திரன்



இன்பத்

குல்ஷன் நந்தா

2

தேர்வு நெருங்கிக் கொண்டிருந்தது. அதன் காரணமாக மாணவிகளின் மகிழ்ச்சி—நெகிழ்ச்சிகள் எல்லாம் அடங்கிப் போயிருந்தன. தங்களுடைய கூத்துக்களுக்கும் கொண்டாட்டங்களுக்கும் தாற்காலிகமாக விடை கொடுத்துப் படிப்பில் கவனம் செலுத்த முயன்று கொண்டிருந்தார்கள். அதற்கான 'மூட்'—அதாவது மனப்பக்குவத்தை வரவழைத்துக் கொள்ள அவர்கள் எத்தனை பாடு படவேண்டியிருந்தது?

தேர்வுக்குப் படிப்பதற்கென்று விடுமுறை விட்டு அன்றுடன் மூன்று நாட்கள் ஆகியிருந்தன.

ஹாஸ்டலில் உள்ள 'கார்ட'னில் அங்கங்கே மாணவிகள் படிப்பில் ஈடுபட்டிருந்தார்கள். ஒருத்தி புல் தரையில் படுத்துப் படித்துக் கொண்டிருந்தாள் என்றால் இன்னொருத்தி மரத்தின் அடியில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது திடுமென்று தபால்காரர் தீனதயாளின் தலை தெரிந்தது. அடுத்த கணம் அந்தச் சூழலிலே ஒரு மாற்றம், ஒரு பரபரப்புத் தோன்றியது. பெண்கள் தங்கள் புத்தகங்களையும் நோட்டுக்களையும் அப்படியப்படியே போட்டு விட்டுத் தபால்காரரை நோக்கி ஓடினார்கள்.



இன்பத் தென்றலின் ஆசிரியர் ஸ்ரீ குல்ஷன் நந்தா ஹிந்தி இலக்கிய உலகிலே ஒரு புரட்சியைத் தோற்றுவித்தவர். அவர் சம்பவங்களுக்கு மேல் சம்பவங்களாகக் கதையை நடத்திச் செல்லும் அழகே தனி. ஏறக்குறைய நாற்பது நவீனங்கள் இவர் புகழ் பாடுகின்றன. அவற்றில் பல வெள்ளித் திரையிலும் வெற்றி வாகை சூடியுள்ளன. இன்பத் தென்றல் இதயம் குளுகுளுக்க வீசுவதில் என்ன வியப்பு?

மாணவிகளின் படை தம்மை நோக்கி வருவதைக் கண்ட தபால்காரர் ஒரே மூச்சில் கமலா, விமலா, நிஷி, மீனு, ரோஸி என்று எத்தனையோ பெயர்களைக் கூப்பிட்டார். ஆர்வத்துடன் நீண்ட கைகள் வழியே, துடிக்கும் உள்ளங்களுக்கு அவர்களுக்குப் பிடித்தவர்களின் கடிதங்களைச் சேர்ப்பித்தார். கடைசியில் அந்த நீல வண்ண உறையை எடுத்தார். அதற்குரிய பெண்ணின் பெயரைப் பெயர் சொல்லி அழைக்காமலே, மகிழ மரத் தடிக்குச் சென்றார். அங்கே நின்ற வண்ணம் ரூபா வைத்த கண் வாங்காமல் தபால் பட்டு

பெண்கள் அனைவரும் வியப்பில் விழிகள் விரிய இந்தக் காட்சியைக் கண்டனர். இப்படி ஓர் அற்புத நிகழ்ச்சி நிகழக் கூடும் என்று அவர்கள் கனவிலும் கருதவில்லை. கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தனர். முதன் முதலாக அன்றுதான் ரூபாவின் பெயருக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. அது அவர்களை வியப்பில் ஆழ்த்தத்தானே செய்யும்?





தென்றல்

தமிழாக்கம்: ரா. வீழிநாதன்

வாடாக் காட்சியை ரசித்துக் கொண்டிருந்தாள். ஆனாலும் தினம் போன்ற மௌனமும் வாட்டமுமே அவள் முகத்தில் கொப்பளித்துக் கொண்டிருந்தன.

தினதயாள் அவளைத் தமதருகே வருமாறு சாடை காட்டி அழைத்தார். ரூபாவின் விழிகளிலே ஒரு மின்னல் பளிச்சிட்டது. தபால்காரரின் பக்கம் பாய்ந்து முன்னேறியவள், சட்டென்று என்ன நினைத்துக் கொண்டாளோ, காலில் ஆணி அடித்தவள் போல் நின்றுவிட்டாள். தான் ஏதோ தவறாகப் புரிந்து கொண்டு தவறு செய்து விட்டவள் போலத் தபால்காரரைப் பரிதாபமாகப் பார்க்கலானாள். தபால்கார தினதயாள் தாமே அவளை அடைந்து நீல நிற உறையைு அவளிடம் நீட்டினார்.

ரூபா நடுங்கும் கைகளால் அந்த உறையை வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். அதைத் தொடர்ந்து அதற்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டுத் தன் அறையை நோக்கி ஓடினாள். வியப்பில் ஆழ்ந்த பெண்கள் அவளது இந்தச் செய்கை விசித்திர உணர்வோடு பார்த்தனர். கண்களாலேயே பலப் பல ஜாடைகள் காட்டினர். அவர்களுடைய விழிகளில் கேள்விகள் மலையாகக் குவிந்தன. அஞ்சுவின் நிலையைப் பற்றியோ கேட்கவே வேண்டாம். இந்த எதிர்பாராத நிகழ்ச்சியில் அவள் மரமாகி நின்றாள்.

''அடே! இன்று என்ன, சூரியன் மேற்கிலிருந்து உதிக்கிறானே!'' என்று கேட்டவாறே ரஜியா நெருங்கினாள்.

''தபால்கார ஐயா! அந்தக் குட்டி பெயருக்கு யாரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது?'' என்று கேட்டாள் நிஷி.

''எனக்கு என்ன தெரியும், குழந்தை? ஒவ்வொருவருக்கு வருகிற கடிதத்தையும் நான் பிரித்துப் படித்துப் பார்க்கிறேனா என்ன?'' சூடாகக் கேட்டார் தபால்கார நீனதயாள்.

''ஓ! ஐ ஆம் ஸாரி, தபால்கார ஐயா!'' நிஷி தன் முட்டாள்தனத்துக்காக உதடுகளைக் கடித்துக் கொண்டாள்.

தபால்காரர் கடிதங்களை வழங்கிவிட்டு, அலுவலகத்தை நோக்கிச் சென்றதும், பெண்கள் ரூபாவின் பெயருக்கு வந்த கடிதத்தையே தங்கள் பேச்சுக்குப் பொருளாக எடுத்துக்கொண்டனர்.

''ஐ திங், இட் இஸ் எ லவ் லெட்டர்!'' அஞ்சு அவர்களுடைய ஆவலைத் தூண்டி விட்டாள்.

''ஓ மை காட்! லவ் லெட்டர்?'' மீனுவின் வாய் அவளை அறியாமலேயே குரல் கொடுத்தது.

''ஆம், காதல் கடிதம்... காதல் கடிதமே தான்!''

''யார் எழுதியிருப்பார்கள்?''

''பிரின்ஸ்!''

''என்ன பிரின்ஸா?'பிரின்ஸ்' என்றால் அரச குமாரன்!எந்த நாட்டு அரச குமாரனோ?''

''ரூபாவின் மனத்தை ஆட்கொண்ட அரச குமாரன்!''

''உனக்கு அவனைத் தெரியுமா?''

''தெரியும். ஆனால் பார்த்ததில்லை; கேள்விப்பட்டதுதான்!''

''யார் சொல்லி?''

''ரூபாவே என்னிடம் சொன்னாள்!''

''ரூபாவே சொன்னாளா?.... புதுக் காதலோ?''

''ஆமாம். புத்தம் புதிய காதல்!''

சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவியது. கூடியிருந்த பெண்கள் ஒவ்வொருவரும் பொருள் பொதியப் பார்த்துக் கொண்டனர். அவர்களது மௌனம் விழிகளே பேசி ஒரு முடிவுக்கு வந்தன. அடுத்த கணம் அவ்வளவு பேரும் ரூபாவின் அறையை நோக்கிப் படையெடுத்தனர்.

அவர்களது ஊகம் சரியாகவே இருந்தது. அறைக் கதவு சாத்தியிருந்தது. ஆனால் கதவு இடுக்கு வழியே உள் காட்சி அவ்வளவும் தெளிவாகத் தெரிந்தது. ரூபா படுக்கையில் படுத்திருந்தாள். பிரிக்கப்பட்ட நீல உறை அவளது மார்பில் கிடந்தது. அரைக் கண்களால் அந்தக் கடிதத்தைப் படித்து மகிழ்ந்ததோடு, அடிக்கொரு முத்தம் கொடுத்து ஆரத் தழுவிக் கொண்டாள். வெகு நேரம் வரையில் பெண்கள் அவளது இந்த அசாதாரண விந்தைச் செயலைக் கண்டு ரசித்துக்கொண்டிருந்தனர். அதோடு திருப்தியுறாமல் அந்தக் கடிதத்திலுள்ள விஷயத்தை அறிய வேண்டும் என்ற ஆவல் அவர்களை உந்தித் தள்ளியது.

ரூபா தன்னை மறந்தவள் போல் படுத்திருந்தாலும் தனது சுற்றுச் சூழலைச் சிறிதும் மறக்கவில்லை. 'கதவு இடுக்கு வழியே எத்தனை தீய விழிகள் அவளது காதலைச் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருக்கும், எத்தனை உள்ளங்கள் பொறுமைத் தீயில் வெந்து துடித்துக் கொண்டிருக்கும்?' என்பதையெல்லாம் நன்கு உணர்ந்தே இருந்தாள். அது மட்டுமா? அவர்கள் மேல் மூச்சும் கீழ் மூச்சும் விட்டுப் பெருமூச்செறிவதைக் கற்பனைக் கண்களால் கண்டு மனத்துள் மகிழ்ந்து கொண்டும் இருந்தாள். ஒரு கடிதம், — ஒரே கடிதம் அத்தனை பெண்களுடைய பார்வைகளையும் எப்படி ஒருமுனைப்படுத்திவிட்டது! காதலுக்கு — காதல் கடிதத்துக்குத்தான் எத்தகைய காந்த சக்தி?

அவளோடு பேச்சு வார்த்தை கூட வைத்துக் கொள்ள விரும்பாத எத்தனை பெண்கள் அவளோடு இன்று பேசத் துடித்தார்கள்; ஆண்டவன் அவள் மீது பொழிந்த அருள் மழையைப் பற்றித் தெரிந்து கொள்ளத் தவித்தார்கள்? இத்தனை துடிப்பும், தவிப்பும் எதற்கு? — ரூபாவுக்கு யாரிடமிருந்து காதல் கடிதம் வந்தது என்பதை அறிந்து கொள்வதற்கு! வேறு எதற்கு?

அடுத்த இதழில்...

ஹா... ஹா... ஹா... ஹி... ஹி... ஹிப்பி!

•

தலைப்பைப் பார்த்தால் போதாதா?

தரஜா தயாரிப்பு என்றால் காணாதா?





ARMS-HC-18-140 TAM

கூந்தலுக்கு சாயம் இப்படிச் பூசாதீர்கள்!





பாரதத்திலேயே
முதன்முதல்
தயாராகும் தானே-பரவும்
ஹேர் டை
உபயோகியுங்கள்.

புதியது!

கோத்ரெஜ்

பர்மனெண்ட் ஹேர் டை

சமமாகவும் இயற்கையாகவும் தானே பரவுகிறது

இப்போது, கூந்தலை இழை இழையாகப் பிரித்துச் சாயமேற்றும் தொல்லையில்லை. கிருபணம் பெற்ற, தன்னிகரற்ற கோத்ரெஜ் பார்முலா (ஆக்க இலக்கணம்) கூந்தலுக்குச் சாயமேற்றுவதை, கூந்தலை அலசுவதைப் போல அத்தனை எளிதாக்கி விட்டது—காரணம், நீங்கள் பூசும்போதே, அதன வண்ணம், சமமாகவும் எளிதாகவும் தானே பரவுகிறது.

கோத்ரெஜ் பர்மனெண்ட ஹேர் டை—இதில் தீங்கு விளைவிக்கும் ரசாயனப் பொருட்கள் எதுவுமில்லை. மென்மையான, மனதுக்கினிய நறுமணம் கொண்டது. உங்கள் கூந்தலைப் பல வாரங்கள் மென்மையாகவும் இளமை பெருகோடும் இயற்கையான கருமையோடும் விளங்கச் செய்கிறது.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் கூட! 2 வண்ணங்கள்:
இயற்கையான கருமை,
கரும் பழுப்பு.



கோத்ரெஜ் பர்மனெண்ட் ஹேர் டை, இதர ஹேர் டைகளை, பிந்தியவைகளாக்கிவிட்டது. ஷாம்பூ தேய்ப்பது போல் அத்தனை எளிது, இதனை உபயோகிப்பது.

CMGS-69-162 TAM

இதையொட்டி மாணவிகளின் அடுத்த நடவடிக்கை என்னவாக இருக்கும் என்பதையும் அவள் அறிந்திருந்தாள். அவள் ஜன்னலுக்கு அருகில் சில உருவங்கள் நிழலாடுவதைப் பார்த்துவிட்டாள். இன்னும் சிறிது நேரத்தில் ஒருசில குறும்புக்காரப் பெண்கள் அழியில்லாத ஜன்னல் வழியே தாண்டிக் குதித்து உள்ளே அறைக்குள் வந்துவிடுவார்கள் என்பதையும் உணர்ந்திருந்தாள். இது தெரிந்தே, வேண்டுமென்றே அவள் ஜன்னல் கதவுகளைத் தாளிடாமல் திறந்தே வைத்திருந்தாள். எனவே, பேசாமல் அவர்கள் வருகையை எதிர்பார்த்த வண்ணம் படுத்திருந்தாள்.

அவள் நினைத்தது நடந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் வெறுமனே சாத்தியிருந்த ஜன்னல் கதவுகள் பட்டெனத் திறந்து கொண்டன. தொடர்ந்து ஒருசேரப் பல முகங்கள் உள்ளே எட்டிப் பார்த்தன. ரூபா அச்சத்தில் கீச்சிட்டாள். விருட்டென்று எழுந்து படுக்கையில் ஒரு மூட்டையென உட்கார்ந்து கொண்டாள். ரஜியாவும் நிஷியும் ஜன்னலைத் தாண்டிக் குதித்து உள்ளே நுழைந்தார்கள். உள்ளே நுழைந்ததும் முதல் காரியமாக ரஜியா அறைக் கதவைத் திறந்து விட்டாள். அவ்வளவுதான்; பெண்கள் மந்தை ரூபாவின் அறையை மொய்த்து விட்டது.

ரூபா தன்னைச் சுற்றி இப்படி ஒரு முற்றுகையைக் கண்டதும், கடிதத்தைக் கைக்குள் மூடிக்கொண்டு, ''இதென்ன, காட்டுமிராண்டிச் செயல்?'' என்று கடிந்தாள்.

''காட்டுமிராண்டிச் செயல் அல்ல. வெகு நாகரிகமான எச்சரிக்கை. இங்கு யாரும் எந்தக் காரியத்தையும் ஒளிவு மறைவாகச் செய்யக் கூடாது!''

''நான் எனக்கு வந்த கடிதத்தைப் படிக்கிறேன். இதை நான் ஒளிக்கவோ, மறைக்கவோ இல்லையே!''

''கடிதத்தில் உள்ள செய்தியை ஒளிப்பதும் தவறுதானே? அதை அறிந்து போவதற்காகத்தான் நாங்கள் இங்கு வந்திருக்கிறோம்!'' என்றாள் ஒரு பெண்.

''அதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியது அநாவசியம். கடிதம் எனக்கு வந்தது. அதிலுள்ள செய்தி எனக்குச் சொந்தமானது.''

''இருக்கலாம். ஆயினும், 'ஸ்டூடண்ட் டிஸிப்ளின்' — மாணவர் ஒழுங்குமுறையைக் காப்பது எங்கள் கடமை!'' என்றாள் இன்னொரு பெண்.

''ஆமாம், ரூபா! சொல்லிவிடு, என்ன எழுதியிருக்கிறார் உன் பிரின்ஸ்? ஒளிக்காமல் மறைக்காமல் சொல்லிவிடு!'' என்றாள் ரஜியா, உரத்த குரலில் கண்டிப்பும் கறுவுமாக.

''இது என் பிரைவேட் லெட்டர், சொந்தக் கடிதம். எனக்கு யார் என்ன எழுதினால் உங்களுக்கு என்ன?'' — ரூபா கடிதத்தை இன்னும் இறுக்கிப் பற்றிக் கொண்டாள்.

அத்தனை பெண்களின் விழிகளும் அவள் கைக்குள் கசங்கிய நீல உறையையே நோக்கின; அமைதியாகத்தான். ஆனால் அந்த அமைதியில் வீசப் போகின்ற புயலின் அறிகுறி தென்பட்டது. ஏதோ களேபரம் நடக்கப் போகிறது என்பதை ரூபாவும் புரிந்து கொண்டாள். அவள் பதற்றத்துடன் விழிகளைச் சுழற்றி ஓடவிட்டு, ''நீங்கள் என்னதான் விரும்புகிறீர்கள்? இன்றுவரையில் நான் யாருடைய சொந்தக் கடிதத்தையும் படித்தது இடையாது. அதே போல...'' என்றாள்.

''நீ படிக்கவில்லையென்றால், அது எங்கள் குற்றமா? உன்னைப் படிக்காதே என்று நாங்கள் தடுத்தோமா?'' என்றாள் அஞ்சு.

''இருந்தாலும் நான் உங்களைப் படிக்க விடமாட்டேன் இந்தக் கடிதத்தை.''

''ஏன் படிக்க விடமாட்டாய்? நாங்கள் உன் கடிதத்தைப் படிக்காமல் இவ்விடத்தை விட்டுப் போகப் போவதில்லை. நீ இந்த ஹாஸ்டலில் இருக்க வேண்டுமானால், இங்குள்ள அனைவரும் இந்தக் கடிதத்தைப் படித்தே தீருவோம்!'' என்று கூறிக்கொண்டே நிஷியும் அஞ்சுவும் அவள் எதிரே வந்து வீராங்கனையென நின்றார்கள்.

''நோ, நோ, நோ!'' என்று ரூபா கூவியவாறே கடிதத்தைத் தன் ப்ளவுஸில் மறைத்துக்கொள்ள முயன்றாள்.

ஆனால் ரஜியாவும் அஞ்சுவும் அவள்மேல் சேர்ந்தாற்போல் பாய்ந்தார்கள். ரூபா, அவர்களைப் பிடித்துத் தள்ளிவிட்டுத் தான் ஒருபுறம் ஒதுங்கிக் கொண்டாள். அப்

அண்ணலின் குரல்!



நமது நாட்டின் விலைமதிக்க முடியாத செல்வமாகிய காந்தீயத்தை ஏழே ரூபாய்ச் செலவில் பெற்று உய்ய வழி வகுத்திருக்கிறார் திரு திருமலை.

தபால் மூலம் கல்வி என்கிற முறையில் காந்திஜியின் வாழ்க்கை வரலாற்றையும் காந்திய சிந்தனையையும் ஒருவர் கற்றுத் தேற முடியும்.

வாரம் ஒரு பாடமாக மூன்று மாதங்களுக்குப் பாடங்கள் அனுப்புகிறார். இரண்டு பரீட்சைகள் உண்டு. முதல் பரீட்சை காந்திஜியின் வாழ்க்கை, வரலாறு பற்றியது. மற்றது காந்தீயம் குறித்து. இந்தப் பரீட்சைகளில் வெற்றி பெறுவோர் நற்சான்றிதழ் பெறுகின்றனர்.

ஆங்கிலம் அல்லது தமிழில் இதுவரை ஆயிரம் பேர்களுக்கு மேல் இந்தப் பாடத் திட்டங்களைப் பெற்றுப் பயனடைந்திருக்கிறார்கள் என்றால் நாட்டின் எதிர்காலம் பற்றி நம்பிக்கை கொள்ளலாம் தானே? விலாசம்: 6, கென்னடி முதல் தெரு, சென்னை-4.

பொழுது நிஷியுடன் மற்றப் பெண்கள் அவளைச் சூழ்ந்து கொண்டனர். எல்லோருமாகச் சேர்ந்து அந்தக் கடிதத்தைப் பிடுங்க முயன்றனர்.

இந்த இழுபறியில் ரூபாவின் பிளவுஸ் தையல் விட்டுக் கிழிந்து விட்டது. அவள் அவர்களைத் திட்டிக் கொண்டே தன் மார்பகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டாள். கசங்கிய கடிதம் கீழே விழுந்தது. சில பெண்கள் அதை எடுப்பதற்காகக் குனிந்தனர். ஆனால் எடுக்கப் போன அவர்களது கைகள் அப்படியப்படியே நின்றுவிட்டன. அவர்கள் எடுப்பதற்கு முன்பாகவே, கடிதத்தின் மீது யாரோ தன் காலை அழுத்திப் பதித்து விட்டார்கள்.

நிமிர்ந்து பார்த்த பெண்கள் விக்கித்துக் கீச்சொலி எழுப்பினர். சப்த நாடியும் ஒடுங்க அவர்கள் ஒருவரையொருவர் செய்வதறியாது பார்த்தனர்.

அவர்கள் எதிரே நின்று கொண்டிருந்தது ஹாஸ்டல் வார்டன் ஸிஸ்டர் தெரெஸா. கூச்சலும் குழப்பமும் தன் அறை வரையில் ஒலிக்கவே, ஸிஸ்டர் தெரெஸா அங்கு வந்தாள். கீழே விழுந்த கடிதத்தை எடுப்பதற்காகப் பெண்கள் போட்டி போட்டுக் கொண்டு பாய்வதைக் கண்டதும், அவள் அதன்மீது தன் காலை ஊன்றி விட்டிருந்தாள்.

ஸிஸ்டர் தெரெஸா குனிந்து அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டதைக் கண்டதும் ரூபாவுக்கு வியர்த்து விறுவிறுத்து விட்டது. அவள் பார்வையைத் தாழ்த்திச் சிலையாக நின்று விட்டாள். மற்றப் பெண்களோ வாய் அடைத்துப் போயினர்.

''என்ன இது?'' குரலில் கோபக்கனல் தெறிக்க ஸிஸ்டர் தெரெஸா ரூபாவை நோக்கினாள்.

''ஒரு கடிதம்.'' நடுங்கும் குரலில் விடை பகர்ந்தாள் ரூபா.

''யாருடையது?'' கேட்ட வண்ணம் ஸிஸ்டர் பாய்ந்து அஞ்சுவின் கையிலிருந்த வெற்றுறையையும் பிடுங்கிக் கொண்டாள்.

ரூபா ஏதோ சொல்ல வாய் எடுத்தாள். ஆனால் சொல்லத்தான் முடியவில்லை.

''இதோ பார். இதெல்லாம் இங்கே கூடாது.... நீ உடை மாற்றிக்கொண்டு, உடனே என் அலுவலகத்துக்கு வா!'' என்று கூறிய வண்ணம் ஸிஸ்டர் தெரெஸா கடிதத்தை உறையில் இட்டாள். அங்கிருந்து போகத் திரும்பியவள் என்ன நினைத்துக் கொண்டாளோ, மாணவிகளைப் பார்த்துக் கூறினாள்: '''நோ நாய்ஸ் கேர்ல்ஸ்!''

அவள் சென்றதும் பெண்கள் வகையாக மாட்டிக்கொண்டு விட்ட ரூபாவைச் சூழ்ந்து கொண்டனர். அவள் கிழிந்து போன பிளவுஸ் துண்டைப் பிடித்துக் கொண்டு பதற்றத்தோடு நின்று கொண்டிருந்தாள். பயத்தில் அவள் உடல் சொட்டச் சொட்டத் தெப்பமாக நனைந்திருந்தது.

''ஐ ஆம் ஸாரி ரூபா!'' அஞ்சு அவளை நெருங்கிக் கேட்டாள்: ''நீ தவறாக எடுத்துக் கொள்ளவில்லையே?''

''வேடிக்கை இப்படி வினையாகும், விஷயம் ஹாஸ்டல் வார்டன் வரை போகும் என்று நாங்கள் என்ன கண்டோம்?'' என்று ரஜியா வருத்தம் தெரிவித்தாள்.

''நடந்தது நடந்து விட்டது... நான் ஒரு வழி சொல்லுகிறேன். எவனோ சோதாப் பயல் இந்தக் குறும்பு செய்திருக்கிறான் என்று நீ வார்டனிடம் சொல்லிவிடு!'' அஞ்சு தன் ஆலோசனையைத் தொடர்ந்தாள்: ''எப்படிச் சொல்லணும், தெரியுமா? மனத்தில் உள்ள பயமும் பதற்றமும் முகத்தில் தெரியக் கூடாது. அப்படிப் பேச வேண்டும்.''

ரூபாவுக்கு அவர்கள் பேச்செல்லாம் அப்பொழுது அம்பாகக் குத்தியது. எதிர்பாராத இந்த நிகழ்ச்சியினாலேயே அவள் அதிர்ந்து போயிருந்தாள். பற்றாக்குறைக்கு அவர்கள் விடாமல் தொணதொணக்கவே, ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. ''ஓ! யூ ஷட் அப்!'' என்று எரிந்து விழுந்தாள்.

இதைக் கேட்டுப் பெண்கள் நிலைகுத்த விட்டாற்போல் நின்று விட்டனர். அதற்கு முன் ரூபாவுக்கு இவ்வளவு கோபம் வந்து அவர்கள் பார்த்ததில்லை. அவள் அதட்டலைக் கேட்டும், அவள் எதிர்கொள்ளப் போகிற நிலையைப் பற்றிக் கற்பனை செய்து, எண்ணிப் பார்த்தும் நிலைகுலைந்த அவர்கள் சொல்லாமல் கொள்ளாமல் அங்கிருந்து நழுவலாயினர். கடைசியில் அஞ்சு மட்டுமே எஞ்சியிருந்தாள். அவள் ரூபாவை நெருங்கி, அவளது முதுகைத் தட்டிக் கொடுத்து, ''தைரியமாய் இரு ரூபா!'' என்றாள். அப்புறம் அவளுமே அங்கிருந்து போய்விட்டாள்.

(தொடரும்)

காந்தி ஜெயந்தி விழா

கிண்டி - காந்தி மண்டபத்தில்

1975 அக்டோபர் 2ந் தேதி முதல் 5ந் தேதி வரை

1975 அக்டோபர் 2ந் தேதி

பகல் 12 முதல் மாலை 4 மணி வரை

காலை 8 மணிக்கு பஞ்சரத்தன கீர்த்தனை-நாதஸ்வரம்

காலை 10 மணிக்கு முதல்வர் கண் ஒளி வழங்குதல் சுகாதார அமைச்சர் திரு க. அன்பழகன் உரையாற்றுகிறார்.

காலை 11 மணிக்கு பித்துக்குளி முருகதாஸ் துதி கீதங்கள்

அகண்ட பஜனை - பல மாதர் சங்கங்கள்

மாலை 4-15 முதல் 4-45 மணி வரை குரான் — பைபிள் — கீதை

மாலை 5 to 6 மணி வரை கிளாரினெட் இசை

மாலை 6 to 7 மணி வரை ஆளுநர் கே. கே. ஷா, மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் கரண் சிங் முதல்வர் கருணாநிதி உரைகள்.

மாலை 7 to 8-30 மணி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் துதி கீதங்கள் - ராம் துன்.

1975 அக்டோபர் 3ந் தேதி

காலை 9 மணிக்கு திருமதி பி. லீலா - துதி கீதங்கள்

காலை 10 மணிக்கு அமைச்சர் கே. ராஜாராம் உரையாற்றுவார்.

மாலை 5 மணிக்கு திரு வீரமணி கோஷ்டியினரின் பக்தி கீதங்கள்.

மாலை 6 to 7 மணிக்கு திரு ம. பொ. சி., திரு கே. திரவியம், திரு வி.பி.வி. ராஜன் உரையாற்றுதல்.

மாலை 7 to 3-30 மணிக்கு திரு ஜேசுதாஸின் துதி கீதங்கள் - ராம் துன்.

1975 அக்டோபர் 4ந் தேதி

மாலை 5 மணிக்கு திருவாளர்கள் பி. வி. ராமன் பி லட்சுமணன் - துதி கீதங்கள்

மாலை 6 மணிக்கு ஸ்ரீமதி மதுபென்ஷா, ஸ்ரீமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீமதி சௌந்தரா கைலாசம் - உரையாற்றுவார்கள்.

மாலை 7 to 8-30 ஸ்ரீமதி எம். எல். வசந்தகுமாரி துதி கீதங்கள் - ராம் துன்.

1975 அக்டோபர் 5ந் தேதி

மாலை 5 மணிக்கு குமாரி பிரேமா, குமாரி ஜெயா துதி கீதங்கள்.

மாலை 6 மணிக்கு நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் அமைச்சர் ஓ.பி. ராமன், திரு என். மகாலிங்கம், திரு டி. எஸ். பார்டே உரைகள்.

மாலை 8-30 மணிக்கு சீர்காழி கோவிந்தராஜன் துதி கீதங்கள் - ராம் துன்.



எப்படியோ அந்த அடைமொழி வைத்தியநாதன் என்ற அழைக்கப்பட்ட 'வைத்தா'வுக்கு ஒட்டிக்கொண்டது. வைத்தா பரோபகாரி; பரம உபகாரி. அதற்காக அவனுக்கு எப்படியோ ''கம்யூனிஸ்ட் வைத்தா'' என்ற பெயர் வழங்கி வந்தது. மார்க்ஸ், லெனின் தத்துவம் புரியாத நபர் வைத்தா. ஏன்? உள் நாட்டும் அக்கட்சியின் கோட்பாடுகள், கொள்கைகள் என்ன என்ற விவரம், செங்கொடித் தலைவர்கள் யார் யார் என்ற விவரம்—இவை ஏதும் அறியாதவன் வைத்தா. ஆனால் சமூகத்தில் ஏனோ தெரியவில்லை, அந்த அடைமொழியோடு அழைத்தால்தான் யாரும் அவனைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிந்தது.

அத்தகைய தோழர் சமையற்கலைத் தொழிலாளியாகத் தம் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டவர். பெருந் தலைவர்களுக்குரிய இளமை வாழ்க்கைக் கனவெல்லாம், குறிப்பிடத்தக்க குணதிசயங்கள் எல்லாம் வைத்தாவிடம் இல்லை. கிராமத்தில் நொடித்துப் போன குடும்பத்தின் புத்திர பாக்கியங்களில் ஒருவனாகப் பிறந்து, குடும்பப் பிரச்னைகள் என்ற பூகம்பத்திலிருந்து தப்ப வெளியேறியவன். குருகுல வாசமாக 'எக்ஸ்பர்ட்' குருசாமி மாஸ்டரிடம் எடுபிடியாகச் சேர்ந்ததுதான் அவனுடைய நினைவிலிருக்கின்ற குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்ச்சி. அன்றே குருசாமியின் அடக்கு முறைகள் வைத்தாவைச் சிந்திக்க வைத்தன. அடக்கு முறைகள் மட்டுமல்ல! முதலாளித்துவம் என்றும் சுரண்டல் ஆதிக்கம் என்றும் பேசப்படுகின்ற வர்க்க பேத வார்த்தைகளை அனுபவ ரீதியாக உணர்ந்தான் வைத்தா. மாஸ்டர் குருசாமி ஒரு வேலையை ஏற்க ஒப்பந்தம் பேசினால் அதில் பாதிக்கு மேல் அவரைச் சேரும். வேலை நடக்கையில் தமது அதட்டல், உருட்டல்களாலேயே அன்றைய கூலிக்காகவும், சாப்பாட்டுக்காகவும் தம்மைச் சுற்றியிருக்கின்ற தொழிலாளர் குழாத்தை, பம்பரமாகச் சுழற்றிப் பிழிந்துவிடுவார். வேலையில் நல்ல பெயர் கிடைத்தால் அது குருசாமியைச் சேரும். உப்போ, உறைப்போ குறைந்தால் அதற்குப் பலியாவது வைத்தா போன்ற 'சிஷ்ய வர்க்கங்களாகும். அன்றையக் கூலி வஜா செய்யப்படுவதுடன், அடி உதைகளும் கிடைத்த நாட்கள் வைத்தா

அறிமுக எழுத்தாளர்!



பரோபகாரி வைத்தா

சிவ. அரிஅரன்

வின் குருகுல வாசத்தில் மறக்க முடியாதவை. இவ்வளவும் முடிந்த பிறகு குருசாமி தாம் பெற்ற தொகையின் விவரம் தெரிவிக்காமல், ஏதோ தமது சௌகரியம் போல் கூலிப் பட்டுவாடா செய்தும் விடுவார். ஒட்டு மொத்தமாக முக்கால் பங்கு குருசாமியின் விதத்துக்குச் சேரும். இந்தக் குணங்களை வைத்தா ஒருவன் தான் அந்தக் காலத்தில் குருசாமியிடம் பணி புரிந்தவர்களில் சிந்திக்கத் தொடங்கினான். அதன் விளைவு குருசாமியுடன் ஏற்பட்ட உறவு முறிவு. அன்று துணிந்து கேட்டான் :

''குரு மாமா! நீங்க இந்தக் கல்யாணத்துக்கு எத்தனை கண்டிராக்ட் பேசினேள் ?''


''யாரு வைத்தாவா கேட்கிறது ? ஏண்டா நூனையெல்லாம் சரியாகத்தானேடா வேலை செய்யறது? என்னடா வருஷம் மூணுச்சேன்னு பார்த்தேன். அய்யாவுக்கு நான் கணக்குச் சொல்லி, 'ஆடிட்' பண்ணியாகணுமா ?'' — இது குருசாமியின் கட்டைக் குரல்.

வைத்தா இடைமறித்து, '' நாங்கள் பத்துப் பேர் வேலை செஞ்சிருக்கோம் மாமா! ஆளுக்குப் பத்து ரூபாயாவது தேற வேண்டாமா ? கல்யாணக்காரா சொல்லிக் கொண்டா நீங்கள் ஐந்நூறுக்கு மேல் வாங்கிக் கொண்டதாக.....'' என்று சொல்லி முடிப்பதற்குள் குருசாமி ஜாரணியைத் தூக்கி விட்டெறிந்தார். அது வைத்தாவின் முகத்தில் காயத்தை ஏற்படுத்தியது.

அதோடு, ''அயோக்கிய ராஸ்கல்! இந்தக் குருசாமியைக் கணக்குக் கேட்டு, அதுவும் கல்யாண வீட்டிலேயே தகராறு பண்ணினவன் நீ ஒருத்தன்தாண்டா — தொலைஞ்சு போடா — இனி மேல் இந்த நிமிஷத்தோடே இந்த 'குரூப்'பை விட்டுத் தொலை — இந்தப் பணத்தில் எதுவும் உனக்குத் தர முடியாது. உன்னால் முடிந்ததைப் பார்த்துக்கோ— பொறுக்கிப் பயலே !'' என்று கண்டபடி குருசாமி வார்த்தைகளைக் கொட்டி விட்டார். வைத்தா அடிபட்ட கன்னத்தைத் துடைத்துக் கொண்டு, ''ஓய்! நான் பொறுக்கிப் பயல் என்றால், என்னை விரட்டித் தின்று கொழுக்கின்ற ஓநாய் நீர். வயதுக்கு மரியாதை கொடுக்கிறேன். ஆனால் இந்த ஜால வேலையெல்லாம் நீர் இனி இங்கு செய்ய முடியாது'' என்று கத்தினான். பக்கத்திலிருந்தவர்கள் சமாதானம் சொல்லி வைத்தாவை அனுப்பி வைத்தனர்.

வைத்தா இன்று தன்னிச்சையான சமையற் கலைஞன்! கலைஞன் மட்டுமல்ல! அச்சமூகத் தொழிலாளிகளிடையே ஓர் ஒப்புயர்வற்ற தலைவனாகக் கருதப்பட்டான்! அந்நிலை அவனைத் தானாகவே தேடி வந்தது. அதற்குப் பல காரணங்கள் உண்டு.

ஒரு முறை மத்திய அரசுப் பதவியில் மிகப் பெரிய பொறுப்பை வகித்து வந்த உள்ளூர் அனந்தராமன் வீட்டுத் திருமணத்தில் வேலை. இரு வீட்டாரும் பணம் துருப் பிடித்துப் போகும் அளவுக்கு இருந்தவர்களாதலால்,



**இலையைப் பிடித்த கரம் இனியவன் விரலைப் பற்றும்
நிலை அடையத் துடிக்கும் நங்கை உடல், உயிர்ச்
சிலையை நிகர்க்கும், வண்ணச் சிரிப்போ வைர நகைக்
கலையைப் பழிக்கும் கற்புடைக் காதலும் கை கூடும்!**

மேலட்டை வண்ணப்படம்: எஸ். பிரவீண்குமார்



சகல மணவிழா நிகழ்ச்சிகளும் திருவிழா வாக நடந்தன. அதில் வைத்தா சமையற் பிரிவின் பொறுப்பாளன் — அகஸ்மாத்தாக வைத்தா அனந்தராமன் என்று சொல்லப் படும் விழாத் தலைவனைப் பார்த்தான்—அசந்து விட்டான்! அனந்தராமன் என்ற அந்த மிகப் பெரிய அதிகாரி வேறு யாருமல்ல; ஒரு காலத் தில் தன்னைப் போன்று இளமையில் வறுமை யில் இளைத்த வைதிகர் ராஜுவின் அருமைப் புதல்வன். இதை அறிந்து கொண்டதும், அவனது தற்போதைய சூழ்நிலை கருதி அதை அதிகம் பொருட்படுத்தாமல் இருந்தான்.

சுமார் நூறுக்கு மேற்பட்ட ஆட்கள் வைத் தாவின் ஆணையை நிறைவேற்றிக் கொண் டிருந்தார்கள். திருமணம் முடிந்தது. சம்பிர தாயப்படி சாதக் கூடைகள் ஏற்ற வேண்டிய நேரம். யாரோ ஒரு பணியாள் கூடைகளில் ஒன்றைக் கீழே தவறவிட, சாதம் சிதறிக் கொட்டியது. அந்நிகழ்ச்சி அனந்தராமன் கண்ணில் படவே, தம் அதிகாரத் தொனியில், "யாரடா அவன், சமையல்காரப் பய! ரோடு போட வேண்டிய பயல்களை யெல்லாம் சமைய லுக்கு விட்டுக் கொண்டு — கூப்பிடுடா சமையல்காரனை" என்று தம் அலுவலக பாணியில் கத்த அருகே இருந்த வைத்தா மூர்க்கனானான்! வர்க்க உணர்ச்சி மேலிட் டது! மெதுவாக அனந்தராமனிடம் சென் ருன். ஏற இறங்க அனந்தராமனை அளப்பது போல் பார்த்தான். சுற்றிலும் மண விழா முடிந்து விடைபெறுகிற லட்சாதிபதிகளான உறவினர்களது கூட்டம்!

"நான்தான்டா சமையல்காரன்" என்று அழுத்திச் சொன்னான் வைத்தா.

"இடியட்! மரியாதையாப் பேசு. இல் லேன்னு தோல் பிஞ்சு போகும்" என்று அனந்தராமன் நெருங்க, வைத்தா மிக அலட்சிய பாவத்துடன் ஏகவசனத்தில், — "அனந்தா! ராஜு சாஸ்திரிகள் பிள்ளை அனந்தராம சர்மாவே! உங்கப்பாவைக் கடன்காரனுங்கள் இதே மாதிரி முப்பது வரு டங்களுக்குமுன் திட்டியபோது அவர் மானம் காத்த குடும்பமடா எங்களது! மேலொப் பம் போட்டுச் சாஸ்திரிகளை விடுவிச்சது எங்கப்பா! அப்புறம் நான் ஊரைவிட்டுக் கிளம்பிட்டேன். இன்னிக்கு நீ என்னை 'இடியட்'ங்கிறே! சாதம் கொட்டினது தப்பு தான்! ஆனால் அந்தத் தொழிலாளியை நீ அகம்பாவத்துடன் அதட்டினாயே, அதுதான் எனக்குப் பிடிக்கலே! அனந்தராமா! உன் பெண்ணுக்குக் கல்யாணம்! எனக்கு ஐந்நூறு ரூபாய் பேசப்பட்டது! அந்தக் கூலி எனக்கு வேண்டாம்! அது என் 'பிரசன்டேஷன்'! அனந்தராமா! அகம்பாவத்தை விடு" என்று நாடக பாணியில் கூறி வெளியேறினான். சமையல் தொழிலாளர் அனைவரும் ஒரே கூட்டமாக அவன் பின் சொல்லி வைத் தாற்போல் வெளியேறினர். அனந்தராமன் அசந்து நின்றார். தாம் யார் என்ற பூர்வாசிரமக் கதை வெளியானது ஒரு பக்கம், வைத்தாவின் 'காம்ரேட் ஸ்பிரிட்' ஒரு பக்கம். அப்படியே அவரை ஐந்து நிமிடங்களுக்கு மூச்சுத் திணறச் செய்தன.

இது போல் எத்தனையோ! வலிந்து சென்று வைத்தா செய்த உதவிகளும் ஏரா ளம்! வக்கீல் குமாஸ்தா வேணுகோபாலன் ஐந்தாவது பெண்ணுக்கு மிகச் சிரமத்துடன் திருமணம் நிச்சயமாகியது. பாவம் வேணு! இரண்டு கால் லேட், பழைய ராயர் வீட்டுக் கல்யாணச் சத்திரம், பேருக்குச் சாப்பாடு ஏற் பாடுகள் என்று வேணு விழி பிதுங்கிக் கொண் டிருப்பதை வைத்தா கேள்விப்பட்டான்.

வேணுவே வைத்தாவிடம் சொன்னார்: "வைத்தா! நீ என்னை நன்னாப் புரிஞ்சவன்! நாலு பெண்ணைக் கரையேத்திவிட்டேன். இப்ப ஐந்தாவது பெண்ணுக்குத் திக்கு தெரியாம நிக்கறேன். சமையலுக்கு......" என்று இழுத்தார்.

வைத்தா வேணுவின் கைகளைச் சட்டென்று பிடித்துக் கொண்டு, "முகூர்த்தம் என் னைக்கு?" என்றான்.

"வருகிற ஞாயிற்றுக்கிழமை."

"நீங்கள் மற்ற வேலைகளைப் பாருங்கள். கல்யாணம் அன்று எக்குறையும் இன்றி நடக்கும்" என்று வேணுவை அனுப்பி வைத்தான்.

ஞாயிறு! அனந்தராமன் வீட்டில் நடந்த அதே சமையல் வேணுவின் வீட்டிலும் நடந் தது. வேணு வைத்தாவைத் தெய்வமாகப் போற்றினார். ஏழையை ஏழைதான் புரிந்து கொள்ள முடியும் என்று உணர்ந்தார்.

காதலும் வைத்தாவின் வாழ்க்கையில் குறுக்கிட்டது. 'டேட்' கிடையாது. கவர்ச்சி, சந்திப்பு அதெல்லாம் என்னவென்று தெரி யாது. அதே தொழிலில் ஈடுபட்டவரான அப்பாசாமியின் பெண், ஜானு, வைத்தாவை விரும்பினாள். அப்பாசாமி வைத்தாவை 'மாப்பிள்ளை' என்று அழைப்பார்.

ஜானு படித்து முடித்தவுடன் ஏதோ, 'டைப்பிஸ்ட்' வேலையில் சேர, அத்தருணத் திலேயே வைத்தாவிடம் காதல் மொழிகளை

உதிர்த்தான். ''இவ்வளவு நாளா உங்களை நேரிடையாகக் கேட்டதில்லை. அப்பாவுக்கு வயசாயிடுத்து. எனக்கும் ஏதோ வேலையா யிடுத்து. நீங்கதான்....'' என்று ஜானு குழைந்தாள்.

வைத்தா எதிலும் கருக்கமானவன். ''ஜானு, சினிமா 'ஸ்டைல்'லே நீ பேசலே. எனக்கும் அப்படிப் பேசத் தெரியாது. நான் காதலுக்கும், கல்யாணத்துக்கும், ஒரு கட்டுப்பாடான குடும்ப வாழ்க்கைக்கும் பொருத்தமானவன் அல்ல. நீ விரும்பும் லட்சிய வாழ்க்கையை, குடும்ப வாழ்க்கையை என்னால் தரமுடியாது. தொழிலாளிகளை நான் நேசிப்பது போல், காதலிப்பது போல் — ஜானு — உன்னோடு நான் ஆசையாக இருக்க முடியாது. கல்யாணம் என்னைப் பொறுத்த வரை ஒரு கானல் நீர். இனி நான் வாழ்க்கை முழுதும் இப்படியேதான்'' என்று அன்று சொல்லிவிட்டு அந்த ஆசைக்கே இடமில்லா மல் வாழ்ந்தான்.

இப்படித் தன் நேரம், வாழ்வு அத்தனையும் தன்னைச் சார்ந்த சமையல் தொழிலாளர் களுக்கே சுயநலமற்று அர்ப்பணித்ததால் அந்த வட்டாரத்திலேயே வைத்தா ஒரு பெரிய 'டிரேட் யூனியனிஸ்ட்' ஆனான். அவன் தீர்த்து வைத்த சமையல் தொழிலாளர் பிரச்னைகள் ஏராளம்! அவனால் வாழ்வடைந்த குடும்பங்கள் பல! ஆனால் அகம்பாவம் தொழிலைக் குறித்துத் தாழ்மை உணர்ச்சி, வர்க்க பேதம் இவற்றைத் தீயென எழுந்து பொசுக்கி விடுவான்.

இன்று காலை இத்தகைய சீரும் சிறப்பும் பெற்ற வைத்தா இமரெனக் காலமாகிவிட் டான்! செங்கொடி கண்டதில்லை! மார்க் ஸிஸம் ஆராய்ச்சி செய்ததில்லை. ஆனால் இதோ நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் அந்த இறுதி ஊர்வலத்துக்கு அணிவகுத்து நிற்கிறார்கள். இதோ ஜானு கண்ணீர் விடு கிறாள், ஒரு லட்சியவாதி மறைந்துவிட் டானே என்று! வக்கீல் குமாஸ்தா வேணு ஓர் ஆளுயர மாலையைக் கொண்டு வந்து போட்டுச் சாஷ்டாங்கமாக வைத்தாவின் காலில் நமஸ்காரம் செய்கிறார். விடுமுறைக் குச் சம்பந்தி வீடு வந்திருந்த தில்லி அதிகாரி அனந்தராமன் சகல மரியாதைகளுடன் வந்து, ''வைத்தா! நீ பெரிய மனுஷன்டா!'' என்று வாய் முணுமுணுத்து நிற்கிறார். கிளம்பி விட்டது ஊர்வலம் சாக்காட்டுக்கு! இப் பொழுது சொல்லுங்கள், வைத்தாவை—ஏன் 'பரோபகாரி' என்று சொல்லக்கூடாது?



திருவாவடுதுறை ஆதீனகர்த்தர், ஆதீனத்தின் அரிய வெளியீடுகளை யும் பொன்னாடை, மாலை முதலிய வைகளையும் கலவையில் ஸ்ரீ பெரிய வாளுக்குச் சமர்ப்பித்தார்கள். பிறகு ஸ்ரீ புதுப் பெரியவர்களைச் சந் தித்துச் சூரியனார் கோவிலில் நடை பெறும் கோடியர்ச்சனைத் திருப்பணி ஆகியவை பற்றிக் கூறிக் கும்பாபி ஷேகத்துக்கு வரவேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். ஸ்ரீகாஞ்சி காமாட்சி அம்மன் கும்பாபிஷேகம் முடிந்த பின், ஸ்ரீ ராமேசுவர யாத் திரையை மேற்கொண்டு ஸ்ரீ காசி யாத்திரையைப் பூர்த்தி செய்யவிருப் பதாகவும், அப்பொழுது சூரியனார் கோவிலுக்கு வருவதாகவும் ஸ்ரீ புதுப் பெரியவர்கள் சொன்னார்கள். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் ஆதரவில் முதியவர் நலனுக்காகத் தொடங்கவிருக்கும் விருத்தாசிரமத் துக்குக் காஞ்சிபுரத்திலுள்ள திருவா வடுதுறை ஆதீனத்துக்குச் சொந்த மான கட்டடத்தை நிரந்தரமாக வழங்குவதாகவும் ஆதீனகர்த்தர் வாக்கு அளித்துள்ளார்கள்.

சென்னை ராஜாஜி மண்டபத்தில் தபால் இலாகா வினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'தபால் தலைகள் சேகரிப்புக் கண்காட்சி'யில் 42,000க்கு மேற்பட்ட தபால் தலைகள் இடம் பெற்றிருந்தன. இதனை யொட்டி பள்ளிக்கூடக் குழந்தைகள் எவ்வளவுதூரம் தபால் தலைகளின் அமைப்புகளில் கவனம்செலுத்து கிறார்கள் என்று கண்டறிய ஒரு சிறு தேர்வும் நடந் தது. வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கி உற்சாகப்படுத்தினார்கள். படத்தில் பரிசளிப்பை நடத் துபவர் தபால்துறை இயக்குனர் பி. ஜே. மாத்தியூ.





முதலில் மீண்டும்
உபயோகிக்கத்தக்க இந்த
அழகிய பேக்கை வாங்குங்கள் —
அதற்காகத் தனியாக
ஒன்றும் பணம் கொடுக்க வேண்டாம்

5-தடவை நிரப்பிக் கொள்ளக் கூடிய பாலி-
பையிலிருந்து அவ்வப்போது அதில் மீண்டும்
நிரப்பிக்கொள்ளுங்கள்...ஒவ்வொரு முறையும்,
35%க்கும் அதிகமாக நீங்கள் சேமிக்கிறீர்கள்.

உயர்ந்த சேமிப்புக்கென
ஒரு கிலோ மற்றும்
இரு கிலோ பேக்குகளும்
கிடைக்கின்றன.

பிஜ்

கோத்ரெஜ் தயாரிப்பு

தன்னிகரற்ற க்ளீனிங் பவுடர் • உன்னதமான சேமிப்புத் திட்டம்

CMGS-68-172 Tam

நவீன முல்லா

சமீபத்தில் கல்கி இதழ் ஒன்றில் வெளியான ''சிரிப்புக்கு ஒரு முல்லா''வைப் படித்துச் சுவைத்தேன். இன்று அந்த முல்லா இருந்தால் எப்படியிருக்கும் என்று எண்ணிப் பார்த்ததின் விளைவுதான் இந்த ''நவீன முல்லா.''


எஸ். சந்திரசேகர்
செகந்திராபாத்
6-9-75



★ முல்லா சினிமாக் கொட்டகை பக்கமாகச் சென்றுகொண்டிருந்தார். அப்பொழுது ''நெல்லு'' திரைப்படம் பார்க்கப் பெரிய க்யூ வரிசை நின்று கொண்டிருந்தது. முல்லா உடனே தம் நண்பரைப் பார்த்து, ''நெல்லுக்கே இவ்வளவு பெரிய க்யூ என்றால் அரிசிக்கு எப்படி இருக்கும்? பார்த்துக் கொள்!'' என்றார்.



★ முல்லாவிடம் ஒருவர் ''சொர்க்கத்துக்குச் செல்ல என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார். முல்லா ''முதலில் சாக வேண்டும்'' என்றார்.



★ முல்லா ஓர் ஏர்கண்டிஷன் தியேட்டரில் படம் பார்த்துக் கொண்டிருந்தார். இடைவேளையின் போது ''வேர்க்கவில்லை, வேர்க்கவில்லை'' என்று ஒருவன் கூறிக் கொண்டிருந்தான். முல்லா அவனைப் பார்த்து ''இது ஏர்கண்டிஷன் தியேட்டர்; அதனால் தான் வேர்க்கவில்லை'' என்றார்.



★ முல்லா சென்னை, சென்ட்ரல் ரயில் நிலையத்தில் டாக்ஸிக்காரனை அணுகினார். ''என்னப்பா எழும்பூர் வருகிறாயா? எவ்வளவு ரூபாய்?''

''மீட்டர் மேலே இரண்டு ரூபாய் கொடு சாமி.''

''வேண்டாமப்பா. கையிலேயே தருகிறேன். கொஞ்சம் குறைச்சுக்கோ!'' என்றார் முல்லா.



★ சீர்திருத்தவாதியின் பையனுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்யச் சென்றபோது முல்லாவையும் அழைத்துச் சென்றனர். சீர் சரியாகச் செய்ய முடியவில்லை என்பதால் கல்யாணம் வேண்டாம் என்று பையனின் தகப்பனார் கூறினார். பெண் வீட்டார் முல்லாவைப் பார்த்து, ''நாங்கள் 15,000 ரூபாய்க்குச் சீர் செய்கிறோம் என்றால் இவர் இருபதாயிரம் ரூபாய்க்குச் சீர் செய்தால்தான் கல்யாணம் என்கிறார்'' என்று கூறினர்.

முல்லா பெண் வீட்டாரைப் பார்த்து, ''இவர் பெரிய சீர்-திருத்த வாதி என்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்றார்.

சீர்திருத்தவாதி உடனே கல்யாணத்துக்கு ஒப்புக் கொண்டார்.

வேகம்

சினிமாக் கதை—12

விக்ரமன் தவறு செய்துவிட்டான்! சாதாரணத் தவறு அல்ல; மாபெரும் ஹிமாலயத் தவறு!

கிணற்றில் விழுந்த பெண்ணைக் காப்பாற்றிக் கரையேற்றக் கைகொடுத்துவிட்டான். அவளும் 'கரத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி!' என்று அவனை உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டுவிட்டாள். அது காதலாக அரும்பிக் கல்யாணமாக மலரும் வரையில் வளர்ந்தும் விட்டது. ராணி கிராமத்துப் பெண்ணாக இருந்தாலும் குறிப்பான பெண்; துடிப்பான பெண். அதோடு தொடாமலே சுடும் நெருப்பு. அப்பாவுக்குப் பெண்ணிடம் கொள்ளை ஆசை. அம்மாவுக்கோ அதைக் காட்டிலும் பன்மடங்கு ஆசை. அவளுக்கு வயிற்றில் நெருப்பு. எவன் தலையிலாவது சட்டுப்புட்டென்று கட்டிவிடத் துடித்தாள். இதைப் பெற்றவளின் இயல்பான ஆசை என்று கொள்ளலாம். தன் மகளை ஒருவன் கையில் ஒப்படைத்து நிம்மதி பெறத் துடிக்கும் துடிப்பு என்றும் கொள்ளலாம். அவள் பெற்ற தாயாக இருந்தால்! ஆனால் இதுவோ மாற்றாந் தாயின் ஆசை; தொலைத்துத் தலைமுழுக வேண்டும் என்ற துடிப்பு!

அவள் ஆசையோடு தேடிப் பிடித்து வந்த மாப்பிள்ளையை மணந்து அவனோடு மாரடிப்பதைக் காட்டிலும், கிணற்றிலோ, குளம் குட்டையிலோ விழுந்து உயிரை மாய்த்துக் கொள்வது என்ற முடிவுக்கு வந்து விட்டாள் ராணி.

ஆற்று வெள்ளத்துக்கு அவள் தன்னை அர்ப்பணிக்க முயன்ற வேளையில் விக்கிரமன் பார்த்துவிட்டான். அவள் கையைப் பற்றித் தடுத்து, "இதென்ன அசட்டுத்தனம்? உயிரை விடுவது சுலபம்; ஓர் உயிரைத் தருவது மெத்தக் கடினம். வீணில் உயிரை ஏன் மாய்த்துக் கொள்ளுகிறாய்?" என்று கேட்டான்.

"ஏன், ஐயா! உனக்கு வேறு வேலை யில்லை? அன்றைக்கு எதேச்சையாகத் தவறிக் கிணற்றில் விழுந்தவளைக் காப்பாற்றினாயே, அதுவே பெருந் தவறு ஐயா! அன்றைக்கே நான் செத்திருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும்! இந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் ஆளாகாமல் பிழைத்திருப்பேன். என்னை உயிர் பிழைக்க வைக்க இப்படி உயிரை வாங்குகிறாயே, உனக்கு நான் என்ன ஐயா தீம்பு செய்தேன்? உப்பு – துப்புக்குப் பிரயோசனம் இல்லாதவன் தலையிலே எங்க அம்மா என்னைக் கட்டிவிட்டுக் கைகழுவப் பார்க்கிறா. அதைக் காட்டிலும் நான் ஆற்றிலே விழுந்து செத்து விடறது மேல் இல்லையா? இப்போ என் கையைப் பிடிச்சாப்போலே உயிர் உள்ளளவும் என் கையைப் பிடிச்சுக் காப்பாற்ற உனக்குத் தைரியம் இருக்கா, சொல்லு! ஆற்றிலே விழாமல் இருக்கேன்!" என்றாள் ராணி.

சட்டென்று விக்கிரமனால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. "இந்த ஆண் பிள்ளைங்களே இப்படித்தான். நட்டாற்றிலே கையை விட்டு விட்டுப் போய் விடுவாங்க! போதும் ஐயா உன் சங்காத்தியம்!" என்று கூறி அவள் ஆற்றில் குதித்த



—ரா. வீழிநாதன்—

வேகத்தில் அவன் ஒரு முடிவுக்கு வந்து விட்டான், அவள் கரம் பற்றியே தீருவது என்று! அப்புறம் என்ன, ராணி விக்கிரமன் காதல் கம்பீர நடை போட்டு வளர்ந்தது.

குமார் தன் பண்ணையைப் பார்வையிடுவதற்காக வந்திருந்தான். பண்ணையை ஒட்டிய அவனது மாளிகையைப் பராமரித்து வந்தவள் ஒரு நடுத்தர வயது மாது. அவன் வந்து போகும் போதெல்லாம் அவனது தேவைகளையும் கவனித்து வந்தாள். அவளைத் தனித்துச் சந்தித்த குமார் சாந்தமாகக் கேட்டான்: ''ஏன், அம்மணி! போயும் போயும் உனக்கு இந்த ஊரில் அகப்பட்டது இந்தப் பெண்தானா?''

''ஏன், அவனுக்கு என்ன குறை?''

''சட், வாயை மூடு! குறை — நிறையெல்லாம் எனக்கல்லவா தெரியும்? ராணி போன்ற நிறையுள்ள பெண் இந்த ஊரில் இருக்கும்போது இந்தக் கசுமாலத்தையெல்லாம் இங்கே யார் வேண்டினார்கள்?''

''ராணி பெரும் நெருப்பு. அதோடு நம் புதிய மானேஜர் விக்கிரமன் அவளைக் காதலிக்கிறார். இருவருமே விரைவில் திருமணம் செய்துகொள்ளப் போகிறார்களாம்!''

''அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை. நீ என்ன செய்வாயோ, எனக்குத் தெரியாது. இன்றிரவு ராணி இங்கு வந்தாக வேண்டும்!'' என்றான் குமார்.

''விக்கிரமனுக்குத் தெரிந்தால் விபரீதம் விளையுமே!''

''அந்தக் கவலையை என்னிடம் விடு!'' என்ற குமார் நேரே விக்கிரமனிடம் போனான். ''விக்கிரம்! இந்த முக்கியமான காகிதங்கள் இன்றே கையெழுத்தாக வேண்டும். நகரத்தில் உள்ள நம் கணக்காயரிடம் உடனே காரை எடுத்துக் கொண்டு நீயே நேரில் சென்று கொடுத்து வா!'' என்று உத்தரவு போட்டான்.

விக்கிரமனின் கார் நகரை நோக்கி விரைந்தது. வழியிலே ஒரு கார் பஞ்சராகி நின்று கொண்டிருந்தது. அதற்குரியவர்கள் கையைக் காட்டி விக்கிரமனின் காரை நிறுத்தினார்கள். ''சார்! இப்பெட்டியில் உயிர் காக்கும் மருந்து இருக்கிறது. நீங்கள் போகிற வழியில் பாதையிலேயே ஓர் ஆஸ்பத்திரி இருக்கிறது. அங்குள்ள டாக்டர் இதை எதிர் பார்த்துக் கொண்டிருப்பார்! அவரிடம் இதைக் கொடுத்துவிடுங்கள், ப்ளீஸ்!'' என்றார்கள். ஒரு நற்பணியை யாராவது மறுப்பார்களா? விக்கிரமன் அந்த மருந்துப் பெட்டியை வாங்கி வைத்துக் கொண்டான். சிறிது தூரம் சென்றதும் சுங்க அதிகாரிகள் அவன் காரை மடக்கி நிறுத்திச் சோதனை போட்டார்கள். அந்தச் சோதனையில் அது மருந்துப் பெட்டி இல்லையென்பதும் எல்.எஸ்.டி. பெட்டி என்பதும் தெரியவந்தது. விருதுப்பட்டிச் சனியனை விலைக்கு வாங்கிக் கொண்ட கதையாக முடியவே, அவன் குமாரின் உதவியை நாடினான். ''நான் உன்னை நம்புகிறேன். ஆனால் கையும் களவுமாகப் பிடிபட்ட பின் நான் என்ன செய்ய முடியும்? என்னால் ஆவது ஒன்றும் இல்லை. ஆனால் ஒன்று; நீ சட்டத்தின் பிடியிலிருந்து மீண்டு வந்ததும் என்னை வந்து பார்! உன்னை மீண்டும் வேலைக்கு வைத்துக் கொள்கிறேன். அவ்வளவுதான் நான் செய்யக் கூடியது!'' என்றான்.

சட்டம் விக்கிரமனைச் சிறை வைத்து வேடிக்கை பார்த்தபின்னரே விடுதலை செய்தது. குமாரின் பண்ணைக்குத் திரும்பிய அவன் மாளிகை முற்றத்திலே கண்ட காட்சி! அப்பப்பா! என்ன பயங்கரம்? மாளிகையைப் பராமரித்து வந்த மூதாட்டி ரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தாள். அவனைப் பார்த்ததும், ''பாம்புக்குப் பால் வார்த்தேன்; அது என்னையே தீண்டிவிட்டது! குமார் நல்லொழுக்கம் உள்ளவன் இல்லை. அவன் தீய ஆசைகளுக்குத் தீனி போடும் வேலையை நான் மேற்கொண்டிருந்தேன். அந்தப் பாவத்துக்கு இன்று எனக்குச் சரியான தண்டனை கிடைத்து விட்டது. என் மகளையே அவன் கெடுக்கத் துணிந்து விட்டான். உன் ராணியைக்கூட அவன்...''

அவள் சொல்லி முடிக்கவில்லை. விக்கிரமன் துடித்து விட்டான். ''என் ராணி எங்கே?''



அடி, தடி, சண்டைக்கே முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கும் இந்தப் படம் படு வேகமாக ஓடி விடுகிறது. அந்த வகையில் 'வேகம்' என்னும் பொருள் தரும், 'ரஃப்தார்' சரியான தலைப்பு. மௌஸமி சட்டர்ஜியின் நடிப்பே எடுப்பாயிருக்கிறது. விநோத் மேஹ்ராவும் பெயர் சொல்லும்படி நடிக்கிறார். டானி வெறும் முகக் குரூரத்தைக் கொண்டே 'பாவ்லா' செய்கிறார்.

''அன்று உன்னை அவசர காரியம் என்று நகரத்துக்கு அனுப்பியதே உன் ராணியைத் தன் பசிக்கு இரையாக்கிக் கொள்ளத்தான்!''

''என் ராணி என்ன ஆனாள்?''

"என்னை ஏன் காப்பாற்றினீர்கள்? என் உயிரைக் காப்பாற்ற உங்களுக்கு ஏது உரிமை?'' – சீறினாள் அந்தப் பெண்.

''ஆண்டவன் கொடுத்த உயிர். அதை மாய்த்துக்கொள்ள உனக்கு ஏது உரிமை? அவன் ஆணைப்படி வாழ்ந்து அவன் இஷ்டப்படி அவனுடன் கலப்பதுதான் நம் கடமை. வருந்தாதே! நீ செத்துப் பிழைத்திருக்கிறாய். மறு - பிறவி எடுத்திருக்கிறாய்!'' என்று ஜாக்ஸன் அவளுக்கு ஆறுதலாகக் கூறினார்: ''உன்னைப் போல் எனக்கு ஒரு மகள் இருந்தாள். பத்து வருஷங்களுக்கு முன் அவளைக் காட்டாறு விழுங்கி விட்டது. என்ன தேடியும் அவள் சடலம் கூடக் கிடைக்கவில்லை. பத்து ஆண்டுகளுக்குப் பின் அதே காட்டாறு அவளை உன் உருவத்தில் எனக்குத் திருப்பித் தந்திருக்கிறது. உன்னை என் மகளாக வளர்த்து ஆளாக்குவேன்!''

ஜாக்ஸன் சிறந்த வயலின் வித்வான். சீடா அவருக்கு மகளாக வளர்ந்தாள். அப்பாவுக்குப் பெண் என்று சொல்லக் கூடிய அளவுக்குச் சிறந்த பாடகியாகவும் உருவானாள்.

மாதர் நல மன்றம் நிகழ்த்திய விழாவிலே இசைப் பங்கு ஏற்குமாறு அவளுக்கும் அவள் தந்தைக்கும் அழைப்பு வந்திருந்தது. மாதர் நலனுக்காகப் பெருந் தொகை நன்கொடை வழங்கி ரத்தினச் சுருக்கமாகத் தலைமை உரை நிகழ்த்திய சீமான் எவ்வளவு சிறப்பாகப் பேசிவிட்டார்? அதைக் கேட்டுச் சபை மகிழ்ச்சியில் அதிர்ந்தது. அவரைக் கண்ட அவளும் அதிர்ந்தே போனாள். 'இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா?' என்று ஐயப்படும் அளவுக்கு அருமையாகப் பேசிய அவர் எப்படி இரட்டை வேடம் போடுபவர் என்பது அவளுக்கல்லவா தெரியும்? 'ராணியின் கற்பைச் சூறையாடி அவள் உயிரையே குடித்த இந்த நயவஞ்சகனைப் பழி தீர்த்துக்கொள்ளாமல் விடக் கூடாது!' ராணி – இல்லை, இல்லை! சீடா உதடுகளைக் கடித்துக் கொண்டாள்.

விக்கிரமன் மீண்டும் தவறு செய்து விட்டான்!

அவன் உயிருக்கு உலை வைக்கப்பட்ட பொழுது, இராப்பகல் கண் விழித்துப் பணிவிடை செய்து அவனைப் பிழைக்க வைத்தவள் ராதா என்னும் பெண்.

''நான் யாரோ, நீ யாரோ? எனக்காக எதற்கு இவ்வளவு சிரமப்படுகிறாய்?'' என்று கேட்டான் விக்கிரமன்.

''ஓர் அண்ணனுக்குத் தங்கை பணிவிடை செய்வதில் சிரமம் உண்டா?'' என்று கேட்டாள் அவள்.

அவளது அந்த உறவு அவனது உள்ளத்தைத் தொடவே, அவள் கதையைக் கேட்டான் அவன். தன்னைத் திருமணம் செய்து கொண்டவன் தன்னை ஒரு குழந்தைக்குத் தாயாக்கிவிட்டுச் சென்ற கதையைக் கூறி அவள் சகோதர பாசத்தைக் கிளறியபோது...

அவன் கண்களிலே அவனது ராணி தோன்றினாள். அவளைக் கெடுத்த குமார் தோன்றினான். அந்தக் குமாரைப் பழி தீர்க்காமல் விடுவதில்லை என்ற ஆவேசம் ஒரு புறம்; சகோதரி உறவு கொண்டுவிட்ட ராதாவை அவள் கணவனோடு இணைத்து வைத்துவிடவே மறு காரியம் என்ற கடமை உணர்வு மறுபுறம். இரண்டுமாக அலை மோதி அவனை ஆணையிட வைத்தன: ''ராதா! நீ என் உடன் பிறவாத் தங்கை. உன்னை உன் கணவனோடு சேர்த்து உனக்கு இன்பம் கூட்டுவது என் பொறுப்பு!''

தங்கையின் கணவனைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த விக்கிரமனை எதிர்பாராத வகையில் எதிர்கொண்டவன் குமார். அவனைப் பழி வாங்க வேண்டும் என்ற ஆத்திரத்தில் அவனை நிழலாகத் தொடர்ந்த பொழுது, குமாரும் ராணியும் நெருங்கிப் பழகுவதை அறிந்து அதிர்ந்து போனான்.

''ராணி!'' அவள் ஒட்டி உறவாடுவது அவனை அழித்துக் கட்டவே என அறியாததால் விக்கிரமன் அவளை அதட்டி அழைத்தான்.

''ராணியா? யார் ராணி? நான் சீடா!'' என்று சமாளித்தாள் அவள்.

விக்கிரமனின் ஐயம் குமாரின் ஐயமாகவும் மாறவே, ஒருவரையொருவர் பழி வாங்கும் படலம் உச்ச கட்டத்தை அடைந்தது. அந்த நிலையிலே ராதா ஓடி வந்தாள். ''அண்ணா! அந்தப் பாவி சந்து என்னைக் கெடுக்கப் பார்த்தான். எப்படியோ குழந்தையோடு தப்பி ஓடிவந்து விட்டேன்!'' என்றவளுக்கு, எதிரே நிற்கும் குமாரைப் பார்த்த பொழுது வியப்பான வியப்பு!

''அண்ணா! உன் மருமானை அவன் அப்பாவிடம் கொடு!'' என்று குமாரைச் சுட்டிக் காட்டினாள்.

''இந்தக் கயவனா உன் கணவன்?'' என்று கேட்டுக் கை உயர்த்தியவனின் கை தாழ்ந்து விட்டது! சகோதரிக்குக் கொடுத்த வாக்கு நினைவுக்கு வரவே, செய்வதறியாது திகைத்து நின்றான்.

ஆனால் குமாரைக் கொல்ல இன்னொரு கை முயன்றது. ஆம், சந்துவின் கைதான். அதன் முயற்சியை முறியடிப்பதில் வெற்றி கண்ட ஜாக்ஸன் களபலிக்கு ஆளானார். சாகும் தறுவாயில் அவரது கை செய்த காரியத்துக்கு விக்கிரமன் பணிந்து விட்டான். ராணி – விக்கிரமனின் கைகளை இணைத்துப் பிரிந்த அந்தக் கரத்தின் செயலுக்கு அவன் தடை ஏதும் சொல்லவில்லை.

விக்கிரமன் தவறு செய்து விட்டான்!– தவறா செய்து விட்டான்?

திறமைமிக்க திலகங்கள்

சூலமங்கலம் ராஜலட்சுமி

சொல்பவர்: குமார்





இசையில் தேர்ச்சி பெற்றவர்கள் எல்லோராலும் திரைப்பட உலகில் சங்கீத டைரக்டராக ஆகிவிட முடியாது. பாடுவது ஒரு கலை என்றால், டியூன் அமைத்து, பக்க வாத்தியங்களைத் தேர்ந்தெடுத்து மனிதக் குரல்களுக்கும் இசைக் கருவிகளின் ஒலிகளுக்கும் இடையே அளவான இடைவெளி கொடுத்துத் திரைப் படத்துக்கான ஜனரஞ்சக சங்கீதத்தைத் தயார் செய்வது முற்றிலும் வேறான கலை. இந்த இரண்டு கலைகளிலுமே நல்ல அனுபவம் பெற்றிருப்பவர் ஸ்ரீமதி சூலமங்கலம் ராஜலட்சுமி. அவருடைய முதல் முயற்சியான 'தரிசனம்' என்ற திரைப் படத்திலேயே, அவருக்கு நம்பிக்கையும், வெற்றியும் தரிசனம் கொடுத்தன.

அந்த முதல் படத்திலேயே எல். ஆர். ஈசுவரி அவர்களும், டி. எம். சௌந்தரராஜன் அவர்களும் சேர்ந்து பாடிய 'மாலை நேரத்து மயக்கம்' என்ற பாடல் பிரமாதமான 'ஹிட்' ஆயிற்று. அதே படத்தில் 'கல்யாணமாம் கல்யாணம்' என்ற பாட்டும் நல்ல வரவேற்பைப் பெற்றது. பாடல்களை எழுதிக் கொடுத்த திரு கண்ணதாசன் 'மாலை நேரத்து மயக்கம்' பாடல், ரிக்கார்டிங்கில் அமைந்துவிட்ட விதத்தை வெகுவாக ரசித்து, 'இதுவரை இந்த மாதிரி ஒரு நல்ல பாட்டை எழுதியிருக்கிறேனா என்ற சந்தேகம் எனக்கே தோன்றுகிறது' என்று பாராட்டினார்.

சில ஆண்டுகளுக்கு முன் 'ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜா' என்ற பாட்டு பிரசித்தமடைந்தது. இந்தப் பாட்டைக் கேட்ட நான் அந்த இசைத்தட்டை வாங்கி வரச் சொன்னேன். பாடலைப் பாடியிருப்பவர் ஸ்ரீமதி சூலமங்கலம் ராஜலட்சுமி என்று தெரிந்து கொண்டேன். அந்தக் குரலில் இருந்த கவர்ச்சியில் சொக்கிப் போய்விட்டேன்.

நான் திரைப்பட இசையமைப்பாளனாக மாறிய பிறகு இசையமைப்புக்கு ஏற்ற இரண்டாவது படம் திரு கே. பாலசந்தர் எழுதிய 'நாணல்'. இதில் சௌகார் ஜானகி அவர்களுக்கு முக்கிய பாத்திரம். இப்போது நான் சூலமங்கலம் ராஜலட்சுமி அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினேன்.

'நாணல்' படத்தில் சௌகார் ஜானகியின் வாயசைப்புக்காக ராஜலட்சுமி பாடிய 'குயில் கூவி' என்ற ராகமாலிகைப் பாட்டைப் படம் வெளிவந்த பிறகு எல்லாரும் பாராட்டினர். நான் 'ஆர்ச்செஸ்டிரா'வையே உபயோகிக்காமல், ஒரு தம்புராவின் உதவியுடனேயே அந்தப் பாட்டை ரிக்கார்டு செய்தேன். சௌகாரும், படத் தயாரிப்பாளர் வேலுமணியும் அந்தப் பாட்டு அமைந்த விதத்தை மனம் விட்டுப் பாராட்டினார்கள்.

நான் அப்போது அவரைத் தேடிப் பிடித்துக் கொடுத்த வாய்ப்புக்குச் சமீபத்தில் ராஜலட்சுமி அவர்கள் நன்றி தெரிவித்துவிட்டார். இதுவரை என் இசை அமைப்பின் கீழேயே பின்னணி பாடிவந்த என் மனைவி சுவர்ணாவுக்கு அவர் இப்போது இசை அமைத்துக் கொண்டிருக்கும் ஒரு படத்தில் பாட வாய்ப்புக் கொடுத்து விட்டார்.

'தரிசன'த்தைத் தொடர்ந்து இவர் இசை அமைத்த 'டைகர் தாத்தாச்சாரி' திரைப் படத்திலும் இரண்டு பாடல்கள் 'ஹிட்' ஆயின! 'ஏழுமலை வாசா' என்ற பாடலும் 'கல்யாணம் ஒரு விழா' என்ற பாடலும்.

இப்போது 'விநாயகர் திருவிளையாடல்', 'அப்போதே சொன்னேனே கேட்டியா?', 'சந்தனம்' முதலிய படங்களுக்காக இசை அமைத்துக்கொண்டிருக்கிறார். தாம் இசை அமைக்கும் படங்களில் தாமும் முக்கியமாகப் பாட வேண்டும் என்ற சபலத்துக்கு இவர் இடம் கொடுப்பதில்லை. மற்ற பிரபல பாடக பாடகிகளின் திறமையைச் சாதுர்யமாகப் பயன்படுத்திக் கொள்வதில் தம் திறமையைக் காண்பிக்கிறார். ''நான் தேர்ந்தெடுக்கும் கலைஞர்கள் எல்லோருமே என்னுடன் நன்கு ஒத்துழைக்கிறார்கள். பரஸ்பரம் புரிந்து கொண்டு வேலை செய்ய முடிகிறது'' என்று மனம் விட்டுச் சொல்கிறார்.

இந்தத் துறைக்குள் நுழைந்து குறுகிய காலத்திலேயே; இவர், எம். ஜி. ஆர். அவர்கள் தயாரிக்கவிருக்கும் ஒரு படத்துக்கு இசையமைக்கவிருக்கிறார் என்பது என்போன்றவர்களுக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் அளிக்கும் விஷயம். எம். ஜி. ஆர். தம் படங்களில் இசை அமைப்புக்காக எவ்வளவு கவ

ணம் செலுத்துகிறார் என்பது இந்தத் தொழிலில் உள்ளவர்களுக்குத் தெரியும்.

எல்லாம் முருகன் அருள் என்று சொல்லும் இவர் ஒரு தீவிர முருக பக்தை. பிரதி மாதம் கார்த்திகையன்று பகல் முழுதும் பட்டினி இருந்து இரவு தெருவில் பவனி வரும் முருகனைத் தரிசித்துவிட்டுப் பிறகு ஆகாரம் சாப்பிடுவது இவருடைய நெடுநாளைய வழக்கம்.

ஒரு கார்த்திகை தினத்தன்று பிற்பகலில் இவர் வீட்டுக் கதவை ஓர் ஆசாமி தட்டினார். கதவு திறக்கப்பட்டது. உள்ளே வந்த நபர், தாம் திருச்செந்தூரிலிருந்து வருவதாகவும் தம் பெயர் முருகன் என்றும் சொன்னபோது இவருக்கு ஒரே புல்லரிப்பு. வந்தவர், தம் மாவட்டத்திலேயே திருமதி ராஜலட்சுமியும் அவர் சகோதரி ஜெயலட்சுமியும் சேர்ந்து வழங்கியிருக்கும் 'கந்த சஷ்டி கவசம்' இசைத் தட்டு கிடைக்கவில்லை என்றும், அதைச் சென்னையிலிருந்து வாங்கிப் போவதற்காகவே வந்திருப்பதாகவும் தெரிவித்தார். இந்தச் சகோதரிகளின் பக்திப் பாடல்கள் தமிழகத்தில் உள்ள எத்தனையோ பல கோயில்களில் ஒலிக்கின்றன.

சகோதரிகள் இருவரும் சிறு வயதிலிருந்தே கேள்வி ஞானத்திலேயே இனிமையாகப் பாடுவார்கள். சுகமான சாரீரம். பக்கத்து வீட்டு குலமங்கலம் வைத்தியநாத பாகவதர், சகோதரிகளின் தந்தையும் உள்ளூர்க் கிராம முனிசிபுமான ராமசாமி ஐயரிடம், பெண்களின் இசை ஞானத்தை முறைப்படி வளர்க்கத் தூண்டினார். அந்தத் தூண்டுதல் இன்று கர்நாடக இசைக்கும் திரைப்படத் துறைக்கும் ஒரே நேரத்தில் நல்ல உதவி செய்திருக்கின்றது!

காலம்சென்ற தியாகராஜ பாகவதர், என். எஸ். கிருஷ்ணன், பி. யூ. சின்னப்பா போன்றவர்களுக்கு ராஜலட்சுமியின் இசை இனிமையில் அபார ஈடுபாடு. தியாகராஜ பாகவதர் பல தீட்சிதர் கிருதிகளை ராஜலட்சுமியைக் கொண்டு பாடச் செய்து கவனம் செய்திருக்கிறாராம்!

கேட்டு எழுதியவர்: **கோமதிசுவாமிநாதன்**



பூமிக்கடியில் பெண்!

1969-ல் மில் ஜோன்ஸ் என்ற ஆங்கிலேயர், பூமிக்கடியில் உள்ள அறையில் 78 நாட்கள் இருந்தார். இது சாதனைகளின் குறிப்பேட்டில் இடம் பெற்றது. சமீபத்தில் மிகெல்மில் காஸ்நிலோ என்ற அயர்லாந்துக்காரர் பாதாள அறையில் மேலும் 65 நிமிடங்கள் இருந்து, ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தினார். ஆனால் எம்மா ஸ்மித் என்ற ஆங்கிலப் பெண்மணி, நூறு நாட்கள் பூமிக்கடியில் தங்கியிருந்து, மேலே கூறப்பட்ட சாதனைகளை முறியடித்து முதலிடம் பெற்றிருக்கிறார்! இதிலும் பெண்ணுக்கு முதலிடம்!

— நியூஸ்டைம்ஸ்


விருந்தாளிகளை விரட்ட!

இந்தாலியில் உள்ள தூரின் நகரில், மரச்சாமான் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் செய்யப்பட்ட படுக்கைகள் மிகவும் மோசமாக இருந்தன. அந்தப் படுக்கைகளில் படுத்துத் தூங்குவது முடியாத காரியமாக இருந்தது. யாரும் அவற்றை வாங்க முன்வரவில்லை.

எனவே கடைகளில் விளம்பரப் பலகைகள் தொங்கவிடப்பட்டன: ''உங்கள் வீட்டுக்கு உறவினர்கள், நண்பர்களுக்கான விசேஷ படுக்கைகள்; உத்தரவாதம்; இரண்டு இரவுகள் நிம்மதியான தூக்கமின்மை; மூன்றாவது நாள் விருந்தாளி ஓட்டம் பிடிப்பார்!''

இந்த விளம்பரம் போடப்பட்ட பின்பு, அந்தப் படுக்கைகள் ஏராளமாக விற்பனையாயின!

— ஆதாரம்: நியூஸ்டைம்ஸ்





பாணம், எதிர்பாணம்!

வேலூர் திரு ராமபத்திரனைப் பாராட்டச் சென்னை கிருஷ்ணகான சபையில் நடந்த கூட்டத்தின் பிறகு ஒரு ரசிகர் பாலக்காடு திரு மணி அய்யரை அணுகினார்.

''ஸார்! எங்கே நீங்கள் மைக்கில் வாசிக்க மாட்டேன் என்பது போல் மைக்கில் பேசவும் மாட்டேன் என்று கூறி விடுவீர்களோ என்று பயந்தேன்! நல்லவேளை ராமபத்திரனை வாழ்த்திச் சில வார்த்தைகள் கூறினீர்கள்!''

மணி அய்யர் கூறிய பதில்: ''மைக் முன்னால் மிருதங்கம் வாசிக்கத்தான் ஆட்சேபணை, பேச அல்ல. அதன் பெயரே ஸ்பீக்கர்தான்!''

— ... கேட்டவர்: குட்டி கிருஷ்ணன்

ஒப்பற்ற வெள்ளைவெளேர்-சலவைக்கே ஸூப்பர் ஸர்ஃப்...

ஒப்பற்ற வெள்ளைவெளேர்!



அதி உன்னதமான துலக்கும் சக்தி படைத்தது
ஸூப்பர் ஸர்ஃப். கண்மறைவான அழுக்கையும்
அகற்றிவிடுகிறது. பிறர் பொறுமைப்படும்
அளவுக்கு அதி உன்னதமான வெண்மை
அளிக்கிறது உங்கள் துணிகளுக்கு.
அதிசயமென்ன, இந்தியாவின் தலைசிறந்த ரகமாக
விளங்குகிறது ஸூப்பர் ஸர்ஃப்!

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லின்டாஸ்-SU-180-140 TM(R)

ஃப்யூராடான் உபயோகித்தால் அதிக நெல் விளைச்சல்

டாடா ஃபைஸன் ராலீஸ் வழங்கும் புதிய ஃப்யூராடான் 3ஜி மருந்து

நெற்பயிரைத் தாக்கும் பூச்சிகளைக் கொல்லுகிறது. இது பயிர் முழுவதும் பரவி செயலாற்றுவதோடு, அதிக பச்சையான நெற்பயிரைத் தருகிறது; ஹெக்டேருக்கு மற்ற பூச்சிக் கொல்லிகள் தருவதை விட 3 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக விளைச்சல் தருகிறது.


உலகெங்குமுள்ள நெற்பயிர் விளையும் பிரதேசங்களில் மிகச் சிறந்த பூச்சிக் கொல்லி என்று போற்றப் படுகிறது ஃப்யூராடான் 3ஜி. இது பயிர் முழுவதும் பரவும் நஞ்சியல்பு கொண்ட மருந்தாகும். இதை நிலத்திலும், நெல் வயலிலுள்ள நீரிலும் போட்டால் பயிர்கள் வேர்கள் மூலம் அதை உறிஞ்சி, பயிர் முழுவதும் பரப்புகின்றன. இதனால் பயிரைக் கடித்து மெல்லும், துளைக்கும் மற்றும் அதன் சாற்றை உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப் படுத்து-கிறது.

உங்கள் நெற்பயிருக்கு சிக்கனமான புதியமுறை, அதாவது விதைகள் / நாற்றுக்களைத் தோய்த்து எடுக்கும் முறைப்பற்றி உங்கள் வியாபாரியைக் கேளுங்கள். அதை ஒரு முறை கையாண்டு பாருங்கள். வியப்பூட்டும் பலன்களைக் கண்டு நீங்கள் அதிசயிப்பீர்கள்.

வியாபார விவரங்களுக்கு எழுதுக:
ராலீஸ் இந்தியா லிமிடெட்
ஃபெர்ட்டிலைசர்ஸ் & பெஸ்டிசைட்ஸ் டிவிஷன், 320, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001.

விசேஷ சிறப்பம்சங்கள்
ஃப்யூராடான் 3ஜி. [illegible]

- நெற்பயிரைத்தாக்கும் தண்டு துளைப்பான், தத்துப் பூச்சி, ஆனைக்கொம்பன், [illegible] பேன் ஆகிய பெரும்பாலான பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது.
- விசேஷ கருவிகளின் உதவியின்றியே கையாலேயே இந்த மருந்தை எளிதில் பத்திரமாகப் போடலாம்.
- கடித்து மெல்லும் பூச்சிகளையும் சாற்றை உறிஞ்சும் பூச்சிகளையும் கட்டுப் படுத்து-கிறது.
- பூச்சிகளை விரைவில் தாக்குவதற்காக பயிர் முழுவதும் உடனடியாகப் பரவி விடுகிறது.
- இதை மழை அடித்துச்செல்ல முடியாது... தெளிப்பு மருந்தைவிட நீண்ட காலம் பாதுகாப்புத் தருகிறது.
- தானிய மணியில் மருந்து தங்காமல், [illegible] செய்யாது.
- இந்தப் பயிரை அழிக்கும் பூச்சிகளை மட்டுமே பாதிக்கும்; பயிருக்கு சாதகமான பூச்சிகளுக்கு ஆபத்தில்லை.



RALLIS TATA FISON PESTICIDES

fmc furadan® IS A REGISTERED TRADEMARK OF FMC CORPORATION

PATENT NUMBER 97322 OF FMC CORPORATION

அதிக நெல் விளைச்சல் பெற....ஃப்யூராடான் 3 ஜி குருணைகள்

OBM 3134R TM

பக்தியே சாதனை; அதுவே லட்சியம்!

நான் வணங்கும் மனித தெய்வம்-9

புதுக்கோட்டை ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாகவத ஸ்வாமி பரம ஆசார சீலர். ஸாயி ஸமாஜத்தில் ராதாகல்யாண உற்சவம் முடிந்த மறுதினம். நண்பர் வீட்டில் தங்கியிருந்த ஸ்ரீ பாகவத ஸ்வாமிகளைத் தரிசிக்கச் சென்ற என் சகோதரிகள், மனைவி ஆகியோர் அவர்களுடைய திருவடி எங்கள் வீட்டிலும் படவேண்டுமென்ற ஆசையுடன் வீட்டுக்கு வந்து போகும்படி வேண்டிக் கொண்டனர். எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி மூன்று தினங்கள் எங்கள் வீட்டில் தங்கினர். ''அன்பு'' என்றால் என்ன என்பதை அப்போதுதான் முதன் முதலாக உணர்ந்தேன்.

'அப்பா' என்று அனைவராலும் அழைக்கப்பட்ட அவரது அனுக்கிரகத்தால் லௌகிகமாக ஏற்பட்ட பலன்கள் எண்ணிலடங்கா. அவர்கள் ஒரு வீட்டில் பூஜை, பஜனை செய்தால் அங்கே நிச்சயமாக ஒரு சுப காரியம் நடக்கும். இது பல அன்பர்களுக்கு அனுபவம். நான் அவர்களிடம் என்னென்ன பலன்களை அடைந்தேன், என் இதயக் கோவிலில் அவர்களை இருத்தி ஏன் வழிபடுகிறேன் என்பதைச் சொல்ல ஆசை துடிக்கிறது. ஆனால் வார்த்தைகளால் வர்ணிக்க முடிவதில்லை. காலையில் ஸ்நானம் செய்துவிட்டு நெற்றியில் திருநீறும், கோபி சந்தனமும் இட்டுக் கொண்டு அப்பா அவர்கள் கண்களை மூடி ஜபம் செய்யும்போது ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியே அவர்கள் உருவில் வந்துள்ளாரோ என்று தோன்றும்.

அப்பா அவர்கள் சங்கீத தெய்வம். சுருதி, லயம், சாகித்தியம், பாவம் எல்லாவற்றையும் அவர்களிடம் காணும் அளவுக்கு வேறு எங்கும் காண முடியாது. அவர்கள் நாத வடிவமாகவே தோன்றினார்கள். சுகமான சாரீரத்துடனும் பாவத்துடனும் இரவும், பகலும் நாள் விடாது ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வந்தது அவர்களது நாதோபாசனை. ஆயினும் அப்பா அவர்களுக்கு, ''தொண்டை கட்டிக் கொண்டது, பாட முடியவில்லை'' என்ற நிலையோ, ''இன்று சாரீரம் சுகமில்லை'' என்ற நிலையோ என்றுமே ஏற்பட்டதில்லை. பல பெரியவர்கள் அப்பா அவர்களை ஸ்ரீ தியாகராஜரின் மறு அவதாரமாகக் கருதினர். அப்பா அவர்கள் தியாகராஜரது கிருதிகளைப் பாடும்போது, தியாகராஜரே மீண்டும் அவர்கள் உருவில் வந்துள்ளார் என்பது விளங்கியது. அப்பா அவர்களின் ராம பக்தியை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. அவர்களுக்கு உள்ளும் ராமன், புறமும் ராமன்தான். பேசும் போதும் பெருமிதத்துடன், '' என் ராமன், என் ராமன்'' என்றே சொல்லிக்கொள்ளுவார்கள். அபிநயத்துடன் ''அலகலல்லலாடககனே'' என்ற கீர்த்தனையைப் பாடும்போது, மாரீசனை அடித்த போதும், சிவதனுசை முறித்தபோதும் ஸ்ரீ ராமனது நெற்றியில் மயிர்ச் சுருள்கள் அசைந்தாடிய அழகை ஸ்ரீ தியாகராஜர் எப்படி அனுபவித்தாரோ, அதை அப்பா அவர்களிடம் காண முடியும். தினந்தோறும் டோலோத்சவத்தின் ஆரம்பமாக ''ஹெச்சரிககா ராரா'' என்ற கீர்த்தனத்தைப் பாடும்போது ஸ்ரீ ராமன் மார்பில் முத்து ஹாரங்கள் அசைந்தாட, சகோதரி மீனாட்சி கையிலுள்ள கிளி அழைக்க மெல்ல மெல்லச் சபையில் பிரவேசிக்கும் அழகை அப்பா அவர்களிடம் காணலாம். எல்லாவற்றையும் விட அவர்கள் யாருமே இல்லாமல் சில இரவுகள் ஏகாந்தமாகத் தம்பூராவை மீட்டிக் கொண்டே பாடும் போது அவர்களுடைய பரவசத்தையும், பக்தியின் துடிப்பையும் விசேஷமாகக் காணலாம். பாடிக்கொண்டே இருக்கும்போது பளீர், பளீர் என்று இரு கன்னங்களிலும் போட்டுக் கொள்வார்கள். நடுவிலே பாட்டை நிறுத்திச் சிறிது நேரம் மௌனமாக இருப்பார்கள். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் அவர்களுடைய சந்நிதானத்தில் இருப்பதே ஒரு பேரின்பமயமான அநுபவம். பக்தியே அவர்களது சாதனை. பக்தியில் கிடைக்கும் பேரின்பமே அவர்களது இலட்சியம். விநயம் அவர்களது சொத்து. ''அனாயாசேன மரணம், வினா தைன்யேன ஜீவனம், தேஹிமே க்ருபயா சம்போ த்வயி பக்திம் அசஞ்சலா'' என்று நள்ளிரவில் தினந்தோறும் அப்பா அவர்கள் கடைசி மூச்சு இருக்கும் வரை பிரார்த்தித்தது அவர்களுக்கு அப்படியே கிட்டிவிட்டது. அசஞ்சலமான பக்தியைக் கண்டோம். தைன்யமில்லாத ஜீவனத்தைக் கண்டோம். மரணத்தின் அவஸ்தை சற்றும் இல்லாது ராம சாம்ராஜ்யத்தில் புகுந்து விட்டதைக் கண்டோம்.

— எஸ். சேஷாத்திரி





பொன்னியின் புதல்வர்

இரண்டாம் பாகம்

சுந்தா

1. சொந்தப் பத்திரிகை

தோன்றில் புகழொடு தோன்றுக...

இந்த வரலாற்று நாயகரின் சொந்தப் பத்திரிகைக்கு, அவருடைய பத்துப் புனைபெயர்களில் ஒன்றே மகுடமாய் அமைந்திருப்பது. . இப்போது ஒரு புதுமையாய்த் தோன்றாமல் இருக்கலாம். ஆனால் அதன் முதல் இதழ், 1941 ஆகஸ்டு முதல் தேதியன்று வெளிவந்தபோது, ''கல்கியின் பத்திரிகை கல்கி'' என்று எல்லோரும் வியந்து பேசிக் கொண்ட புதுமையாகத்தான் இருந்தது.

''கல்கி'' என்பதற்குப் பதிலாக, ''கலியுகம்'', ''ஜீவபூமி'', அல்லது ''வெள்ளி விளக்கு'' என்பதாக அது பெயர் கொண்டிருந்தால் எப்படி இருந்திருக்கும்? அவற்றில் ஒன்றைத்தான் அதற்கு வைப்பதாய் யோசித்துக்கொண்டிருந்தார் அதன் ஆசிரியர். அவருடைய பத்திரிகைக்குப் பண ஆதரவும் நிர்வாக பலமும் அளிக்க முன் வந்த சதாசிவமும், பொது நண்பர் ரா. பார்த்தசாரதியும், ''கல்கி'' என்ற பெயரின் சுருக்கமான வடிவம், ஒலி நயம், புகழ் மணம் ஆகியவற்றை எடுத்துச் சொல்லி வற்புறுத்தியதன் பேரில்தான் அதை அவர் ஏற்றுச் சூட்டினார்.

தேசியம், தமிழ், நற்கலைகள், நல்லறம் – இவற்றைப் பேணி வளர்ப்பதற்காகத் தோன்றிய கல்கிப் பத்திரிகை, இயல்பாகவே ஒரு காலக் கண்ணாடியாய் விளங்கிற்று. ஆகவே, அதன் தோற்றக் காலத்தில், வெளி உலகிலும் உள்நாட்டிலும் நிலைமையும் நடப்பும் எவ்விதம் இருந்தன என்பதைச் சற்றே பார்க்க வேண்டியது அவசியமாகும்.

மேற்கு உலகில் பிரிட்டிஷ் சிங்கமும் ரஷ்யக் கரடியும், ஆபத்துக்கால நட்பில் இணைந்து, தமது பொதுப் பகை நாடான ஜெர்மனியுடன் போராடிக் கொண்டிருந்தன. அந்த ஐரோப்பிய யுத்தம் உலக, மகா யுத்தமாய் விசிப் பரவும் அபாயம் மிகுந்து கொண்டிருந்தது.

நம் நாட்டில், மகாத்மா காந்தியின் அனுமதியுடன் யுத்தத்துக்கு எதிராகச் சத்தியாக்கிரகம் செய்தவர்களில், இன்னமும் பலர் சிறைகளுக்கு உள்ளேயே இருந்தார்கள். விடுதலை அடைந்து வெளியே வந்திருந்தவர்களோ, தாம் செய்த சத்தியாக்கிரகம் பயனற்றுப் போயிற்றே என்ற விரக்தியுடன் இருந்தார்கள்.

டெல்லியிலே, ராஜபக்தியுள்ள இந்தியப்பிரமுகர்கள் சிலர், ராஜப் பிரதிநிதியான வைஸ்ராயின் நிர்வாக சபையில்



சதாசிவமும், ரா. பார்த்தசாரதியும் எடுத்துச் சொல்லி வற்புறுத்தியதன்பேரில்தான் கல்கி என்ற பெயரைப் பத்திரிகைக்குச் சூட்டினார் அதன் ஆசிரியர்.

அமர்ந்திருந்து, அவர் இச்சைப்படி ஆட்சி நடத்தவும், யுத்த முயற்சிக்கு ஆதரவு பெறவும் உதவி செய்து கொண்டிருந்தார்கள். நாடெங்கிலும் அரசாங்க அதிகாரிகள், பணத்தைக் காட்டிப் படைகளையும் பண்டங்களையும் திரட்டிப் போருக்கு இரையாக அனுப்பிய வண்ணம் இருந்தார்கள். பணத்துக்கோ குறைவில்லை. மக்களை உருட்டி மிரட்டித் திரட்டிய பணமும் உண்டு; யந்திரத்தை முடுக்கிவிட்டு அச்சடித்துத் தள்ளிய பணமும் உண்டு. பணச் செழிப்பு ஒரு புறம்; பண்டப் பற்றாக் குறை மறுபுறம்.

''நம் தேசத்துக்கு யுத்தம் வந்தால் அப்போது பார்த்துக் கொள்ளலாம்'' என்பதே பெரும்பாலோரின் மெத்தன மனப்பான்மையாய் இருந்தது. யுத்தச் செய்திகளைப் படிக்கையிலும் கேட்கையிலும் ஒரு பதற்றம் உண்டாகத்தான் செய்தது. அதை வெளியே காட்டிக் கொள்ளாமலும், அல்லது அதை மறப்பதற்காகவும், ஆடல் பாடல் கேளிக்கைகளில் முன்னிலும் அதிகமாய் மக்கள் ஈடுபடலாயினர்.

சென்னை நகரில், விமானத் தாக்குதல் நேர்ந்தால் மக்கள் பதுங்கிக் கொள்வதற்கென அங்கங்கே பாதுகாப்புக் குழிகள் வெட்டி வைத்திருந்தார்கள். இருட்டடிப்பு ஒத்திகைகள் நடந்து கொண்டிருந்தன.

எழும்பூர் ரயில் நிலையத்தில் நாளுக்கு நாள் போக்குவரத்து மிகுந்து கொண்டிருந்தது. பட்டாள உடை அணிந்தவர்களும் அணியவிருப்பவர்களும், எங்கிருந்தெல்லாமோ வந்திறங்கி எங்கெங்கோ போய்க் கொண்டிருந்தார்கள்.

நிலைமையும் சூழலும் அவ்வாறு இருக்கையில், அதே எழும்பூர் நிலையத்துக்கு எதிர்ப் பக்கத்துச் சிறு கட்டடம் ஒன்றில்தான், கல்கியின் தொடக்க கால அலுவலகம் அமைந்திருந்தது. முன் சொன்ன தேதியில் அதிலிருந்து வெளியான கல்கி முதல் இதழின் அட்டைப் படத்தில், மூவர்ண தேசியக் கொடி மேலே பறக்க அந்த எழும்பூர் நிலையத்தின் வெளித் தோற்றமே அடிப்பாகத்துக்குக் காட்சியாய் அமைந்திருந்தது.


அந்த இதழின் முதல் பக்கத்துக் குறிப்பு ஒன்று, கல்கி அலுவலகத்தின் இலக்கைத் ''தலைமாற்று'' வேடிக்கையாய் அறிவித்தது :


சென்னை நகரில் ''எழும்பூர் ஸ்டேஷன் எங்கே இருக்கிறது?'' என்று கேட்பவர்களுக்கு, இனிமேல் பளிச்சென்று பதில் சொல்லலாம். எழும்பூர் ஸ்டேஷன் ''கல்கி'' காரியாலயத்துக்கு எதிர்த்தாற்போல்தான் இருக்கிறது. தமிழ் மக்கள் தங்களுடைய சொந்தப் பத்திரிகையின் காரியாலயத்துக்கு வந்து போவதற்குச் சௌகரியமாக, ரயில்வே ஸ்டேஷன், பஸ் நிற்குமிடம், டாக்ஸி நிற்குமிடம் எல்லாம் வசதியாய் அமைக்கப்பட்டிருக்கின்றன.



'கல்கி' புதுப் பத்திரிகை போடுவதுபற்றிமுதலில் கலைப்பட்டுப் பிறகு வாழ்த்திய ராஜாஜி.

புதுப் பத்திரிகைக்கான ஆயத்தமாய் அங்கு மிங்கும் சென்று ஆவன செய்த டி.கே.சி.









கல்கி காரியாலயம் இன்று அமைந்துள்ள சேத்துப்பட்டு கட்டிடம் பல ஆண்டுகளுக்கு முன்னால் காந்தி மகாத்மா பத்து நாட்கள் தங்கி இருக்கும் பாக்கியத்தைப் பெற்ற ஒன்று.

கல்கி பத்திரிகையின் முதல் ஓவியர், முதல் இதழில் வரைந்த முதல்தரக் கார்ட்டூன்.

பசுந்தமிழ்ச் சோலையாம் கல்கி, நித்தமும் பல்கி வளர வாழ்த்திய கவிமணி.

''என்ன சேதி ?'' என்ற பகுதியின் இரண்டாவது குறிப்பு இது.

முதல் குறிப்பு, புதுப் பத்திரிகையின் பிறப்பையே அந்தக் கேள்விக்கு விடையாய் அறிவித்தது :

ரொம்ப பேஷான சேதி !
தமிழர்களின் புதிய பத்திரிகை திவ்யமான சகுனங்களுடன் ஜனனமாகி இருக்கிறது.
ஜனனமான நாள் — திருநாள்.
நட்சத்திரம் — ஜன்ம நட்சத்திரம்.
லக்னம் — சுப லக்னம்.

அதோ மேளச் சத்தம் முழங்குகிறது அல்லவா ? இந்த சுப சமாசாரத்தை முன்னிட்டுத்தான்.

ஆனி — ஆடியில் சென்னையில் மழை கொட்டுகிறது அல்லவா ? நமது பத்திரிகையின் வரவை உத்தேசித்துத்தான்.

மேற்குத் திசையில் படார் படார் என்று வெடிச் சத்தம் கேட்கிறதோ, இல்லையோ ? அதுவும் நமக்காகத்தான்....

கொஞ்ச நாளைக்கு முன்பு சென்னையில் பூகம்பம் உண்டாயிற்றே, அதன் காரணம் கூட, இந்த அற்புத சம்பவத்தை எதிர்பார்த்துப் பூமி தேவி கொண்ட குதூகலமாய்த்தான் இருக்க வேண்டும்.

அந்த இதழில் ''உபயகுசலோபரி'' பத்தி ஒன்றும் இருந்தது.

அதை வரைவதற்காக ''உ'' என்று முதல் எழுத்தை ஆசிரியர் சுழித்து இழுத்தவுடனே, தம்மை வேண்டி அழைக்கும் மந்திரச் சுழியாக அதைப் பாவித்த பிள்ளையார் அவர் முன்னே பிரசன்னமாகி விட்டாராம்.—

புதிய காரியாலயத்தில் மகா கணபதியை எழுந்தருளச் செய்வதற்கு வேண்டிய வசதி ஒன்றும் கிடையாது. அவரையும் பார்த்து, பழைய மேஜை நாற்காலிகளையும் பரிதாபத்துடன் நோக்கினேன்.

''நான் உட்கார்ந்து விடவில்லை; பயப்பட வேண்டாம்'' என்றார் பகவான். ''மேற்குத் திசையில் ஒரு பயங்கரமான யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. அது கிட்டக் கிட்ட நெருங்கி வந்து கொண்டிருக்கிறது என்று கேள்விப்பட்டிருக்கிறாயோ, இல்லையோ ?''

''ஆகா !......''

''அதன் பயனாகக் காகிதத்துக்கு அசாத்தியக் கிராக்கி; நமக்கு வரும் கற்பூரத்தை மடிப்பதற்குக்கூடக் காகிதம் அகப்படுவதில்லை என்று தெரியுமோ இல்லையோ ?''

''தெரிந்துதான் இருக்கிறது. காகிதத்தின் விலை ஒன்றுக்கு நாலு மடங்குதான். இன்னும் அச்சு இயந்திரங்கள் விலை கிராக்கி; மை விலை கிராக்கி; மரச் சாமான்கள் விலை கிராக்கி..''

''இவ்வளவெல்லாம் தெரிந்திருந்தும் இப்போது போய் என்னத்துக்காகப் பத்திரிகை ஆரம்பிக்கிறாய்?''

'' எல்லாம் தங்களுடைய மாமா, மாயக் கண்ணன் இருக்கிறாரே, அவருடைய கீதையின் உபதேசத்தைப் பின்பற்ற வேண்டும் என்றுதான், ஸ்வாமி ! ஒவ்வொருவரும் அவரவர்களுடைய ஸ்வதர்மத்தையே கடைப்பிடிக்க வேண்டும் என்று கண்ணபிரான் சொல்லி இருக்கிறார் அல்லவா ? நல்ல காரியங்களுக்கு வரும் விக்கினங்களை நிவர்த்திப்பது எப்படித் தங்களுடைய ஸ்வதர்மமோ, அப்படியே, வெள்ளைத் தாள்களைக் கறுப்புத் தாள்களாக்குவது அடியேனுடைய ஸ்வதர்மம். தங்களால் அடியார்களுடைய கஷ்டங்களை நிவர்த்திப்பதற்குப் போகாமல் இருக்க முடியாது ; எங்களால் பத்திரிகையில் ஏதாவது எழுதாமல் இருக்க முடியாது.....''

''உன்னுடைய பத்திரிகையின் நோக்கம் என்ன ?'' என்று கணபதிராயர் கேட்டார்.

''இது, தமிழ் மக்களுடைய பத்திரிகை; தாங்கள் 'உன்னுடைய பத்திரிகை' என்று சொன்னது தப்பு'' என்றேன்.

''அப்படியே இருக்கட்டும்; இந்தத் தமிழர் பத்திரிகையின் நோக்கங்கள் என்ன?''

'' இந்தப் பத்திரிகைக்கு மூன்று நோக்கங்கள் உண்டு. முதலாவது நோக்கம், தேச நன்மை.''

'' இரண்டாவது ?''

''இரண்டாவது, தேச நன்மை.''

''மூன்றாவது ?''

''மூன்றாவதும் தேச நன்மைதான்.''

விநாயகர் விடைபெற்றுக் கொள்ளும்போது, ''ஸ்வாமி, சந்தாப் பணம் கொடுக்காமல் போகிறீர்களே?'' என்று ஆசிரியர் கேட்கிறார். கணபதியும் மூன்று கொழுக்கட்டைகளைக் கொடுக்கிறார்; அவை ஒவ்வொன்றிலும் ஒரு வெள்ளி ரூபாய் இருக்கிறது.


(சிதம்பரத்திலிருந்து ஆர். விநாயகம் பிள்ளை என்ற தேசபக்தர், கல்கி பத்திரிகையின் முதல் சந்தாதாரராகச் சேர்ந்திருந்தார். அதை மனத்தில் கொண்டே அவ்விதக் கற்பனை.)

அந்த ''உபயகுசலோபரி'' பத்தியின் அடியில், கல்கி பத்திரிகையில் முதல் ஓவியராகச் சேர்ந்த சாமா, கார்ட்டூன் பாணியில் வரைந்திருந்த படம் ஒன்று அச்சாகியிருந்தது. அதில் கல்கி இதழைக் கரங்களில் ஏந்திய கணபதி, சந்தடி மிகுந்த வீதி வழியே, அதை ஆவ

''என்னப்பா, நீ சினிமாவிலே வெள்ளி விழா கொண்டாடறேங்கறியே! நான் உன்னைச் சினிமாவிலே பார்த்ததே இல்லையே !''

''இன்னும் எனக்குச் சினிமாவிலே சான்ஸே கிடைக்கல்லே சார் ! முயற்சிபண்ண ஆரம்பிச்சு இருபத்தைந்து வருஷம் ஆச்சு! அதைக் கொண்டாடறேன் !'' — உஷா





ஜோசியர் : உங்களுக்குக் குரு பார்வை இப்ப அவ்வளவு சரியா இல்லே !

வந்தவர்: அவருக்கும் ''மெட்ராஸ் ஐ''யோ என்னவோ ?

ஹுடன் படித்துச் செல்கிறார். (அந்தக் கணபதியே கல்கி பத்திரிகையின் இஷ்ட தெய்வமாகவும், முத்திரை உருவாகவும் அமைந்துள்ளார் என்பதைக் குறிப்பிட லாம்.)

அந்த உபயகுசலோபரி வாசகமும், முன்பு பார்த்த குறிப்புக்களும், மற்றொரு பக்கத்தில் இடம் பெற்ற சிரிப்புத் துணுக்குகளும், கல்கி விட்டு வந்த பத்திரிகையின் சாயலிலும் நடையிலும் இருந்தன என்பது உண்மையே. ஆனால், அவை மட்டுமேதான் அப்படி. யுத்தத்தினிடையேயும் நல்லதொரு வருங்காலம் பற்றி நம்பிக்கை ஊட்டிய, ''புது யுகம்'' என்ற தலையங்கம் உள்பட, எல்லாமே தனி வழியில், தனி பாணியில் அமைந்திருந்தன. தமது புதிய பத்திரிகை புது விதமாக இருக்க வேண்டும்; அத்துடன் தமது தேசியக் கருத்துக்களை முழுமையாயும் வலிமையுடனும் வெளியிடுவதாய் இருக்கவேண்டும் — இவற்றைக் குறிப்பாகக் கொண்டுதான் அதன் உள்ளுறையைக் கல்கி திட்டமிட்டு வகுத்திருந்தார். அவருடைய நோக்கம் நன்கு நிறைவேறிய தன் பயனாய், கல்கி என்ற பத்திரிகை கல்கி என்ற மனிதரின் தனிப்பட்ட ஆளுமையையும், அந்த ஆளுமையின் வித விதப் பான்மைகளையும் பதித்துப் பரப்பும் சாதனமாய் விளங்கலாயிற்று. அரசிய ஒரு சக்தியாகவும், கலைகளில் ஒரு செல்வாக்காகவும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு பண்ணையாகவும், கல்கி பத்திரிகை உருவாகி நிலைபெறுவதற்கு வேண்டிய அடிப்படையை, ஆரம்ப இதழ்களிலேயே அதன் ஆசிரியர் அமைத்தார்.

கல்கிப் பத்திரிகை பற்றிய இரண்டு சிறு குறிப்புகள், திருச்சி சிறையிலிருந்து தமது குடும்பத்தாருக்கு ராஜாஜி எழுதிய கடிதங்களிலிருந்து கிடைத்துள்ளன. அந்தப் பத்திரிகை தொடக்கமாவதற்கு முன்னும் பின்னும் எழுதப்பட்ட அவற்றை அடுத்தடுத்துப் பார்க்கலாம்:

(3–5–41) கல்கி புதுப் பத்திரிகை போடும் அபிப்பிராயம் எனக்கு நல்ல யோசனையாகத் தோன்றவில்லை. பணம் வீணாகிவிடும் என்று தோன்றுகிறது. நல்ல பெரிய விஷயங்கள் எழுதும் பிரயத்தனம் செய்வது நல்லது. சிறிது காலம் கழித்து வேறு யோசனை செய்யலாம் என்று சொல்லவும்.

(12–8–41) புதுப் பத்திரிகை ''கல்கி'' பார்த்தேன். நான் எதிர்பார்த்ததைவிட நன்றாக இருக்கிறது. நடைத் தமிழ் சுத்தப்பட்டு, அழகும் ஓட்டமும் கொண்டு, எல்லோரும் அனுபவிக்கும் தன்மை அடையச் செய்வது, இந்தப் பத்திரிகையின் சிறப்பான சேவையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று, கிருஷ்ணமூர்த்திக்குச் சொல்ல வேண்டும்.

சுருங்கச் சொல்லிப் பெருக விளங்க வைப்பவர் ராஜாஜி. குறைத்துச் சொல்வதையும் குணமாய்க் கொண்டவர். இதை மனத்தில் கொண்டு இக்குறிப்புக்களைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ராஜாஜியைப் போலவே டி. கே. சி. யும், சொந்தப் பத்திரிகை போடுவதன் மூலம் கஷ்ட நஷ்டங்களுக்குக் கல்கி உள்ளாகக் கூடும் என்று கவலைப்பட்டார். அந்த எண்ணத்தை விடுத்து ஏதாவது ஒரு பத்திரிகையில் சம்பளத்துக்கு ஆசிரியராய் அமர்வதற்கு முயலும்படி! கல்கிக்கு யோசனை கூறினார். ஆனால், ''கஷ்டமோ, நஷ்டமோ, சுயேச்சையாய் எழுதுவதற்கு வாய்ப்பாக, சொந்தப் பத்திரிகை தொடங்கத்தான் போகிறேன்'' என்று ஒரே உறுதியுடன் கல்கிநிற்கவே, அந்த உறுதியை ரசிகமணி மெச்சி, அதற்கு ஊக்கம் ஊட்டினார். தமது ஒரே மகன் அண்மையில் இறந்ததால் உண்டான துக்கத்தையும் அவர் மறந்து, புதிய பத்திரிகைக்கான ஆயத்தமாய் அங்கும் இங்கும் சென்று ஆவன செய்வதில் கல்கிக்குத் துணை புரிந்தார்.

எடுத்த எடுப்பிலேயே கல்கிப் பத்திரிகை அடைந்த வெற்றி கண்டு மகிழ்ச்சி அடைந்த டி. கே. சி., நாலாவது இதழ் வெளியானதும், அது பற்றி உற்சாகமாய் (அப்போதும் சிறையிலிருந்த) ராஜாஜிக்கு ஒரு கடிதம் எழுதினார்:

(19–9–41) .... சந்தோஷமான சமாசாரம் ஒன்று. எதிர்பார்த்தபடி 'கல்கி'ப் பத்திரிகைக்குத் தமிழ் உலகில் தேவை ஏற்பட்டு 21000 பிரதிகள் வெளியிட்டாலும் போதுமானதாக இல்லை. ஐந்து நிமிஷத்தில் ஏஜண்டுகளிடமிருந்து பிரதிகள் காலியாகிப் போய்விடுகின்றன. படங்களும் கட்டுரைகளும் ரொம்ப வாய்ப்பாய் இருக்கின்றன; எல்லாம் எளிமையாய் நளினமாய் இருக்கின்றன. (நான் எழுதும்) கம்பராமாயணம்கூட ஒன்றாய்ச் சேர்ந்து ஒப்பேறி விடுகிறது. தமிழ் நாட்டில் புகார் எல்லாம், பிரதிகள் போதவில்லை, ஏன் இன்னும் வாரப் பத்திரிகையாய்

ஆகவில்லை என்பதுதான். தமிழர்களுக்குத் திடீரென்று உணர்ச்சியும் அறிவும் திருந்தி விட்டது.

கல்கிப் பத்திரிகையின் முதல் இதழ் மட்டுந்தான், யாரோ நேரில் கொண்டு போய்க் கொடுத்ததன் பேரில், ராஜாஜி யின் கைக்குக் கிடைத்தது. தொடர்ந்த இதழ்கள் கிடைக்கவில்லை — அவரே பின்னொரு கடிதத்தில் சொன்னபடி, ''இந்தப் பத்திரிகைக்குச் சிறைச்சாலைப் பிரவேச உரிமை கிடையாதபடியால்.'' கிடைத்திருந்தால், இரண்டாவது இத ழின் அட்டையிலிருந்து தம்மைத் தாமே ஆழ்ந்த சிந்தனையுடன் நோக்குவதை அப்போதே பார்த்திருப்பார்.

அந்த அட்டைப் படத்துக்கான குறிப் பில், ராஜாஜி சிறையில் இருப்பதால் பிரிட்டிஷ் சர்க்காருக்குத்தான் நஷ்டம் என்பதைக் கல்கி சுட்டிக் காட்டி, அவ ருடைய உதவியைப் பயன் படுத்திக் கொள்ளத் தெரியாத அந்தச் சர்க் காரின் துரதிர்ஷ்டத்தை எண்ணி வருத் தம் தெரிவித்தார்.

அக்டோபர் ஆறும் தேதி ராஜாஜி விடுதலை அடைந்தார். அதை அடுத்து, தமது பத்திரிகையின் ஆறுவது இதழில் மறுபடியும் அத்தலைவரின் படத்தைக் கல்கி வெளியிட்டு, ''என்னசேதி?'' என்ற பத்தியில் அவருடைய வருகை பற்றி எழுதினார்:

நமது தலைவர் ராஜாஜி பல மாத கால மாய்த் தாம் வசித்த சின்னச் சிறையிலிருந்து, நாம் வசிக்கும் பெரிய சிறைச்சாலைக்கு வந்து சேர்ந்தார். இது நமக்கெல்லாம் மகிழ்ச்சி தரும் விஷயம்தான். ஆனால், ராஜாஜிக்கு இந்த விடுதலையில் உற்சாகம் ஒன்றும் இராது. தேச நிலைமையைப் பார்க்கும்போது, ''ஏன் வந்தோம்?'' என்றுதான் இருக்கும். சிறை யில் இருந்த வரையில் ராமாயணமும் திருக் குறளும் படித்துக் கொண்டு மனக் கவலை இல்லாமலாவது இருந்திருப்பார். வெளியில் வந்ததும் எவ்வளவோ பெரும் பொறுப்புக்கள் வந்து அவர் தலையில் சுமருகின்றன.

அவரைப் போல் வெளியே வந்திருந்த தலைவர்கள், கடிதங்கள் மூலமும், வெவ் வேறு பத்திரிகை ஆசிரியர்கள், தலை யங்கங்கள் மூலமும், அப்போதிருந்த அரசியல் முடக்க நிலையைத் தீர்ப்பதற் குத் தக்க வழி காட்டுமாறு ராஜாஜி யைக் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு இணங்க அவரும் ஒரு வழி காட்டினார். ஆனால், அந்த வழியை ஒப்புக்கொள் ளாமலும் சரியாய்ப் புரிந்துகொள்ளா மலும் நெடுகிலும் பலர் எதிர்த்தார்கள். அவர்களுடைய எதிர்ப்பை முறியடிப்ப தற்காகக் கல்கிப் பத்திரிகை கருத்துப் போர் தொடுத்தது. ஓர் எதிர்ப்பு ஓய்ந் ததும் இன்னொன்று, இன்னொன்று என்று மூண்டுகொண்டே இருந்தன. ஒவ்வொன்றின்போதும், ராஜாஜியின் மன உறுதிக்கு ஒப்பான வைராக்கியக் கோட்டையாக அது நின்று, சொல் லம்புகளைப் பொழிந்தது.

விவாதப் புயல்கள், போட்டிகள், பொறாமைகள், யுத்த கால அபாயங்கள், தணிக்கை இடையூறுகள், தட்டுப் பாடுகள், விலை ஏற்றங்கள் — இவற்றை எல்லாம் சமாளித்துக் கொண்டு கல்கிப் பத்திரிகை முன்னேறியது. முதல் இதழில் வெளியான வெண்பா ஒன்றில், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை வாழ்த்தியபடியே, பசுந் தமிழ்ச் சோலை யாம் கல்கி நித்தமும் பல்கி வளர்ந்தது.

ஆங்கிலத்தில் சொல்வது போல், துள்ளலும் தாண்டலுமாய் இருந்த அதன் முன்னேற்றத்தைச் சில விவ ரங்கள் மூலம் அளந்து பார்க்கலாம்.

மாதம் இருமுறைச் சஞ்சிகையாகத் தொடங்கிய கல்கி, 13ம் மாதத்தி லிருந்து மாதம் மும்முறையாகவும், 33ம் மாதத்திலிருந்து அதாவது 1944 ஏப்ரலிலிருந்து வாரம் ஒரு முறையாக வும் வெளிவரலாயிற்று.

முதல் இரண்டு இதழ்களையும் பன் னிரண்டு ஆயிரம் பிரதிகள் வீதம் அச் சடித்து வெளியிட்டார்கள். இரண் டணா விலை கொண்ட அந்த இதழ்கள், நாலணா, எட்டணா என்றெல்லாம் பல ஊர்களில் கறுப்புச் சந்தைச் சரக்கைப் போல் விற்பனை ஆயின. மூன்றாவது இதழ் 20 ஆயிரம், நாலாவது 21 ஆயிரம். அவைகளும் பற்றாக்குறை நிலை யில் அவ்வாறே விலை போயின. ஐந்தா வது இதழிலிருந்து 35 ஆயிரம் வெளியானபோது, ஓரளவு பற்றாக்குறை தீர்ந்தது. அப்போதும் அநேக ஊர் களில் க்யூ நின்று கல்கியை வாங்க வேண்டியதாய் இருந்தது.

மனைவி ஆமை: என்னங்க இது? ஆபீஸ் விட்டா நேரா அஞ்சே வருஷத்திலே வீட்டுக்கு வந்துடுவீங்க, இப்போ ஏன் ஏழு வருஷம் ஆயிருக்கு?

கணவன் ஆமை: வழியிலே 'பள்ளிக்கூடம் - மெதுவாகப்போ'ன்னு புதுசா ஒரு போர்டு மாட்டி இருந்தாங்க! அதுனால்தான் கொஞ்சம் லேட்! — உஷா



''என்ன சேட்ஜீ ! இவ்வளவு மோசமான தலைப்பாகையை வாங்கி இருக்கிறீகளே !''
''அந்தக் கடைக்காரன் கொஞ்சம் வேண்டியவன் — தலையிலே கட்டிட்டான் !'' உ.வி.



பிறகு, காகித நிலைமை திருந்தியதும், ஆயிரம் ஆயிரமாய்ச் செலாவணி கூடிக் கொண்டே போய், ''பொன்னியின் செல்வன்'' தொடர் கதை வெளியான சமயத்தில் 71 ஆயிரம் என்ற உச்சத்தை எட்டிற்று. பத்திரிகைகளில் விளம்பரம் செய்வோரின் தகவலுக்காக அவற்றின் விற்பனைக் கணக்கைத் தணிக்கை செய்யும் ஏ. பி. சி. நிறுவனம் 1953ல் கல்கி இதழ் ஒன்றின் சராசரிச் செலாவணி 71366 பிரதிகள் என்பதாகச் சான்றிதழ் வழங்கிற்று. இந்தியாவில், ஆங்கிலத்திலும் சரி, நாட்டு மொழிகளிலும் சரி, வேறெந்த வாரப் பத்திரிகையோ, நாளிதழோ, அந்தக் காலத்தில் எட்டியிராத விற்பனைத் தொகை அது. பந்தயப் பரிசுகள், அதிர்ஷ்ட எண் வெகுமதிகள், சோதிட பலன்கள், காமக் கதைகள், கவர்ச்சிப் படங்கள் ஏதுமின்றி, அவ்வளவு பெரிய செலாவணியைக் கல்கி அடைந்தது சிறப்பாய்க் குறிப்பிடத் தக்கது. (1956ல் ஒரு லட்சத்துக்கு மேல் அதன் விற்பனைத் தொகை பெருகிற்று: ஆனல் நாம் கல்கியின் வாழ்நாளில் எட்டிய தொகைகளை மட்டுமே கவனிக்கலாகுேம்.)

கல்கிப் பத்திரிகையின் செலாவணிப் பெருக்கத்துக்கு ஏற்றபடி அதன் நிறுவன அமைப்பும் பெருகத்தானே செய்யும்? எவ்வளவு விரைவில் அது பெருகத் தொடங்கியது என்பதை, பத்திரிகை ஆரம்பமான ஏழாம் மாதமே, அதன் அலுவலகம் சேத்துப்பட்டு மாளிகை ஒன்றுக்கு மாற்றலாயிற்று என்பதிலிருந்து ஊகித்துக் கொள்ளலாம். இப்போது அது அமைந்துள்ள கட்டிடம் தான் அது.

அந்த இடமாற்றம் பற்றிப் பதினன்காவது இதழில் ஆசிரியர் எழுதியிருந்த ஒரு குறிப்பு, வெறும் அறிவிப்பாய் இல்லாமல், அப்போதைய யுத்த காலச் சூழலை நகைச்சுவையுடன் கலந்து சொன்ன வர்ணனையாய் இருந்தது:

...எதிரி விமானங்கள் சென்னை நகரின் பக்கம் தலை காட்டப் போவதே இல்லை— அப்படியே தலை காட்டினாலும் சென்னையைப் பிரதட்சிணம் செய்து நமஸ்கரித்துவிட்டுத் திரும்பிவிடும் என்பது நமது நம்பிக்கை. என்றாலும், ஒருவேளை எதிரி விமானங்கள் வந்து தாக்குவது என்று ஏற்பட்டால், அவற்றின் பிரதான இலக்குகள் ரயில்வே ஸ்டேஷன்களாய் இருக்கும் என்பது யாவரும் அறிந்ததே. அப்படிப்பட்ட நிலைமை ஏற்படும் போது, ''கல்கி'' காரியாலயத்தின் அடையாளத்தைக் கொண்டு எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனைக் கண்டு பிடிக்கும்படியான சௌகரியத்தைப் பகை விமானங்களுக்குக் கொடுக்க நாம் சிறிதும் விரும்பவில்லை. எனவே, எழும்பூர் ஸ்டேஷனைக் கண்டுபிடிக்க முடியாமல் பகை விமானங்கள் திண்டாடட்டும் என்பதற்காக நமது காரியாலயத்தை வேறிடத்துக்கு மாற்றி யிருக்கிறோம். நமது புது விலாசம்.....

அந்தப் புது விலாசத்துக்கு உரிய இடம், 1857ல், அக்காலத்து உறுதிப்பாட்டுடன் எடுப்பித்த விசாலமான கட்டிடம். முதலில் வாடகைக்கு எடுத்துப் பின்னர் உடைமையாக்கிக் கொண்ட அந்தக் கட்டிடத்தை நவீன வசதிகளும் அழகும் பொருந்த சதாசிவம் மாற்றித் திருத்தி அமைத்தார். முன்புறத்தில், ''கல்கிப் பூங்கா'' எனப் பின்னர் பெயர் பெற்ற அலங்காரத் தோட்டத்தையும் வளர்த்தார்.

கல்கிப் பத்திரிகையின் மூலம் பெருமை கொண்ட அந்த மாளிகை, தனிப் பெரும் புகழ் ஒன்றை ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன்னல் அடைந்திருந்தது. நாட்டின் தந்தை, மகாத்மா, மாந்தருக்குள் ஒரு தெய்வம் என்றெல்லாம் பின்னர் மகிமை அடையப் போகும் மோகனதாஸ் காந்தி, பத்து நாட்காலம் அதில் தங்கியிருந்தார். அவரை விருந்தினராய்க் கொண்டு உபசரிக்கும் பாக்கியத்தை அப்போது அதில் வசித்த பார்ஸி கனவான், நீதிபதி தயாப்ஜி அடைந்திருந்தார்.

காந்தி தங்கிய அந்த மாளிகை, காந்திய நெறியுடைய பத்திரிகை ஒன்றின் நிலையமாய் அமைந்தது எவ்வளவு இசைவான பொருத்தம்! இதை எண்ணுகையில், இதே நிலயத்திலிருந்துதான் பின்னர் சென்னையில் காந்திக்கு அஞ்சலி மண்டபம் அமைப்பதற்கான திட்டம் உதயமாகி நிறைவேறியது என்ற பொருத்தத்தையும் நினைக்கத் தோன்றுகிறது.

அந்த மண்டபத் திருப்பணி, கல்கி—சதாசிவம் கூட்டுறவின் சிறப்பான பலன்களில் ஒன்று. பதினன்கு ஆண்டுகளாய்த் தழைத்து நிலவிய அந்தக் கூட்டுறவு தஞ்சைத் திருவையாற்றில் வேர் ஊன்றி வளர்ந்ததாகும்.

(தொடரும்)



AM/7571

அமிர்தாஞ்சனம்

தலைவலி, ஜலதோஷம் மற்றும் வலிகளுக்கு நம்பகமான நிவாரணி

அமிர்தாஞ்சனம் தலைவலி, உடல்வலி, தசைவலி, சுளுக்கு, ஜலதோஷம் இவற்றிலிருந்து உடனடியாக குணமளிக்கிறது. அமிர்தாஞ்சனம் தடவியதும் வலி மறைகிறது. பாட்டில்கள், சிக்கனமான ஜாடிகள், மற்றும் மலிவு விலை டப்பாக்களிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சனம் — பத்து மருந்து பொருள்கள் ஒருங்கே சேர்ந்தது.

அமிர்தாஞ்சன் லிமிடெட்

நவராத்திரி ஸ்ரீ தீபாவளி விற்பனை!

காஞ்சீபுரம் - தர்மாவரம் - ஆரணி - பனாரஸ்

பட்டுப் புடவை - பாவாடைகளில்

நூதன கலர் - நவீன பார்டர்களில் ஏராளமாக வந்துள்ளன

எங்களது தீபாவளி தயாரிப்புகளை எதிர்பாருங்கள்

ஸ்ரீ ராஜேஸ்வரி ஹால்

121, ராஜ வீதி - கோயமுத்தூர்-1


சார்பு நிறுவனங்கள்

கடை வீதி, சேலம்-1 ○ காந்தி ரோடு, காஞ்சீபுரம்-1

தயாரிப்பு நிலையம்: **ஸ்ரீ ராஜேஸ்வரி சில்க்ஸ், காஞ்சீபுரம்**

நவநாகரீக ஜவுளிகளுக்கு { உஷா சாரி பாரடைஸ்
333, ராஜ வீதி – கோயமுத்தூர்-1

OSR



சுவரில்

10. விஷ மோதிரத்தில் விஷமம்

மதுரபவனத்துக்குப் பின்னால், ஓர் ஆள் உயரத்துக்கு நெடுஞ் சுவர் போல் வளர்ந்திருந்த மருதாணி வேலியிடையில் கால்கள் இரண்டையும் அகலப் பரப்பிக் கொண்டு, கைகளைப் பின்னால் ஊன்றிக் கொண்டு அதிர்ந்து போய் உட்கார்ந்திருந்தார் டாக்டர் பணிக்கர்.

நூறு அடிக்கு அப்பால், காம்பவுண்டுச் சுவருக்கு வெளியே நெடிதுயர்ந்து நின்ற தெரு விளக்கின் மங்கிய ஒளி அவருடைய வழுக்கைத் தலையில் மின்னியது.

''ஸார்! ஓர் அரை நிமிஷம் நான் வராமல் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்?'' என்றான் ரமேஷ்.

'' ஒன்றும் ஆகியிருக்காது ! சரிந்து விழுந்த செங்கற் குவியலுக்குள் சமாதியாகியிருப்பேன். அவ்வளவுதான்!'' என்று சொல்லிவிட்டு முழங்கால்களைத் தடவிவிட்டுக் கொண்டார் டாக்டர்.

''ரொம்ப சர்வ சாதாரணமாகச் சொல்கிறீர்களே, ஸார் !'' என்றான் ரமேஷ்.

''சர்வ சாதாரணமாகத்தானே அப்பா, பயங்கரமான காரியங்கள் காதும் காதும் வைத்த மாதிரி இந்த வீட்டில் நடந்து கொண்டிருக்கின்றன!'' என்றார் பணிக்கர்.

'' ரொம்ப வலிக்கிறதா, ஸார்? நான் வேண்டுமானால் கொஞ்சம் பிடித்துவிடட்டுமா?''

''வேண்டாம். வயதாகிவிட்டதோ, இல்லையோ?.... ஓடி வந்ததில் கொஞ்சம் 'நெக்கு விட்டு'ப் போய்விட்டது. சீக்கிரத்தில் சரியாகிவிடும்.... உனக்கு அவசரமாகப் போக வேண்டுமா?''

'' இல்லை, ஸார் ! உங்களை உங்கள் அறையில் கொண்டு போய் விட்டு விட்டுப் போகிறேன்.''

''மிக்க நன்றி.''

''டாக்டர் ! நீங்கள் எதற்காக இந்த நடுநிசியில் தோட்டத்துக்கு வந்தீர்கள்?''

''நானா வந்தேன்? செத்துப் போனாளே, அந்தத் துர்ப்பாக்கியவதி தாரிணியின் ஆவியல்லவா என்னை, ' போ, போ, என்னைக் கொன்ற பாதகனைக் கண்டு பிடி ' என்று பிடரியைப் பிடித்துத் தள்ளிக் கொண்டே இருக்கிறது!'' என்றார் டாக்டர்.

"டாக்டர்! தாரிணி தேவி கொலை செய்யப்பட்டார் என்று சொல்கிறீர்கள்?"

"அதில் எனக்குச் சந்தேகமே கிடையாது" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னார் டாக்டர்.

"ஆதாரம்?"

"என்மீது சரிந்து விழுந்த செங்கற் குவியல் அகஸ்மாத்தாக விழுந்தது என்று நினைக்கிறாய், ரமேஷ்? நிச்சயமாக அது அகஸ்மாத்தாக விழவில்லை..... யாரோதான் தள்ளி விட்டார்கள்..... எதற்காக அப்படிச் செய்தார்கள்?"

"எதற்காக?"

"என்னைக் கொன்றுவிடத்தான்!"

"உங்களைக் கொல்லவா? அட கடவுளே? ஏன்?"

"வேறு எப்படி என் வாயை அடைப்பது? தாரிணியின் மரணத்துக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் இரகசியங்களில் சில எனக்குத் தெரியுமே —"

"டாக்டர்! பகலில் பக்கம் பார்த்துப் பேச வேண்டும்! இரவில் அதுவும் பேசக் கூடாது என்பார்கள்."

"பகல் இரவு என்றெல்லாம் பார்க்க இனி அவகாசம் இல்லை, ரமேஷ்! கொலையாளி என்னைத் துரத்தத் தொடங்கிவிட்டான்..... இந்த ஒரு முயற்சியோடு அவன் நிச்சயமாக நின்று விடமாட்டான்...... நான் உயிரோடு இருக்கும் வரை தனக்கு ஆபத்து என்று அவன் தெரிந்து கொண்டுவிட்டான்..... இனிமேல் எந்த நிமிஷமும் என் உயிருக்கு ஆபத்துத்தான்......"

"அப்படி எல்லாம் ஒன்றும் உங்களுக்கு ஆகாது, டாக்டர். தைரியமாக இருங்கள்!" என்றான் ரமேஷ்.

"இல்லை, ரமேஷ்! தாரிணி தன் சொந்த விஷத்தால் இறந்தாள் என்பதை நான் நம்பவில்லை என்பது அவளைக் கொன்ற கொலையாளிக்குத் தெரிந்துவிட்டது. அது மட்டும் அல்ல; அவள் எப்படிக் கொல்லப்பட்டாள் என்பதை ஒருவாறு ஊகித்துவிட்டேன் என்பதையும் அவன் தெரிந்து கொண்டுவிட்டான்..... அதுவும் அந்த நந்தியாவட்டைச் செடியடியில் நான் அந்தப் பொருளைத் தேடப் போனது அவன் சந்தேகத்தை ஊர்ஜிதமே செய்து விட்டது...."

அப்போது பின்னால் காய்ந்த இலைகளின் மீது யாரோ நடந்து வருவது போல் 'சரசர' வென்று சத்தம் கேட்டது. ரமேஷ் டாக்டரிடம் பாய்ந்து அவர் வாயைப் பொத்தினான்.

"உஷ்! ஏதோ சத்தம் கேட்கிறது. இங்கே உட்கார்ந்து பேசுவது ஆபத்து.... வாருங்கள், பக்கத்தில்தான் சமையல் அறை இருக்கிறது. அங்கே போய்விடலாம்!" என்று மெதுவாக அவரை எழுப்பி நிறுத்தினான். டாக்டருக்கு இப்போது கால் சரியாகி இருந்தது. "நௌ ஐயாம் ஆல்ரைட், ரமேஷ்!" என்று கூறியவாறே ரமேஷுடன் நடந்தார்.

அதே சமயம் புறக்கடைக் கிணற்றடி விளக்கு 'பளிச்'சென்று எரிந்தது! கதவு திறந்தது. புதிய முகம் ஒன்று எட்டிப் பார்த்தது. "யார் அங்கே?" என்று கேட்டது.

"நாங்கள்தான். கொஞ்சம் உலாவிவிட்டு வருகிறோம். யார் நீ?" என்றான் ரமேஷ்.

"சமையலுக்கு உதவியாகப் புதியதாய் வந்திருக்கிறேன். உள்ளே வாங்க!"

இருவரும் உள்ளே வந்ததும் புறக்கடை விளக்கை அணைத்துவிட்டு, சமையல் அறை ஸ்விச்சைத் தட்டிவிட்டான், புது உதவியாள். இருவரும் சாப்பாட்டு மேஜை முன் அமர்ந்து கொண்டார்கள்.

"தாகத்துக்கு ஏதாவது சாப்பிடுகிறீர்களா, ஸார்!"

"ஆமாம். தொண்டை வறண்டு போய்விட்டது. ஜில்லென்று ஏதாவது கொடு" என்றார் டாக்டர்.

பிரிஜிலிருந்து 'ஜில்'லென்று கொண்டு வந்து வைத்துவிட்டு, "நான் போகட்டுமா, சார். படுக்கப் போகும் முன் ஞாபகமாக விளக்கை அணைத்துவிட்டுப் போங்கள்" என்று கூறி விட்டு அவன் போய் விட்டான்.





"குழந்தையை ஏன் அழவிடுகிறீர்கள் ?"

"ஸ்டவ் ரிப்பேர் செய்யக் கற்றுக்கோடா! நாளைக்கே உனக்குக் கல்யாணமானால் பெண்டாட்டியிடம் நல்ல பேர் வாங்கலாம்னு; மாட்டேங்கிறான். தடி ராஸ்கல்!"

"ஏன் ரமேஷ்! நிஜமாகவே தோட்டத்தில் யாரோ நடந்து வந்த சத்தம் கேட்டதா ?" என்று கேட்டார் டாக்டர்.

"அப்படித்தான் நினைக்கிறேன். இல்லாமலும் இருக்கலாம். கீரிப் பிள்ளை ஏதாவது போயிருக்கவும் கூடும்" என்றான் ரமேஷ்.

"அப்படியில்லாமல் அது மனிதக் காலடி ஓசையாக இருந்தால் நிச்சயமாக அவன் தாரிணியைக் கொன்ற ஆளாகத்தான் இருக்க வேண்டும். நிச்சயம் !" என்றார் டாக்டர்.

"இந்த மாளிகையே பெரிய மர்ம மாளிகையாக இருக்கிறது!" என்றான் ரமேஷ்.

"மாளிகையில் ஒரு மண்ணுமில்லை. வெறும் கடன்தான் மிஞ்சியிருக்கிறது..... ஆனால் தாரிணியின் கையிலிருந்த மோதிரத்தில்தான் பெரிய மர்மமே அடங்கியிருக்கிறது. அது மட்டும் வாய் திறந்து பேசுமானால் எத்தனை இடுக்கிடும் விஷயங்களைச் சொல்லும் தெரியுமா? முக்கியமாகத் தான் இத்தனை வருஷ காலமாகக் கட்டிக் காத்த விஷம் தாரிணியைக் கொல்லவில்லை; அதன் மீது பழி போடுவது அபாண்டம் என்று சத்தியமே செய்யும்."

"டாக்டர்! நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ?" என்று மிகுந்த ஆச்சரியத்துடன் கூவினான் ரமேஷ்.

"உண்மையைச் சொல்கிறேன், அப்பா! அந்த மோதிரத்தில் காலம் காலமாகக் குடியிருந்த புராதன விஷம் ஒரு நிரபராதி. தாரிணி தேவி அந்தக் கடைசி விருந்தை அளிப்பதற்கு ஒரு மாதத்துக்கு முன்பே அது தன் வீட்டைக் காலி செய்துவிட்டுப் போய் விட்டது."

"உங்களுக்கு எப்படித் தெரியும் ?"

"நான்தானே அப்பா, அந்தக் கொடிய விஷத்தை அதிலிருந்து அப்புறப்படுத்தின ஆள்?" என்று சாவதானமாகக் கூறினார் டாக்டர். "அந்தப் பெண் பிள்ளை ஓயாமல் 'விஷத்தைக் குடித்துவிடுவேன்' என்று பயமுறுத்திக் கொண்டேயிருந்தாள். இது என் மனைவியைத் தூங்க விடாமல் அடித்துவிட்டது..... 'ஏதாவது' செய்யும்படி அவள் என்னை ஓயாமல் நச்சரித்து வந்தாள்.... அவள் நச்சரிப்பு தாளாமல் தான் சென்ற மாதம் ஒரு விருந்தின்போது நைஸாக மோதிரத்திலிருந்து விஷத்தை அப்புறப் படுத்தி விட்டேன்."

"நேற்று விருந்தின்போது நாம் எல்லாரும் அந்த மோதிரத்தைப் பார்த்தோமே. சர்க்குச்சி போல் விஷம் அதனுள் இருந்ததே."

டாக்டர் மேஜையின் மீதிருந்த டம்ளரை எடுத்து ஒரு வாய், 'மடக்'கென்று குடித்து விட்டு 'டக்'கென்று கீழே வைத்தார். "அது நான் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த போலி காப்ஸ்யூல்!"

"அதிலிருந்ததும் விஷம்தானே ?"

"பையா! என்னை முட்டாள் என்று நினைத்தாயா ?..... ஒரு விஷத்தை எடுத்து விட்டு இன்னொரு விஷத்தை வைக்க நான் ஏன் அத்தனை சிரமப்பட வேண்டும்....நான் வைத்த காப்ஸ்யூலிலிருந்தது சுத்தமான.... டிஸ்டில்ட் வாட்டர்......"

"என்ன...? என்ன....?"

"ஆமாம்.... வெறும் தண்ணீர்......ஒவ்வொரு விருந்தின்போதும் விருந்தினர்களிடம் விஷ மோதிரம் பார்வைக்குச் சுற்றுலா வரும். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டேன்..... என்னிடம் வந்தபோது இலேசாக மூடியைத் திறந்து, 'அதை' எடுத்து விட்டு 'இதை' வைத்து விட்டேன்."

"அந்த டிஸ்டில்ட் வாட்டரா தாரிணியைக் கொன்றது ?"

"பாவம், தண்ணீர்மீது பழியைப் போடாதே!" என்றார் டாக்டர். "அது அவள் வயிற்றினுள் போகவே இல்லை..... நீயே பார்த்துக் கொள்ளேன்."

டாக்டர் கோட்டுப் பையில் கையைவிட்டு அரை அங்குலத்துக்கும் குறைவான ஒரு சிறு காப்ஸ்யூலை வெளியே எடுத்துத் தம் உள்ளங் கையில் வைத்துக் கொண்டு வெளிச்சத்தில் தூக்கிப் பிடித்தார்.

ரமேஷுக்குத் தலையைச் சுற்றியது. "இது என்ன மாயம். விஷத்துக்குப் பதிலாக மோதிரத்தில் நீங்கள் வைத்த தண்ணீர் காப்ஸ்யூல் மறுபடியும் உங்கள் கைக்கே எப்படி வந்தது ?"

"'ஜூ மந்திரக்காளி' என்று ஒரு மந்திரம் போட்டேன். வந்து சேர்ந்துவிட்டது" என்று சிரித்தார் டாக்டர்.

"டாக்டர்! வேடிக்கை இருக்கட்டும். விஷயத்தைச் சொல்லுங்கள், புரியும்படியாக."

"விஷயம் ரொம்ப ஸிம்பிள் அப்பா. நான் மோதிரத்திலிருந்து விஷத்தை அப்புறப் படுத்திவிட்டு, தண்ணீர் காப்ஸ்யூலை வைத்துவிட்ட பிறகு, அந்த விஷ மோதிரத்தில் ஒரு சின்ன விஷமம் நடந்திருக்கிறது.... தாரிணியைக் கொல்ல நினைத்தவன் ரொம்பக் கெட்டிக்காரன்...... பிளான் போட்டுத்தான் இந்தக் கொலையைச் செய்தான்..... தாரிணியை அவன் சுட்டுக் கொன்றிருக்கலாம்; கத்தியால் குத்தியிருக்கலாம்; கழுத்தை நெரித்திருக்கலாம்... ஆனால் இவற்றில் எதையுமே அவன் செய்யவில்லை. அவள் அடிக்கடி சொல்லி வந்தது போலவே தானாகவே விஷத்

தைக் குடித்து இறந்து போனாள் என்று ஏற்படுவதையே அவன் விரும்பினான். அதனால் விஷத்தைக் கொடுத்தே அவளைக் கொன்றான்.''

'' எப்படி ?''

'' எப்படி என்பதை நான் ஊர்ஜிதமாகச் சொல்ல முடியாது. ஏனென்றால் நான் கூட இருந்து பார்க்கவில்லை. ஊகமாகத்தான் சொல்ல முடியும்..... தாரிணி அந்த விஷ மோதிரத்தை விருந்துகளின்போது மட்டும்தான் விரலிலிருந்து கழற்றுவது வழக்கம். இது எல்லோருக்கும் தெரியும். ஆகவே அவள் சுய உணர்வுடன் இருந்தபோது, கொலையாளி அந்த மோதிரத்தைக் கழற்றவோ, திறக்கவோ அதிலிருந்து விஷத்தை எடுத்து அவளுக்கே கொடுக்கவோ செய்திருக்க முடியாது. அதுவரையில் அவள் சும்மா இருந்திருக்கவும் மாட்டாள்..... மேலும் அப்படியே அவன் கொடுத்திருந்தாலும் தண்ணீர் காப்ஸ்யூலைத் தான் கொடுத்திருக்க வேண்டும். அது அவளைக் கொன்றிராது.... அவள் இறந்து போயிருப்பதுடன், இதோ அந்தத் தண்ணீர் காப்ஸ்யூல், பத்திரமாக இருப்பதனால் கொலையாளி நிச்சயமாக வேறு விஷத்தைக் கொடுத்தே அவளைக் கொன்றிருக்க வேண்டும்.......''

''அப்படியானால் அவன் ஏற்கனவே வேறு விஷம் வாங்கி வைத்திருந்தானா ? அதைக் கொடுத்துவிட்டு, தாரிணி இறந்த பிறகு விஷ மோதிரத்தின் மூடியைத் திறந்து அதில் உள்ள தண்ணீர் காப்ஸ்யூலை......'' என்று சொல்லி வந்தபோதே ரமேஷுக்கு ஒரு விபரீத சந்தேகம் உண்டாயிற்று. ''டாக்டர், இது இப்போது கொலையாளியின் கையில் அல்லவா இருக்க வேண்டும்.... ஒருவேளை...'' என்று பதற்றத்துடன் கேட்டான். டாக்டர் தான் அந்தக் கொலையாளியோ என்ற நினைப்பு அவனைப் பாதாதி கேசம் உலுக்கிவிட்டது.

''மை ! டியர் பாய் ! நீ நினைப்பதுபோல் தாரிணியைக் கொன்ற ஆள் நான் இல்லை.... ஆண்டவன் படைத்த ஈ எறும்புக்குக்கூட நான் தீங்கு செய்ததில்லை. மேலும் தாரிணியைக் கொல்வதால் எனக்குஎன்ன லாபம்?... ஐயோ, பாவம்.......!''

'' மன்னியுங்கள், டாக்டர்...... வெரி ஸாரி !''.

''அதை விடு : விஷயத்துக்கு வா.... என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்...... அந்த ஆள் வேறு விஷம் வாங்கி 'ரெடி'யாக வைத்திருந்தான்... விருந்துக்குப் பிறகு அதை அவளுக்கு நைஸாகக் கொடுத்துவிட்டான்.... அவள் இறந்து விழுந்த பிறகு, மோதிரத்தைத் திறந்து, தண்ணீர் காப்ஸ்யூலை நிஜ விஷம் என்று நினைத்து எடுத்து, அந்த அறை ஜன்னல் வழியாகத் தோட்டத்தில் வீசி எறிந்து விட்டான்......''

''அப்படி ஏன் செய்தான் ? மறுநாள் காலையில் அது யார் கண்ணிலாவது பட்டு விடாதா ? சந்தேகத்தைக் கிளப்பிவிடாதா? மறு நாள் இங்கே ஒரே போலீஸ் மயமாக இருக்கும் என்று அவனுக்குத் தெரிந்திருக்குமே !''

'' அப்படித் தெரிந்ததினால்தான், கொலை செய்த பிறகு, அவன் கீழே இறங்கி வந்திருக்கிறான். அதற்கு ஆதாரம் இருக்கிறது.



'' மாறுவேடப் போட்டியில் கலந்து கொள்ளப் போகிறேன். பூதம் மேக்கப் எப்படி இருக்கு ?''

'' ஆகா ! அற்புதம் !''

மேலே இருந்து வீசியிருந்தால் காப்ஸ்யூல் தரை மீதுதான் இருக்கும். ஆனால் நான் தேடிப் பார்த்தபோது செடியடியில் மண்ணைக் கிளறி மூடியிருந்தது !''

''டாக்டர்! இப்போது எனக்கு எல்லாம் புரிகிறது..... காப்ஸ்யூலைத் தேடி நீங்கள் இறங்கி வந்தீர்கள்; அதைச் செடியடியில் தேடினீர்கள்; இதைக் கொலையாளி பார்த்துக் கொண்டே இருந்திருக்கிறான். நீங்கள் மண்ணைக் கிளற ஆரம்பித்ததும் பயந்து போய் உங்களை அதோடு சேர்த்துச் சமாதி வைக்கச் செங்கல் குவியலைத் தள்ளிவிட்டிருக்கிறான்.''

'' ஆனால் ஆண்டவன் அருளால் செங்கல் விழுவதற்கு முன்பே என் கையில் தண்ணீர் காப்ஸ்யூல் கிடைத்துவிட்டது.''

'' அப்படியானால் கொலையாளி இப்போது மதுரபவனத்தில்தான் இருக்கிறானா ? யார் அவன் ?''

டாக்டர் சிரித்தார். ''ரமேஷ் ! கொலையாளி யார் என்று என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியாது: மூன்றுபேர் மீது சந்தேகம் கொள்ள இடம் இருக்கிறது...... ஆனால் ஒரே ஒரு ஆள் மீது......''

'' டாக்டர், சீக்கிரம் சொல்லுங்கள்.... யார் அது ?''

டாக்டர் ஏதோ சொல்ல வாயெடுத்தார். அடுத்த கணம், 'லொள்; லொள்' என்று பயங்கரமாகக் குலைத்துக் கொண்டு, ராட்சத ஆகிருதியுடைய இரண்டு அல்சேஷன் நாய்கள் அந்த அறைக்குள் பாய்ந்து வந்தன.'

' டாக்டர் ! தப்பிக்கப் பாருங்கள் !' என்று கத்திக் கொண்டே ரமேஷ் ஒரு ஜன்னல் வழியாகக் குதித்து வெளியே ஓடினான். டாக்டர் இன்னொரு ஜன்னல் வழியாக ஏறிக் குதித்து விழுந்தடித்துக் கொண்டு ஓடினார்.

அவர்கள் போன பிறகும் நெடு நேரம் வரையில் சமையல் அறையிலிருந்து நாய்களின் பயங்கரக் குரைப்புச் சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது. (தொடரும்)

எனக்கு இருந்த அவசரத்தில் நான் எதையுமே லட்சியம் செய்யவில்லை. காரின் ஹாரன் காரணம் இல்லாமல் குரைத்துக் கொண்டே இருக்கும் தெரு நாயைப் போல் அலறிக் கொண்டே யிருந்தது.

அதோ, தூரத்தே விராலி மலை தெரிகிறது. முக்கால் மணி நேரத்தில் திருச்சி ஆஸ்பத்திரியில் கிடக்கும் மனைவியையும், குழந்தையையும் பார்த்துவிடலாம். அவர்கள் அருகே உட்கார்ந்து அவர்களுக்கு நேர்ந்த விபத்தின் எதிரொலியை நேரில் கண்டு, அவர்களை ஆசுவாசப்படுத்தி விடலாம். மதுரைக்குப் போன் வந்தபோது எல்லா எக்ஸ்பிரஸ் ரயில்களும் போயாகிவிட்டன. இரவு நேரத்தில், மழை பெய்து கொண்டிருக்கையில் காரில் செல்லுவது இரண்டாம் பட்சம்தான். ஆனால் வேறு வழி இல்லையே? மனைவியும் கைக் குழந்தையும் ரிக்ஷாவில் போயிருக்கிறார்கள். சாலைத் தெருவில் ஒரு பஸ் மோதியிருக்கிறது. குடை சாய்ந்த ரிக்ஷாவிலிருந்து இருவரும் கீழே விழுந்திருக்கிறார்கள். பார்வதம், விலாவில் வலிக்கிறது என்றாளாம். குழந்தைக்கு மண்டையில் அடி. கண் திறக்காமல் கிடக்கிறானாம்.

இந்த நிலையில் யார் மறு நாள் ரயிலுக்குக் காத்திருப்பார்கள்? உடனே காரை எடுத்தேன். வழியும் வரையில் பெட்ரோலைப் போட்டுக் கொண்டேன்.

இருட்டாவது, மழையாவது! அம்பாஸடர் கார், அதுவும் 1974ம் மாடல். நான் சொன்னபடி கேட்கிற பயல்.

கார் தூரத்தையும் நேரத்தையும் விழுங்கிக் கொண்டு ஓடியது. எண்பத்தைந்து மைல்களை இரண்டு மணி நேரத்தில் கடக்க ஒரு பேராசை எழுந்த போதிலும், மூன்று மணி நேரமாவது ஆகும் திருச்சி போய்ச் சேர என்று நானே என்னைச் சமாதானப்படுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று.

விராலி முருகன் என்னைக் கைவிடமாட்டான் என்ற திருப்தியில் நான் கண்களை மூடிக் கொண்டு விரைந்தேன். மழை எப்போதோ நின்றுவிட்டது.

திடீரென்று ஒரு வளைவிலிருந்து லாரி முளைத்தது. என்னுடைய காரின் வெளிச்சத்தைப் பார்த்துவிட்டு அசுரன் தன் கண்களைத் திறந்து வந்தான். அதுவும் நட்ட நடுப் பாதையில். வெறி பிடித்து வரும் அதன் பிடியில் சிக்காமல் இருக்க நான் இடது பக்கம் ஒதுங்கி ஓட்டி ஆக வேண்டும். பாதையின் ஓட்டில் ஒரே சேறும் சகதியும். பாதைக்குள்ளே என்னை அடக்கிக் கொள்ளவும் முடியவில்லை!

டிம்–டிப்..... டிம்–டிப். காரின் விளக்குகளை மங்கச் செய்தேன். அணைத்தேன். ஏற்றினேன்; ஏற்றினேன், அணைத்தேன்; மங்கச் செய்தேன்.

லாரி என் விளக்குகளின் ஜாலங்களை லட்சியம் செய்யாமல், ஒளிப் பிழம்பைக் கக்கிக் கொண்டு தாக்கி வந்தது.

இனியும் தாமதிக்கக் கூடாது. தாமதித்தால் நேரே லாரியின் மேல்தான் இடிக்க வேண்டும் என்ற நிலை பிறந்தபோது, இடது பக்கமாக வண்டியை ஒடித்தேன்.

லாரியின் மீதே கண்ணும் கருத்துமாக இருந்தவனுக்கு, பாதையின் இடதுபுறத்தில் ஆள் இல்லாமல், மாடுகள் இல்லாமல் ஒரு பார வண்டி நின்று கொண்டிருந்தது, தெரியவில்லை.

லாரியிலிருந்து தப்பியவன் கட்டை வண்டியின் மேல் மோதித்தான் ஆக வேண்டுமா?

லாரி என்னை முழுங்கிக் கொண்டு சென்றது. ஆனால் என்னால், நான் நினைத்தபடி மாடுகள் இல்லாத வண்டியை முழுங்க முடியவில்லை.

இடதுபுறம் ஒடிந்த காரை நேர்த் திசைக்குக் கொண்டு வந்து மீண்டும் வலது பக்கம் திரும்புவதற்குள் –

வண்டியின் நுகத்தடி காரின் 'பம்பரை'த் தாக்கியது. மன்னிக்கவும். காரின் 'பம்பர்' வண்டியின் நுகத்தடியைத் தாக்கிச் சென்றது.

ஏது செய்ய முடியுமா?

பி. வி. ஆர்

இமைப் பொழுதில் நடந்த விபத்தின் விளைவை இமைப்பொழுதில் கணக்கிட்டேன். கட்டை வண்டி, கார் இடித்த அதிர்ச்சியில் திசை திரும்பிப் பாதையின் சரிவில் இறங்கியது.

ஒரு பெருமூச்சுடன் பிரயாணத்தைத் தொடர்ந்தேன். பம்பர் பலமாகச் சேதமடைந்திருப்பது, நான்கைந்து கிலோ மீட்டர் போன பிறகுதான் தெரிந்தது. நல்ல வேளை, ஆளில்லாத, மாடுகள் இல்லாத கட்டை வண்டிதான். நுகத்தடிக்குச் சிறிது பங்கம் நேர்ந்திருக்கலாம். ஆனால், காரை நிறுத்தி, வண்டியின் சொந்தக்காரனைப் பார்த்து மன்னிப்புக் கேட்டு இருபது அல்லது முப்பதைக் கொடுத்துப் புறப்படும் அளவுக்கு எனக்கு நேரம் இல்லை. மானசீகமாக அவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

திருச்சி போய்ச் சேரும்போது இரவு மணி ஒன்று. நேரே மாமா வீட்டுக்கு ஓடினேன். அவரையும் அழைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு விரைந்தேன்.

குழந்தை சற்று முன்தான் கண் விழித்தானாம். பாலும் குடித்தானாம். என் வயிற்றில் பால் வார்த்தது போல் இருந்தது. பார்வதம் இன்னும் விலா வலித்துக் கொண்டிருக்கிறது என்றாள். எல்லாம் சரியாகிவிடும் என்று ஆறுதல் சொன்னேன்.

மறு நாளே இருவரும் வீடு திரும்பினார்கள். விபத்தின் விளைவு இப்போது கடுகாகப்



பட்டது.

இதை மலையாகக் காட்டி என்னைப் பயமுறுத்தி, நட்ட நடு ராத்திரியில் மதுரையிலிருந்து வரவழைத்தது எவ்வளவு முட்டாள்தனம் என்று எனக்கு இப்போது தோன்றியது. ஆயினும் விபரீதம் ஏதும் நிகழாமல் எல்லாம் நல்லபடியாக முடிந்ததே என்ற திருப்தி, சமாதானம் எனக்கு ஏற்பட்டது.

மூன்றும் நாளே திருச்சியிலிருந்து மதுரைக்குப் புறப்பட்டேன்.

திடீரென்று கட்டை வண்டியின் ஞாபகம் வந்தது. பாவம், ஓர் ஏழையின் வண்டிக்கு என்னால், என்னுடைய அவசரத்தில் சேதம் ஏற்பட்டிருக்கிறது. அவனைப் பார்த்து மன்னிப்புக் கேட்டு நஷ்டஈட்டையும் கொடுத்து விடவேண்டும். இதைக்கூட நான் செய்யாவிட்டால், அப்புறம் நான் என்ன மனிதன்?

இடத்தைக் கண்டுபிடிப்பது மிகவும் எளிதாக இருந்தது. பாதையின் சரிவில் அந்த வண்டி நான் கடைசியாகப் பார்த்த கோலத்திலேயே இருந்தது. அதன் எதிரே ஒரு குடிசை. வண்டிக்காரனின் வீடாக இருக்க வேண்டும்.

ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்களைத் தனியாக எடுத்து வைத்துக் கொண்டு (மணிபர்ஸைப் பார்த்தால் ஏழைக்கு அதிக ஆசை ஏற்படக்கூடும் !) காரை விட்டும் இறங்கினேன். அதே சமயம் ஒரு முப்பது அல்லது முப்பத்திரண்டு வயது மதிக்கத் தகுந்த ஒருவன் குடிசையினின்றும் வெளியே வந்தான். என்னைப் பார்த்ததும் ஒரு கணம் அயர்ந்து போய்விட்டதாகத் தோன்றியது.

''ஏம்ப்பா, இது உன் வண்டியா ?''

''ஆமாமுங்க.''

'' நான் ஒரு தப்பு செய்துட்டேம்ப்பா.... ஆஸ்பத்திரியிலே இருந்த மனைவி குழந்தையைப் பார்க்க இரண்டு நாட்கள் முன்னாலே இந்த வழியாய்ப் போனேன்.....''

'' ஓ, அதுதான் வண்டி மேலே இடிச்சுட்டும், அதை நிறுத்தாமல் போனீங்களா?''

''ஆமாம்ப்பா.... தப்புத்தான்....மனைவியும் கைக்குழந்தையும் ரிக்‌ஷாவிலே போயிருக்காங்க.... அது மேலே பஸ் மோதிட்டுது..... குழந்தை கண் திறக்காமல் கிடக்குதுன்னு மதுரைக்குப் போன் வந்தது ''

''உங்க வேகம் எனக்குப் புரியுதுங்க.... இப்போ ரெண்டு பேரும் எப்படி இருக்காங்க? உங்க முகத்தைப் பார்த்தா, ஆண்டவன் புண்ணியத்திலே ரெண்டு பேரும் சுகமாயிட்டாங்கன்னு தெரியுது.''

''உண்மைதாம்ப்பா. முருகன் அருளிலே பிழைச்சுட்டாங்க. 'நான் இப்ப வண்டியை நிறுத்தினதே உன்னைப் பார்த்துட்டுப் போகத்தான்......''

'' எதுக்குங்க ?''

'' என் வண்டி உன் வண்டியிலே மோதிட்டுது. மாடு இல்லேதான். ஆளும் இல்லை தான். இருந்தாலும் ஏதாவது சேதம் ஆகியிருக்கும்...... நுகத்தடி ஒடைஞ்சுபோய் இருக்கும் போலிருக்கு..... நஷ்டஈடு கொடுக்கலாம்னுதான் நிறுத்தினேன்.''

'' உங்களாலே நஷ்டஈடு கொடுக்க முடியாதுங்க.''

''என்னப்பா, சொல்லறே ?''

திடீரென்று அவனுடைய குரல் கம்மியது.

'' நான் அன்னிக்கு வரப்போ ரொம்ப நேரம் ஆயிடுச்சுங்க.... என் பெண்டாட்டி ஆக்கி வைக்கலே. குடிசைக்குள்ளே குழந்தை தூங்காம அழுதுகிட்டே இருந்தது. அதை ஒரு வழியாத் தூங்கப் பண்ணி, காத்தாட விடலாம்னு வண்டிக்குக் கீழே விட்டு வைச்சேனுங்க..... அப்புறம் அவிழ்த்த மாட்டை மரத்தடியிலே கட்ட இழுத்துட்டுப் போனேன். திரும்பி வர்றதுக்குள்ளாற உங்க கார் மோதிட்டுப் போயிடுத்து....''

என் ரத்தம் உறைந்தது.

'' இப்ப சொல்லுங்க. உங்களாலே என் நஷ்டத்தை ஈடு செய்ய முடியுமா ? வண்டி மேலே இடிச்ச வேகத்திலே, அது திரும்பிச் சரிவிலே இறங்கிடுச்சு..... என் குழந்தை என் குழந்தை........''

'' நான் வாயாலே என்ன சொன்னாலும் உன் நஷ்டத்தை ஈடு செய்ய முடியாதுப்பா... ஆண்டவன் என்னைப் பழி வாங்கிட்டான்.''

''ஏனுங்க, ஆண்டவனைக் குத்தம் சொல்றீங்க....? உங்க பெண்டாட்டி குழந்தையை அவன்தானே காப்பாத்தினான்?''

நான் ஊமையாகக் காரை நோக்கி நடந்தேன்.

"மற்ற பெண்மணிகள்
பொறாமைப்படும்படி
இருக்கவேண்டும் உங்கள்
கண்கள், வருத்தப்படும்படி அல்ல"
என்கிறார் எக்ஸ்போர்ட் ஹவுஸ்
நிர்வாகி அனிடா ராபின்ஸ்.



லியூர்

"என்கண்களுக்குக்
கவர்ச்சியூட்டுகிறது லியூர்.
வளையங்களையும் சுருக்கங்களையும்
குழைவுடன் போக்குகிறது லியூர்
அவுட்டர் ஐ க்ரீம்"

எடுப்பார் கைப்பிள்ளை

இசையில் நயமில்லை என்றாலும் கதையில் பசை இருக்கிறது. வக்கீல் இந்திராவின் மகன் சின்ன வயசிலேயே ஒரு திருடன் கையில் சிக்கி, இருபது வயது வரையில் வளர்ந்து ஒரு பக்காத் திருடனாகிறான். பெண் வக்கீலின் மகனது தங்கச் சங்கிலியைப் பள்ளியில் திருடி விட்டான் என்று தவறாகக் குற்றம் சாட்டப்பட்ட திருடன் ராஜலிங்கத்தின் மகன் அதே ஏக்கத்தினாலும் வேதனையினாலும் துடிதுடித்து இறந்துவிடுகிறான். பிறகு தான் ராஜலிங்கத்தின் பழி வாங்கும் படலம் தொடங்குகிறது. வக்கீல் இந்திராவின் மகன் மோகன் கடைசிக் காட்சியில் தாயுடன் சேர்ந்து கொள்கிறான்.

வக்கீலாக வரும் பானுமதி மிக இயல்பாகத் தாய்ப் பாசத்தைக் கொட்டியும், சட்ட நுணுக்கங்களை அலசியும் அற்புதமாக நடித்திருக்கிறார்; ஜெய்சங்கர் கதாநாயகன் மோகன்; ரொம்பவும் விறுவிறுப்பாகவும், கறுகறுப்பாகவும் இயங்குகிறான் இத் திரைத் திருடன்.

ஆண் வேஷத்தில் ஒரு பெண் வருவது என்பது ஒரு நாடகம் மாதிரி இருந்தாலும் அதன் மூலம் திரைக் கதைக்குச் சுவைகூட்ட முடிகிறதே! குமாரி மஞ்சுளா ஒரு பையனாக இருந்த வரையில் வெற்றி மேல் வெற்றியாகப் பெற்று வந்தவர், பெண்ணாகத் தம்மை வெளிப்படுத்திக் கொண்டதுமே அவர் பாத்திரம் பூர்த்தி பெற்றுவிடுகிறது. பின்னே, மோகன் மேல் கொலைக் குற்றம் எப்படிச் சுமத்துவதாம்!

எம். ஆர். ஆர். வாசு வில்லனாக வந்து பழி வாங்கும் படலத்தில் தம் நடிப்பாற்றலை நன்கு வெளிப்படுத்துகிறார். மகன் அநியாயமாக வேதனைப்பட்டு இறந்தபோது ராஜலிங்கம் அடைந்த துயரத்தை வெளிப்படுத்திய வாசு ரசிகர்களை நெகிழ்த்தி விடுகிறார். ஸ்ரீகாந்த், இன்னொரு வில்லன்; கொலைக் குற்றத்துக்கும், 'டிஷ்யூம் டிஷ்யூம்' சண்டைகளுக்கும் பொறுப்பேற்று ஜமாய்க்கிறார்.

பானுமதிக்கு அடுத்தபடியாக, நடிப்பில் சிறந்து நிற்பவர், 'வெண்ணிற ஆடை' நிர்மலா. வக்கீல் இந்திராவின் அண்ணன் மகளாக வருகிறார்; நீதிமன்றத்தில் நிகரற்ற லாயருடன் மோதி வெற்றி காண்கிறார்.





மனோரமா, கருணாநிதி ராஜன், ஐ. எஸ். ஆர். ஆகியவர்கள் மூலம் நல்ல 'தமாஷ்' கிடைத்திருக்கிறது. புது 'பீரோ' விலாசம் தவறி வக்கீல் மனோரமா வீட்டுக்கு வரப்போக அப்பப்பா! எத்தனை சிரிப்பு வெடிகள்!

தூயவனின் கதை, வசனம் நன்றாயிருக்கின்றன. கே. விஜயனின் டைரக்ஷன் குழப்பம் இல்லாமல் கதையைக் கொண்டு செல்கிறது. இது வண்ணப் படம். வெங்கட்டின் ஒளிப்பதிவு பாராட்டுக்குரியது.

தமிழ்ப் படங்கள் எல்லாமே படம் 'எடுப்பார் கைப்பிள்ளை'யாகத் தவிக்கிற நிலைமையில் இந்தப் படத்துக்கு மட்டும் இந்தப் பெயர் ஏன்? படத்துக்கு ஒரு பெயர் வேண்டுமே?

காந்தன்

கடைசிப் பக்கம் கண்ணதாசன்



பகுத்தறிவு

பகுத்தறிவு உலகத்தை மாற்றியமைத்தது.

காற்றில்லாத வீடுகளுக்குள்ளே மனிதர்கள் அடைபட்டுக் கிடந்த காலம் போய், சொகுசான ஒரு காலத்தை, பகுத்தறிவு கொண்டு வந்தது.

உட்கார்ந்த இடத்திலேயே காற்று; ஒலி, ஒளி, படம்; செயற்கை மழை போன்ற ஷவர் பாத்; சிங்கார வாகனங்கள்; செவ்வாய் கிரகத்துக்கே பயணம் செய்யக் கூடிய வசதிகள். எல்லாவற்றையும் விஞ்ஞானம் நமக்குக் கொடுத்ததற்குக் காரணம் பகுத்தறிவுதான்.

அணுவைப் பகுத்து அதன் அளப்பரிய சக்தியைக் கண்டு பிடித்த அறிவு, உண்மையிலேயே அற்புதமான அறிவுதான்.

அந்தப் பகுத்தறிவு, 'அதிலே இது உண்டு; இதிலே அது உண்டு' என்று காட்டிற்றே தவிர எதையும் 'இல்லை இல்லை' என்று சொல்ல முயன்றதில்லை.

ஆனால் நமது ஊர்ப் பகுத்தறிவோ, ''அது இல்லை; இது இல்லை; அது பொய்; இது பொய்'' என்று சொல்ல முனைந்ததே தவிர, எதிலே எது அடக்கம் என்று கண்டுகொள்ளக் கூடியதாக இல்லை.

ஒரு பகுத்தறிவாளர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

> ''ஐயா, 'சிவாய நமவென்று சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒருநாளும் இல்லை' என்கிறார்களே, ''சிவாய நம:'' என்று சொல்லிக் கொண்டே ஆயிரம் வால்ட் மின்சாரத்தைத் தொட்டால் அபாயம் ஏற்படாதா?''

என்று கேட்கிறார்.

நல்லது. அபாயம் ஏற்படத்தான் செய்யும். கொஞ்சம் அறிவோடு ஆராய்ந்தால் விஷயம் விளங்கும்.

அந்தப் பாடலைப் பாடிய அடியவர், 'சிவாய நமவென்று மின்சாரம் தொடுவார்க்கு அபாயம் ஒரு நாளுமில்லை' என்று சொல்லவில்லை. 'சிந்தித்திருப்போர்க்கு' என்றுதான் சொன்னார்.

அவர் சிந்தனையைச் சொன்னாரே தவிரச் செயலைச் சொல்லவில்லை.

கடிதம் எழுதியவர் மீது குற்றமில்லை; எல்லாம் நம் ஊர்ப் பகுத்தறிவு படுத்தும் பாடு!

நம் ஊர்ப் பகுத்தறிவு ஓர் அழகான பெண்ணைக் கண்டால் அவளது அழகையோ, பண்பையோ ரசிப்பதில்லை; அவளுடம்பில் எத்தனை வீசை கறி எத்தனை வீசை எலும்பு என்று ஆராயும்!

''மனத்தைப் பகுத்தறியலாம்; உடம்பைப் பகுத்தறியலாமா?'' என்றுகூட யோசிப்பதில்லை!

இந்து மதத் தத்துவங்கள் எடுத்த வேகத்தில் பிடித்து வைத்த பொம்மைகளல்ல; பகுத்துப் பகுத்து அறிந்த பின்பே உருவாக்கப்பட்டவை.

ஒன்பது ஓட்டைகள் இருந்தும் உடம்புக்குள்ளே ஒரு காற்று எந்தச் சக்திக்குக் கட்டுப்பட்டு நீண்டகாலம் வெளியேறாமல் நிற்கிறது?

விஞ்ஞானிகளே யோசிக்கும் இடம் இது.

ஆனால், நம் ஊர் பகுத்தறிவு இதை யோசிக்காது. இது, ''இயற்கையாகவே நிற்கிறது'' என்று பதில் சொல்லும்!

எது அந்த இயற்கை?

மண்ணா? மரமா? செடியா? கொடியா?

இப்போது மேல்நாட்டு விஞ்ஞானிகள் உடம்பில் இருந்து வெளியேறும் உயிர், எவ்வளவு வேகத்தில் வான மண்டலத்துக்குப் பயணமாகிறது என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வெளியேறும் உயிரின் வேகம்தான் ஆராய்ச்சியில் இருக்கிறதே தவிர, அது வெளியேறாமல் இருக்கும் வழி அவனுக்கும் தோன்றவில்லை; அடுத்த தலைமுறைக்கும் தோன்றப் போவதில்லை.

மானிட சக்திக்கு மேற்பட்ட மூலத்தைப் புகழ் பெற்ற விஞ்ஞானிகளே மறுத்ததில்லை.

சந்திர மண்டலப் பயணிகள் சர்ச்சுக்குப் போய் வந்துதான் பயணமானார்கள்.

ஞானம் என்ற மூலத்திலிருந்துதான் 'விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம்' இரண்டுமே தோன்றின.

இரண்டுமே ஒரு மூலத்தை நம்புகின்றன.

ஒரு மூலமும் அறியாதவன்தான் எதையும் 'நிர்மூலம்' என்று கருதுவான்.

மூல வித்து ஒன்றின் ரகசியமான பரிணாம வளர்ச்சியைத்தான் விஞ்ஞானம் தேடிக் கண்டுபிடித்ததே தவிர, மூலத்தைக் காண முடியவில்லை.

அறிவு ஆழமாக ஆழமாக முடிவு தெய்வ நம்பிக்கையாகும்.

ஆழமில்லாத அறிவு ஆத்திரத்தில் பெற்ற குழந்தையே நாஸ்திகம்!

அறிந்தோ, அறியாமலோ சிலர் அதற்கு வைத்த பெயர் பகுத்தறிவு.

சுருக்கமாகச் சொல்வதானால், ஓர் அறிவும் தெளிவாக இல்லாதவன் தனக்குச் சூட்டிக் கொண்ட பெயரே 'பகுத்தறிவுவாதி' என்பது.

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran




"இரண்டாம் தரமான
பொருள்களை நான் எப்பொழுதும்
வாங்குவதே இல்லை.
40 சதவிகிதத்திற்கும் அதிகமான
மைதா கலந்த பானத்தை
நான் ஏற்பதேயில்லை.

விவாவையே தரும்படி நான்
கடைகளில் வற்புறுத்துகிறேன்.
ஏனென்றால்

விவா வில் நிறைந்த பாலும் நிறைந்த மால்ட்டும் உள்ளன

இதில் மாவோ, மைதா
அல்லது வேறு தானியக்
கலவைகளோ ஏதுமில்லை."



ASP.JIL 6C 75 | TAM

ஜகத்ஜித் இன்டஸ்ரீஸ் லிமிடெட்
இந்தியாவில் மால்டை
மிக அதிக அளவில் தயாரிப்போர்.

விவா
நீங்கள் தரும் பணத்துக்கு
அதிக நன்மைகள்
அளிக்கிறது.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)